வாரப்பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, SILVER SMITH STREET COLOMBO—12.

திறம் சலவைக்கு

மில்க் வைற் சோப்




மில்க் வைற் சோப் தொழிற்சாலை

யாழ்ப்பாணம்

புத்தகம் 14 திருவள்ளுவர் ஆண்டு 1990 ஐப்பசி திங்கள் 29-ம் நாள் (15—11—1959) ஞாயிற்றுக்கிழமை ஐ. அவ்வல் பிறை 13 இதழ் 24

# அகில இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்

## அஸ்தமனமாகின்றதா?

## பெயர்ப் பலகை மறைந்தது; தலைவர் ராஜினாமா; உள்ளுக்குள்ளே ஊழல்

## கிழக்கு மாகாணத்துக்கெனத் தனிச் சங்கம் அமைக்க முயற்சி

(சுதந்திரன் நிருபர்)

அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழர் ஆசிரியர் சங்கம் என்ற பெயரில் இயங்கி வரும் ஸ்தாபனம் மிக விரைவில் அஸ்தமனமாகிவிடுமோ என்ற எண்ணம் ஆசிரியர்களிடையே ஏற்பட்டு விட்டதாகத் தெரியவருகிறது. இப்படியான ஒரு நிலைமை வரப்பெற்றமைக்கு உள்ளுக்குள்ளே உருவான பதவி வேட்டையும் நிர்வாக ஊழல்களுமே காரணம் என்று சொல்லப்படுகிறது.

கொழும்பிலிருந்த அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தலைமைக் காரியாலயத்தின் பெயர்ப்பலகை கழற்றப்பட்டுவிட்டது. சங்க "பைல்" கட்டுகள் உயரப் பரணில் ஏற்றப்பட்டுவிட்டன என்று சொல்லப்படுகிறது. காரியாலய இடமும் மூன்று நான்கு பேர்களுக்குப் பிரித்து வாடகைக்குவிட ஒழுங்குகள் செய்யப்படுகின்றனவாம்.

### பண வருவாய் பூஜ்யம்!

இவ்வளவுக்கும் காரணம் காரியாலயத்தை நடத்த பண வருவாய் போதிய அளவு இல்லாமையே என்று சமாதானம் சொல்லப்படுகிறது.

அங்கத்தவர்கள் சந்தா செலுத்துவதைப் பெரும் அளவில் நிறுத்திக்கொண்டார்கள். சந்தா கல்வி இலாகாவினுலேயே கழிக்கப்பட்டு சங்கத்துக்கு அனுப்பப்பட்டு வந்தது. ஆனுல் பல ஆசிரியர்கள் அப்படித் தங்கள் சம்பளத்திலிருந்து கழிக்க வேண்டாம் என்று கல்வி இலாகாவுக்கு எழுத்தில் அறிவித்துவிட்டார்களாம்.

### தலைவர் ராஜினாமா

இப்படியான ஒரு நிலைமை உருவானதற்கு உள்ளுக்குள்ளே நிர்வாக ஊழல் மலிந்ததும், அங்கத்தவர்களிடையே பதவி வேட்டை ஆரம்பித்ததுமே காரணம் என்று ஒரு ஆசிரியர் கூறினுர். இதன் பயனுகப் பெருந்தொகையான ஆசிரியர்கள் சங்கத்தின் மீது நம்பிக்கை இழந்துவிட்டார்கள் என்று தெரிகிறது.

சங்கத் தலைவர் திரு பொ. சந்திரசேகரி தமது பதவியை ராஜினுமாச் செய்துவிட்டார். உபதலைவர்களில் ஒருவரான திரு ஆ. க. சுப்பிரமணியத்துக்கும் செயலாளர் திரு சு. தியாகராசாவுக்கும் இடையேயுள்ள பதவிப் போட்டிகள் முடிவுக்கு வந்ததாகத் தெரியவில்லை.

### மட்டக்களப்பில் தனிச் சங்கம்

இந்தச் சூழ்நிலையில் கிழக்கு மாகாணத்திலுள்ள அரசினர் தமிழர் ஆசிரியர்கள் தங்களுக்குள்ளே ஒரு தனிச் சங்கத்தை அமைக்க நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றார்கள் என்று தெரிகிறது. இதற்கான பூர்வாங்க வேலைகள் மட்டக்களப்பில் நடந்தேறிவிட்டனவென்றும் வெகு விரைவில் மட்டக்களப்பில் புதிய சங்கம் அங்குரார்ப்பணம் செய்யப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

### பிரிவினை உகந்ததல்ல

ஏற்கனவே தமிழ் பேசும் மக்களிடம் ஐக்கியமும் ஒற்றுமையும் குறைந்திருக்கும் வேளையில் தமிழர் ஆசிரியர்கள் யாழ்ப்பாணச் சங்கம், மட்டக்களப்பு சங்கம், கொழும்பு சங்கம் என்று இடவாரியாகவும், ஊர்வாரியாகவும் சங்கம் அமைத்துப் பிரிந்துகொண்டு போவது குறிப்பாக ஆசிரியர் சமூகத்தையும், பொதுவாக தமிழர் சமுதாயத்தையும் பலவீனப்

(9-ம் பக்கம் பார்க்க)

# யாழ் தொழில் நுட்பக் கல்லூரியில் தமிழ்

## இளந் தமிழர் இயக்கத்துக்கு கல்லூரி அதிபர் இதமான பதில்

யாழ் தொழில் நுட்பக் கல்லூரியில் சிங்களம் புகுத்தப்பட விருந்ததைத் தடுத்து நிறுத்துவதற்கு முன்னணியில் நின்று உழைத்த இயக்கங்களில் இளந் தமிழர் இயக்கமும் ஒன்று என்பது தெரிந்ததே. அந்த இயக்கத்துக்கு கல்லூரி அதிபர் அனுப்பியுள்ள கடிதம் ஒன்றில் யாழ் தொழில் நுட்பக் கல்லூரியில் போதனு மொழிகளாகத் தமிழும் ஆங்கிலமுமே இருக்கும் என்று குறிப்பிட்டிருக்கிறுர்.

(9-ம் பக்கம் பார்க்க)

# உள்ளூராட்சி அமைச்சரின் யாழ்ப்பாண விஜயம்

## மாலை மரியாதையின்றி அடக்கமாக நடந்தது

யாழ்ப்பாணம்—

தமிழினத்தின் நீங்கா வெறுப்புக்கு இலக்கான எம். ஈ. பி. அரசாங்கத்தின் மந்திரிகளில் ஒருவரான திரு எம். பி. டபிள்யூ. மெதிவக்க தனது பரிவாரங்களுடன் கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணத்துக்கு எழுந்தருளினுர். மாலை மரியாதைகள் பகிரங்க வரவேற்பு உபசாரங்கள் எதுவுமற்ற முறையில் வெறும் உத்தியோகதோரணையான ஒரு விஜயமாகவே அவரது வருகை அமைந்திருந்தது. ஆரவாரம் எதுவுமற்ற இந்த நிசப்தமான நிகழ்ச்சி அமைச்சருக்கு யாழ்ப்பாண மக்களின் வெறுப்பையும் உளக்குமுறலையும் பிரதிபலித்துக்காட்டக்கூடியதாக இருந்தது.

ஸ்தல ஸ்தாபன, வீடமைப்பு அமைச்சரான மெதிவக்க யாழ்ப்பாணம் வருகிறுரென்பது பொதுமக்களுக்கு முன்னுடியே தெரிந்திருந்தாலும் அவர் திங்கள் காலை 9 மணிக்கே யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தை வந்தடைவாரென பொறுப்புவாய்ந்த அதிகாரிகளால் கதை பரப்பப்பட்டிருந்தது.

ஆனுல் முன்னேற்பாட்டின்படி, அவர் வேடிக்கை பார்க்கக் காத்திருந்தவர்களையெல்லாம் ஏமாற்றிவிட்டு அதிகாலையில் இருள் சரியாக அகலுவதற்கு முன்னரே மெயில் வண்டிமூலம் வந்திறங்கினுர்.

### வெறுங் கையுடன் வரவேற்பு

யாராவது மாலை மரியாதை செய்கிறுர்களா என உளவறிய விரும்பியவர்கள் சிலர் முன்னேற்பாடாகவே அந்தச் சமயத்தில் அங்கு வந்துவிட்டார்கள். சம்பந்தப்பட்ட அரசாங்க இலாகாக்களின் அதிகாரிகளும் உதவி அரசாங்க அதிபர் திரு டி. மூர்த்தியும் மட்டுமே வர

(8-ம் பக்கம் பார்க்க)

இந்த சக்தி வாய்ந்த நிவாரணி மார்பு நோய்களை விரட்டுகிறது!

ரிச்லெட்ஸ் பெக்டோரல்

(Richelet's Pectoral)



ஒரு பிரசித்தி பெற்ற தயாரிப்பு. குறிப்பாக சுவாச சய நோய்களுக்கென்றே விசேஷமாகத் தயாரிக்கப்பட்டது. ஆகவே, தொய்வுக்கு இது ஒரு வரப்பிரசாதம்!

● மூச்சு விடுதல் தடைபடுவதால் வேதனை ஏற்படுவதுடன் நின்று விடாது. சில சந்தர்ப்பங்களில் அபாயத்தை ஏற்படுத்தக் கூடும்! எனவே இதை ஒழித்துக் கட்டுவதில் அலட்சியமாய்யிருத்தல் கூடாது.

● ரிச்லெட்ஸ் பெக்டோரல் துரிதமாகப் பரவி வேலை செய்யக் கூடிய ரஸச் சேர்க்கையும் சக்தியும் கொண்டது. ஆகவே ஒன்றிரண்டு வேளை மருந்து சாப்பிட்டதுமே சுவாசப்பை, மூச்சுக் குழல் இவைகளில் ஏற்படும் அடைப்பை நீக்கி, கபத்தை உடைத்து, மூச்சுத் திணறலைத் தகர்த்து, சுவாசப் போக்கு வரத்தைச் சமநிலைப்படுத்துகிறது. பிசின்—நுரை—போன்ற சளியை இளகச் செய்து காறி உமிழ்வதை இலகுவாக்குகிறது.

● இடைவிடாத இருமல், இளைப்பு, நெஞ்சு வலி, தொண்டை ரணம், மூச்சடைப்பு; தொண்டையிலேற்படும் கர்ர் புர்ர் என்ற சத்தம், தடிமல், காய்ச்சல், குளிர், பீனசம், கக்குவான், போன்ற சகல நோய்களையும் தணிப்பதுடன், படிப்படியாக நிரந்தரமான—நிச்சயமான—குணத்தையும் அளிக்கிறது




ரிச்லெட்ஸ் பெக்டோரல்

தொய்வினுல் துன்புற்ற பலர் ரிச்லெட்ஸ் பெக்டோரலின் புண்ணியத்தால் ஆச்சரியப்படத்தக்க விதத்தில் பூரண குணம் பெற்று வானளாவப் புகழ்கின்றனர்!

எங்கும் கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:

வெஸ்டன் ஏஜன்சீஸ்.,

63, பாங்ஷால்வீதி, கொழும்பு-11.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோடுகள் கொண்ட பழம் பெரும் சீன மொழி

## இலட்சியத்தைக் குறிப்பது படிப்போரைத் திணறடிப்பது

### அதை எளிதாக்கும் முயற்சி ஆரம்பம்-
### உச்சரிப்பின் வழி வந்ததாக்கத் தீர்மானம்

### மொழிச் சீர்திருத்தத்துக்கு நாடு எங்கிலும் வரவேற்பு

சீன மொழியின் வரிவடிவம் உலகிலேயே மிகவும் தொன்மை வாய்ந்தது. கி. மு. 13-ம் நூற்றுண்டைச் சேர்ந்த எலும்புகளிலும் ஆமை ஓடுகளிலும் சீன எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருப்பதை இதற்கு ஒரு அத்தாட்சியாகக் கூறலாம்.

சீனுவிலுள்ள பல்வேறு தேசிய இனத்தவர்களில் ஹன் மக்களே மிகப் பெரும்பாலானவர்களாவர். இவர்களின் தேசிய மொழியைத்தான் நாம் சீன மொழி என்று வழக்கமாக அழைத்து வருகிருேம். இம் மொழிதான் நாடு பூராவிலும் மிகவும் விரிவாகப் பரவியுள்ள மொழியாகும். தேசிய சிறுபான்மையினர்களைப் பொறுத்தமட்டில், அவர்களில் பெரும்பாலோர் தமக்கென தனி மொழிகளைக் கொண்டுள்ளனர்.

#### சீன எழுத்துக்களை எளிதாக்கும் முயற்சி

சீன எழுத்துக்கள் ஒரு இலட்சியத்தைக் குறிக்கும் வரி வடிவத்தில் எழுதப்படுகின்றன. ஒவ்வொரு எழுத்தும் ஒரு விசேஷ முறையில் வரையப்பட்ட பல கோடுகளைப் பெற்றிருக்கின்றது இதனுல் இவ்வெழுத்துக்களைப் படித்தறிவது கடினமாக உள்ளது; நடைமுறை வேலைகளுக்கும் அசௌகரியமாக உள்ளது. எனவே பல காலமாக சீன மக்கள் சீன மொழியான் வரிவடிவை எளியதாக்குவதற்கும் பலப்பல முயற்சிகளை மேற்கொண்டு வந்துள்ளனர். ஆனுல் விடுதலைக்குப்பின்பே, சீன மொழியின் வரிவடிவை சீர்திருத்துவது பற்றி ஆராய்வதற்காக மக்கள் சர்க்கார் ஒரு விசேஷக் கமிட்டியை அமைத்ததற்குப் பிறகே இத்துறையில் தீவிர முயற்சிகள் சாத்தியமாயின; நிபுணர்களும் பொது மக்களும் நீண்ட தயாரிப்புகளை மேற்கொண்டு பரிபூரணமாக விவாதித்து முடிந்த பிறகு, "சீன எழுத்துக்களை எளிதாக்குவதற்கான நகல் திட்டம்" ஒன்று தயாரிக்கப்பட்டு, 1956-ல் (ஜனவரி) அரசாங்கக் கவுன்சிலின் அங்கீகாரத்தைப் பெற்றது.

#### வேலை விவரம்

சீன எழுத்துக்களை எளிதாக்கல் என்றுல், (1) கோடுகளின் எண்ணிக்கையைக் குறைத்தல் (2) ஒரே ஒலியும் பொருளும் கொண்ட எழுத்துக்கள் ஒன்றுக்கு மேல் இருப்பதை அப்புறப்படுத்தல்—இவ்விரண்டும் அதில் அடங்கியதாகும். மேற்படித் திட்டம் மிகுந்த சிக்கல் வாய்ந்த 515 எழுத்துக்களையும் 54 "மூல வேர் அமைப்பு"களையும் எளிதாக்குவதற்கு வகை செய்கிறது. இதன்றி 1055 பன்மை எழுத்துக்கள்—ஒரே அர்த்தமுடைய பல்வேறு எழுத்துக்கள் — அப்புறப்படுத்தப்பட்டன. வரிவடிவை எளிதாக்கும் வேலை இன்னமும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

#### பொதுப் பேச்சு மொழி

பல திசை மொழிகளைக் கொண்டது சீன மொழி. வரிவடிவ மொழி எல்லா இடங்களுக்கும் பொதுவானதாக இருப்பினும், தலத்திற்குத் தலம் உச்சரிப்பு வேறுபடுவதால், ஒருவர் பேசுவதை வேற்று ஊரைச் சேர்ந்த மற்றொருவர் புரிந்து கொள்வது கடினமாக உள்ளது. எனவேதான், ஒரே தரமுடைய பேச்சு மொழி வேண்டும் என்று திட்டம் தோன்றியுள்ளது. இதன் பொருட்டு நடப்பிலுள்ள "பொதுப் பேச்சு மொழி"யான மண்டேரியனே சிறந்தது என்றும், இத்துடன் பீகிங்கின் உச்சரிப்பே தரமான உச்சரிப்பாகக் கருதப்பட வேண்டும் என்றும் 1955-ல் கூடிய மொழிச் சீர்திருத்த மாநாடு இறுதியாக முடிவு செய்தது. தறபொழுது இந்தப் "பொதுப் பேச்சு மொழி" தேசரீதியில் வெற்றிகரமாகப் பரப்பப்பட்டு வருகிறது.

#### அகர வரிசை ஆரம்பம்

இந்தப் "பொதுப் பேச்சு மொழி" பரப்பப்பட்டுவருவதானது, சீன வரிவடிவ மொழிக்கென உச்சரிப்பிற்கேற்ற வகையில் அமைந்த எழுத்துக்களை உருவாக்கும் வேலையின் முதல் படியாகவும் கொள்ளத்தக்கதாகும். சீன மொழியானவரிவடிவை சீர்திருத்துவதற்கான கமிட்டி 1952 லிருந்து இயங்கி வருகிறது. தேச மக்கள் யாவரும் யோசனைகளை அருளி உதவுமாறு கோரப்பட்டுள்ளனர் இதன் விளைவாக சீன மொழியின் அகர வரிசையை உச்சரிப்பின் வழி வந்ததாக அமைப் பொறுக்கச் செய்வதற்கான திட்டம் ஒன்று உருவாகி உள்ளது. 1958 பெப்ரவரியில் தேசிய மக்கள் காங்கிரஸ் இத்திட்டத்தை அங்கீகரித்தது. பீகிங் நகர உச்சரிப்பை அடிப்படையாகக் கொண்ட 26 லத்தீன் எழுத்துக்களைக் கொண்ட அகர வரிசை இப்பொழுது படிப்படியாக நாடு பூராவிலும் பிரபலப்படுத்தப்பட்டு வருகிறது.

#### இனி உச்சரிப்பு வழி வந்த மொழியாகும்

சீன மொழிச் சீர்திருத்தம் படிப்படியாக நிறைவேற்றப்படும். தற்காலிகமாக சீனச் சொற்களுக்குப் பக்கத்தில் —அவற்றின் உச்சரிப்பை, ஆரம்ப வகுப்பு மாணவர்கள் எளிதில் தெரிந்து கொள்ளும் பொருட்டு மட்டுமே—உச்சரிப்பு வழி வந்த எழுத்துக்கள் கையாளப்பட்டு வருகின்றன. இதற்குள்ளாக இந்தப் புதிய சீர்திருத்தம் எழுத்தறிவிப்பு இயக்கத்தைத் துரிதப்படுத்த பேருதவி புரிந்து வருகிறது. சீன வரிவடிவ மொழியை உச்சரிப்பு வழிவந்த மொழியாக மாற்றியமைக்கும் பணிக்கு அவசியமான ஆராய்ச்சிகளை மேற்கொண்டு நடத்துவதற்கும், இத்திட்டத்தை மொழியியலாளர்கள் பயன்படுத்த முடியும்.

#### பத்தவேனி மாதர் சங்கம்

பத்தவேனி மாதர் சங்கக் கூட்டம் திருமதி பாக்கியம் அமிர்தலிங்கம் தலைமையில் இரத்தினேஸ்வரி வித்தியா சாலையில் 30-10-59 அன்று நடைபெற்றது. கூட்டத்திற்கு விசேஷமாக வருகை தந்த. கிருஷிக இலாகாவைச் சேர்ந்த செல்வி பொ. ஆறுமுகம் பனம் பழ பானம் விளாம்பழ ஜாம் என்பனவற்றை மாதர்களுக்குச் செய்து காண்பித்தார். பின்னர் மாதர்கள் இளம் விவசாய கழகங்களில் சேர்வதின் அவசியம்பற்றியும், கோழி வளர்ப்பில் மாதர் ஊக்கம் காண்பிக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

பத்தவேனி மாதர் சங்கத்திற்கு ஒரு கட்டடம் வேணடுமெனவும், தையல் வகுப்பை தை மாதம் நிறுவ வேண்டுமெனவும் அதற்கு அரசாங்கத்தின் உதவியைப் பெற வேண்டுமென்றும், பொதுமக்களும் உதவி செய்ய முன்வர வேண்டுமென்றும் கிராம முன்னேற்றச் சங்கக் காரியதரிசி திரு ந. சிவபாதம் குறிப்பிட்டார்.

பத்து வருடங்களுக்கு மேலாக எதுவித முன்னேற்றமுமின்றியிருக்கும் அச்சுவேலி அரசினர் ஆஸ்பத்திரி அபிவிருத்தியும், பயிற்சி பெற்ற தாதியும் அவசிய தேவை என்றும் இவற்றை உடன் கவனித்து ஆவன செய்யுமாறு எமது சங்கம் ஏகமனதாகத் தீர்மானித்திருக்கின்றது என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அதனை சுகாதார மந்திரிக்கும் சுகாதார அதிபதிக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

## சீனத்துப் பட்டுக்கு உலகெங்கும் 'மார்க்கட்டு'

### வெங்காய சருகு ஜார்ஜட்டும் வேறு புதுப் புதுத் தினுசுகளும்

### உற்பத்தி வெகுவாகப் பெருகுகிறது

சீனுவில் பட்டுப் பூச்சி வளர்ப்புத் தொழில், பல தலைமுறைகளாக குடிசைத் தொழிலாக இருந்து வருகிறது. விவசாயிகள் தம்மிடமுள்ள பட்டுப் பூச்சிக் கூடுகளை நூற்புசாலைகளுக்கு அனுப்புகின்றனர். பிறகு இந்தப் பட்டு நூல்கள் ஹங்சௌ (செக்கியாங்), சுச்ஹங் (கியாங்சு), ஷாங்கை நான்சுங் (ஷெச்வான்) ஆண்டுங் (லியானிங்) முதலிய புகழ் வாய்ந்த பட்டு நூல் ஆலைக் கேந்திரங்களில் பலவகையான பட்டாடைகளாக நெய்யப்படுகின்றன.

#### வீழ்ச்சி

கோமிங்டாங் ஆட்சி காலத்தில் பட்டு நூல், பட்டாடை உற்பத்தி 1931-ம் ஆண்டின் உச்ச நிலையிலிருந்து செங்குத்தாகக் குறைந்து மிகவும் அபாயகரமான வீழ்ச்சியை அடைந்தது. 1949-ல் பட்டு நூல உற்பத்தி 1931-ம் வருட அளவில் சிறியதொரு பகுதியாகவே இருந்தது. அதற்குப் பிறகு பட்டுப் பூச்சிக் கூடுகளின் உற்பத்தி 20 சதவிகிதமும், பட்டாடை உற்பத்தி சுமார் 30 சத விகிதமும் உயர்ந்தன. பட்டு நூல் உற்பத்தி [illegible] அளவைவிட 3.5 மடங்கும், பட்டாடை உற்பத்தி 3.7 மடங்கும் அதிகரித்தன.

#### சிறந்த பாரம்பரியம்

சீனப் பட்டிற்குப் பெருமிதம் கொள்ளத்தக்க சிறந்ததோர் பாரம்பரியம் உண்டு. புராதன காலம் தொட்டு நாகரிக உலகம் முழுமையிலும் சீனப்பட்டு பிரசித்தமானதாக விளங்கி வந்துள்ளது. பட்டுப் பூச்சி வளர்ப்பும் பட்டு நூல் நெசவும் நெசவும் 4000 ஆண்டுகளுக்கு முன்பே சீனுவில் தோன்றின. கான்சுவிலிருந்து மேற்கு நோக்கிச் செல்லும் புகழ் வாய்ந்த "பட்டு வீதி" வழியாக மேலைய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்களில் சீனப்பட்டு நூலும் பட்டாடைகளுமே பிரதானமானவையாக இருந்தன. இந்தப் பொருள்களும், இவை சம்பந்தமான தொழில் திறமைகளும் கிழக்கே கொரியா, ஜப்பான் முதலிய நாடுகளுக்கும் கூட சென்றன. அந்தப் பண்டைய தொழில் நுணுக்கங்கள் இன்னமும் அழியாமல் காக்கப்பட்டுள்ளதுடன், அபிவிருத்தியும் செய்யப்பட்டுள்ளன.

#### உலகப் புகழ்வாய்ந்தவை

இன்று சீனப் பட்டாடைகள் சுத்தமான பட்டு நூலாலோ அல்லது பட்டும் ரேயனும் கலந்த நூலாலோ தயாரிக்கப்பட்டு வருகின்றன. செயற்கைப் பட்டாடைகளும் கூட தயாரிக்கப்படுகின்றன சாடினும், கிரேப்புப் ,வெங்காயசருகும் ப்ரொகேடும் ஜார்ஜெட்டும், வெல்வட்டும் போன்ற பல்வேறு பட்டுவகைகள் தயாரிக்கப்படுகின்றன. சீனுவின் கலப்புப் பட்டும், ரேயன் சித்திர சாட்டின்களும், கிழக்கு லகிற்கே உரிய வேலைப்பாடுகளுடன் கூடிய ருசெள ப்ரொகேடுகளும் உலகப் புகழ் வாய்ந்தவை.

#### வெங்காய சருகு ஜவுளி வகை

சுத்தமான பட்டு நூல் ஆடைகளில் சீனுவின வெங்காய சருகு ஜார்ஜெட் கிரேப்பிற்கும் மிருதுவான "ஷீர் கிரேப் தெ ஷைனுக்கும்", "கபே கிரேப்"பிற்கும் எப்பொழுதுமே பெரும் கிராக்கி இருந்து வருகிறது. இதேபோல் சுத்தமானபட்டு நூலாலான கண்ணைக்கவரும் டபேடாக்களும், வெல்வெட்டுகளும், ஜார்ஜெட் வெல்

(15-ம் பக்கம் பார்க்க)


வியாபாரத்திற் கழகு
விளம்பரம் செய்தல்

இந்தியாவின் உயர்ந்த ரக உற்பத்தி!
மங்கையர் மனதுக்குகந்தது

உஷா தையல் மெஷின்களே




● ஒருவரின் ஆயுள் காலம்முழுவதும் உழைக்கக் கூடிய வெகுமதி

● மாதத் தவணைக் கட்டணங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

● இலங்கை பூராகவும் விற்பனையாகிறது.

● உங்கள் உள்ளூர் விற்பனையாளர்களைக் கேளுங்கள்.

சோல் ஏஜண்டுகள்:
ரெய்முசன்ஸ் லிமிட்டெட்,
88 A, மெயின் வீதி, கொழும்பு-11
போன்: 4243, 5060

கல்கத்தாவிலுள்ள இந்தியன் என்ஜினியரிங் எக்ஸ்போர்ட் புரொமோஷன் கவுன்ஸிலால் நடாத்தப்படுவது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேட்டுப் பாருங்கள்



குயுக்தி

மு. சிவராம், கம்பளை.

கே: உண்மையைப் பச்சையாகச் சொல்லிவிடும் அரசியல் வாதியாராவது இலங்கையில் இருக்கிறார்களா?

ப: சேர் ஜோன் கொத்தலாவலை இருக்கிறாரே. அவர் எதையும் மறைப்பதில்லை. தஹநாயகா பிரதமரானதும் "அரசவைக் கோமாளி அரசனாகிவிட்ட அதிசயம் இது" என்றாராம். அது மட்டுமல்ல, பிரதமர் பண்டாரநாயகா சுடுபட்டு ஆஸ்பத்திரியில் இருக்கும்போது அங்கு சென்ற பிரமுகர்கள் அத்தனைபேரும் திருமதி பண்டாரநாயகாவிடம் "கவலைப்படாதீர்கள், உங்கள் கணவர் பிழைத்துக் கொள்வார்" என்று சம்பிரதாயப்படி ஆறுதல் மொழி கூறினார்களாம். ஆனால் சேர் ஜோன் மட்டும்"சிறிமாவோ, எதற்கும் தயாராய் இரு" என்று கூறினாராம். இவ்வளவுக்கும் திரு பண்டாரநாயகா சுடப்பட்டார் என்றதும் துடி துடித்துக்கொண்டு ஆஸ்பத்திரிக்கு ஓடிய முதல் பேர்வழி சேர் ஜோன்தான். அவர் உள்ளம் தூய்மையானது. பேச்சு நிர்வாணமானது!

ஃ

இ. தி. சம்பந்தன், அம்பாறை

கே: பெண் என்றால் பேயும் இரங்கும் என்கிறார்களே?

ப: அப்படியானால் அமைச்சர் விமலாமீது எந்தப் பேயும் இரக்கங் காட்டி அவரைப் பதவியில் விட்டு வைக்கவில்லையே, ஏன்?

ஃ

யோ. அமலதாஸ், செங்கலடி

கே: இவ்வுலகில் அடைய முடியாதது எது?

ப: வட்டிக் கடையில் அடைவு வைத்த நகை!

ஃ

எஸ். இராமச்சந்திரன், சுழிபுரம்

கே: 'கல்யாணப் பரிசு' படத்தின் முடிவு உங்களுக்குப் பிடித்திருக்கிறதா?

ப: நன்றாகப் பிடித்திருக்கிறது. கதையின் முடிவைக் கொண்டு துன்பியல் கதை என்றும், இன்பியல் கதை என்றும் கூறுவார்கள். கல்யாணப் பரிசு இரண்டும் சேர்ந்த ஒரு புதுமையான முடிவைக்கொண்டது. பாஸ்கர் வாழ்க்கை துன்பியல் முடிவையும் ரகு வாழ்க்கை இன்பியல் ஆரம்பத்தையும் தந்து நிற்கும் விசேஷத்தை அங்கு காண்கிறோம்.

ஃ

கே. நடராசா, யாழ்ப்பாணம்.

கே: ஸ்ரீ என்பதற்குத்'திரு' என்று எழுத வேண்டும் என்கிறார்களே இது சரியா?

ப: சரியோ பிழையோ எனக்குத் தெரியாது. ஸ்ரீதனம் என்பதற்குத் திரு(குதாளத்)தனம் என்று பொருள்பட்டால் நன்றாகத் தானிருக்கிறது.

ஃ

செ. பஞ்சாட்சரம், கிளிநொச்சி.

கே: இலங்கையில் சினிமாத்துறையிலீடுபட்ட முதல் இலங்கையர் யார்?

ப: சினிமாத்துறையென்றால் மூன்று முக்கிய பிரிவையுடையது. படம் காட்டும் துறை, படம் பிடிக்கும் துறை, படத்தில் நடிக்கும் துறை. படம் காட்டும் துறையிலீடுபட்டவர் சேர் சிற்றம்பலம் கார்டினர், படம் பிடிக்கும் துறையிலீடுபட்டவர் திரு எஸ். எம். நாயகம். இவர் மதுரையை அடுத்த திருப்பரங்குன்றத்தில் ஒரு ஸ்டூடியோவை அமைத்துப் படம் பிடித்து, பின்னர் ஸ்டூடியோ தீப்பிடித்து விட்டதால் இலங்கையில் வந்து ஸ்ரீ முருகன் நவகலா மூவிடோன் ஸ்டூடியோவை ஆரம்பித்திருக்கிறார். நடிப்புத் துறையிலீடுபட்டவர் செல்வி தவமணி தேவி. இரண்டு மூன்று படங்களோடு இவர் சினிமா வானிலிருந்து மறைந்துவிட்டார்.

ஃ

செல்வி கமலநாயகம், பதுளை.

கே: சந்திரபாபுவின் நடிப்பைப்பற்றி தங்கள் அபிப்பிராயமென்ன?

ப: ஒரு நிலையற்ற நடிகர் அவர். ஒரு கட்டத்தில் அற்புதமாக குண சித்திரம் பொலிய நடிப்பார். அடுத்த கட்டத்தில் குரங்குச் சேட்டைகள் புரிந்து எல்லாவற்றையும் மண்ணாக்குவார்.

ஃ

கே: என். எஸ். கிருஷ்ணனுக்குப் பிறகு சிறந்த நகைச்சுவை நடிகர் யார்?

ப: டி. எஸ். துரைராஜ் அவர் இடத்தைப் பிடிக்கலாம் என்று எதிர்பார்த்தார்கள்;ஏமாற்றம். வி.எஸ். பாண்டியன் வருவார் என்று ஜோஸியம் கூறினார்கள்: பிழைத்துவிட்டது. இப்போது ஓரளவுக்கு தங்கவேலைத்தான் சொல்ல வேண்டும். என். எஸ். கே. யின் ஹாஸ்யத்தில் வாய் சிரிக்கும், வயிறு வலிக்கும், மனம் களிக்கும் ஆனால் தலை சிந்திக்கும். அதனால் அறிவுச் சுடர் ஒளிரும். மற்றையோர் ஹாஸ்யத்தில் வாய் சிரிக்க மட்டுந்தான் இடமிருக்கிறது.

மிஸ்டர் குயுக்தியார்
C/o சுதந்திரன்.
த. பெ. 1183
கொழும்பு—12

ஃ

செல்வி கு. செல்வநாயகி, பருத்தித்துறை.

கே: தங்களால் சகிக்க முடியாதது எது?

ப: எனக்குத் தூக்கம் வருமுன்னர் என் பக்கத்தில் படுத்திருப்பவர் யாராவது குறட்டை விட்டால் அதை என்னால் சகிக்கவே முடியாது எழுந்து ஓடத்தான் தோன்றும்.

ஃ

பொ. சங்கரலிங்கம், கொழும்பு.

கே: கல்கண்டு ஆசிரியர் தமிழ்வாணன் தமக்கு இந்த உலகில் தெரியாத விஷயமே கிடையாது என்று கூறுகிறாரே இது உண்மையா,குயுக்தியாரே?

ப: உண்மை. ஒன்றைத் தவிர உலகில் அவருக்குத் தெரியாத விஷயமே இல்லை என்பதைக் குயுக்தியார் பகிரங்கமாக ஒப்புக்கொள்ளுகிறார். அவருக்குத் தெரியாத அந்த ஒன்று ஔவைக் கிழவி பாடிய ஒரு அடியாகும். அதாவது "கற்றது கை மண்ணளவு, கல்லாதது உலகளவு" என்பதுதான் அந்த அடி.

'இலங்கையின் புதிய பிரதமர் திரு தஹநாயகா எப்படி?' என்று ஒரு நேயர் அவரிடம் கேள்வி கேட்டிருந்தார். அதற்குத் தமிழ்வாணன் அளித்த பதில் பின் வருமாறு:

"இலங்கைப் பிரதமர் இலண்டனிலே படித்துப்பட்டம் பெற்றவர். இலங்கையிலே பல ஆண்டுகளாகப் பேராசிரியராக இருந்தவர். இங்கிலீஷ்காரர்களை எதிர்த்துப் போராடி சிறை சென்றவர். காலஞ்சென்ற பண்டாவுக்கு நிரம்பவும் வேண்டியவர். வகுப்பு வெறி இல்லாதவர்."

தமிழ்வாணனுக்குத் 'தெரியாதது ஒன்றுமில்லை!' என்பதற்கு இதைவிட வேறு என்ன சான்றுதேவை?

ஃ

கே. நல்லலிங்கம்,
[illegible]

[illegible] தமிழ்த் தலைவர்களிடையே அரசியல் சாத்திரம், அரசியலமைப்பு விதிகள், நன்கு அறிந்த தலைவர் யார்? திரு ஜி. ஜி.பொன்னம்பலமா, திரு வி. சுந்தரலிங்கமா, திரு எஸ். ஜே. வி. செல்வநாயகமா?

ப: நான் பதில் சொன்னால் நீங்கள் நிச்சயம் ஆச்சரியப்படுவீர்கள். மேற்கூறிய மூன்று தலைவர்களையும்மட்டுமல்ல, 'அரசியல்புலி'யென்று நம்பப்படும் டாக்டர் என். எம். பெரேராவையும் கூட அரசியல் தத்துவ வியாக்கியானத்தில் விழுங்கி ஏப்பம் விட்டு விடக் கூடிய ஒரு தமிழ்த் தலைவர் நம்மிடம் இருக்கிறார். தமிழ் மக்கள் பெருமைப்படக்கூடிய விஷயம் இது. சந்தர்ப்பவசத்தால் அவர் பெருமை வெளியில் நன்கு தெரிய முடியவில்லை. அவர்தான் டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன்.

ஃ

எம். எல். சந்திரா, கொழும்பு.

கே: தமிழ் நாட்டில் 'சுதந்திரன்' பத்திரிகையின் செலவாக்கு என்ன?

ப: பிரதமர் காமராஜ், நிதியமைச்சர் சுப்பிரமணியம், அறிஞர் அண்ணாத்துரை, நாவலர் நெடுஞ்செழியன், சிலம்புச் செல்வர் சிவஞானம், நாம் தமிழர் ஆதித்தனார், தோழர் ஜீவானந்தம் ஆகியோர் இலங்கையிலிருந்து வெளிவரும் ஏதாவது ஒரு பத்திரிகையைப் பக்கம் பக்கமாகப் படிக்கிறார்களென்றால் அது 'சுதந்திரன்' ஒன்றுதான். அப்படிப் படிப்பதற்கு காரணம் இரண்டு. ஈழத் தமிழ் மக்களின் எண்ணத்தைப் பிரதிபலிக்கும் ஒரேயொரு பத்திரிகையாக விளங்குவது சுதந்திரன் ஒன்றுதான் என்பது முதல் காரணம். சுதந்திரன் திட்டும் ஆணித்தரமான, துணிகரமான தலையங்கம் தவறவிட முடியாதது என்பது இரண்டாவது காரணம்.

ஃ

எஸ். சின்னத்தம்பி,சாவகச்சேரி.

கே: திரு வி. குமாரசாமியிடம் இல்லாதது திரு வி. என். நவரத்தினத்திடம் என்ன இருக்கிறது?

ப: ஏன், மூன்று இருக்கிறதே! முதலாவதாக பண்பு இருக்கிறது. இரண்டாவதாக தாடி இருக்கிறது. மூன்றாவதாக சங்கிலித் தொடர் சிகரட் குடி இருக்கிறது.

ஃ

எஸ். மனோகரி, மல்லாகம்.

கே:வாழ்வு என்றால்என்ன? அதன் கோட்பாடு யாது?

ப: வாழ்வு என்றால் பிறந்ததிலிருந்து மரணம் வருவதற்கு இடைப்பட்ட நிலை எனப்படும. சின்ன மீன் எல்லாம் பெரிய மீன்களுக்கு இரை. பெரிய மீன் எல்லாம் அதைவிடப் பெரிய மீனுக்கு இரை என்பதே வாழ்வின் கோட்பாடாகும்.

## சிறு புல்

"மஹாகவி"

கல்லடுக்கி மேலே கனத்த உருளைகளைச்
செல்ல விட்டுச் செல்லவிட்டுச் செப்பனிட்ட
நல்ல நெடு

வீதி; அதனில் வெகுண்டோடும் வண்டிகளில்
மோதி நடப்போர் முடிவெய்தும்
தீதகல

இட்ட நடைப் பாதை; இவை இரண்டின் ஓரங்கள்
முட்டுகின்ற கோட்டின் முடுக்கினிலே
பட்ட விழிக்

கின்ப விருந்தாய், இருளில் ஒளி மின்னல்
முன் பல்லைக் காட்டி முறுவலித்த
பின்போய்

ஒளியாதது போல், ஒருபுல் இருகைத்
தளிர் நீட்டி நின்றாள்; தலையில்
மிளிர்கின்ற

பூவொன்றைக் கூடப் புதிதாய்ப் புனைந்திருந்தாள்!
காவிக் குயில் வாயிற் காட்டிடையே
பாவொன்று

கேட்டதனை ஒக்கும் கிடுகிடுத்துக் கொண்டிருக்கும்
பாட்டை இடை அப் பசுமையே!
நாட்டம்

பிறவாகிச் செல்கின்ற பித்தர் உளத்தோ
டுறவாடித் தந்தாள் உவகை;
இறவாது

வேரிற் கிடந்து, வெடுக் கென்று மாரிவரப்
பூரிக்கக் கண்டால் புளகம் மெய்
ஊராதோ?

ஆழப் புதைத்த அறம்போல் முளைத் தெழுந்தாள்
வாழ! அவளுக் கென் வாழ்த்து!


## தையற்கலை

யாழ்ப்பாணப் பெண்மணிகளே!

நீங்கள் மிகவும் குறைந்த செலவில் தையற்கலைகளைக் கற்றுக் கொள்வதற்காக நாம் எமது ஸ்தாபனத்தில் மிகவும் திறமை வாய்ந்த ஆசிரியைகளை நியமித்திருக்கிறோம்.

தையல் மெஷினில் தைக்கக்கூடிய எல்லா விதமான நூதன சித்திர வேலைகளும், பெண்கள், சிறுவர், சிறுமியரின் சகல ஆடைகளையும் நவீன உயர்ந்த முறையில் வெட்டவும், தைக்கவும், சாரிகள், மேசைத் துணிகள் மற்றும் சகல பொருட்கட்கும் வர்ணந் தீட்டவும், சுவெட்டர், கால் மேஸ், தொப்பி முதலியவை கம்பளி நூலால் மெஷினில் பின்னவும், மற்றும் சகலவித தையல் கலைகளும் மிகவும் குறைந்த கட்டணத்துடன் கற்றுக் கொடுப்போம்.

கற்றுத் தேர்ச்சியடைந்தவர்கட்குத் தராதரப் பத்திரங்கள் வழங்கப்படும்.

மாதக் கட்டண விகிதம்

| | |
|---|---|
| (பூ) சித்திர வேலைகள் கற்க | 5-00 |
| ஆடைகள் வெட்டவும் தைக்கவும் கற்க | 15-00 |
| இவை இரண்டும் கற்க | 18-00 |

வேறு விபரங்கள் அறிய விரும்புவோர் கீழ்க்காணும் விலாசத்திற்கு மனுச் செய்க:-

ஆர். அரசரத்தினம் அன் கம்பெனி
43, ஸ்டான்லி றோட், யாழ்ப்பாணம்.

## அன்பர்களே

நீங்கள் எவ்வளவு நல்ல உணவுகள் சாப்பிட்டாலும் உடல் மெலிந்துகொண்டே போகிறதா? பசியின்மை பல் ஈறு கரைதல், கை கால் நோவு, சோம்பல், சிறுநீருடன் சக்தி போகுதல் என்பன போன்ற வியாதிகளால் கஷ்டப்படுகிறீர்களா? அப்படியானால் மூன்று விதமான சிகிச்சைகள் தேவை.

உள் சுத்தி, புறச் சுத்தி, இரண் சிகிச்சைகள் இச் சிகிச்சைகளுக்கு ஒரே வார்த்தையில் பதில்

ஸ்பேமடோன் கொம்பவுண்ட்
( Spermatone Compound )

ஒரு பிரபல ஜெர்மன் டாக்டரின் மருந்து சீட்டிலிருந்து தயார் செய்த ஒரு அற்புத சக்திவாய்ந்த மருந்தாகும்.

8 அவுன்ஸ் பாட்டில் மருந்தின் விலை ரூ. 3/25
வி. பி. பி. தனி.

விபரங்களுக்கும் வி. பி. பி. ஆடர்களுக்கும்,

டாக்டர்
'மோடர்ன் கிலினிக்'
(MODERN CLINIC)
255, காலி ரோட், கொழும்பு-4.
பம்பலப்பிட்டிய கன்வன்ட் எதிரில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய விமர்சனம் - அதற்கு இலங்கையில் இன்று இடமுண்டா?

## வசனம், கவிதை என இலக்கியம் இருவகை இரண்டுக்கும் முந்தியது நாடகம்

## வளரும் எழுத்தாளர் சங்கத்து இரண்டாவது கருத்தரங்கத்தில் பேச்சுக்கள்

“இலக்கிய பாரம்பரியம் ஒரு நாட்டிலே இருந்தாற்றான் அங்கே இலக்கிய விமர்சனத்துக்கு இடமுண்டு. இந்த நிலையில் இலங்கையில் இலக்கிய விமர்சனத்துக்கு இடமுண்டா என்பது பதில் காண வேண்டிய ஒரு வினாவாகும். இலக்கிய விமர்சனத் துறையில் நாம் இறங்குவதற்கு முன்னால் இலக்கிய பாரம்பரியத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். கடந்த சுமார் 50 ஆண்டுக் காலத்தில் இலக்கியப் படைப்புகள் இலங்கையில் முகிழ்த்திருக்குமானால் அவற்றையெல்லாம் தேடிப்பிடித்து நிரைப்படுத்திக்கொள்ள வேண்டியது நமது முதல் கடமை”— இவ்வாறு 'தினகரன்' ஆசிரியர் திரு க. கைலாசபதி கூறினர்.

வளரும் எழுத்தாளர் சங்கம் கடந்த ஞாயிறன்று கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் நடத்திய இரண்டாவது கருத்தரங்கத்தில் திரு கைலாசபதி 'இலங்கையில் இலக்கிய விமர்சனம்' என்ற பொருள் பற்றிப் பேசினர். கூட்டத்துக்கு சுதந்திரன் ஆசிரியர் திரு எஸ். டி. சிவநாயகம் தலைமை தாங்கினர்.

திரு கைலாசபதி தமது பேச்சில் மேலும் கூறியதாவது:-

### நக்கீரன் வாதம்

“தமிழ் இலக்கிய சம்வாதம்—இலக்கிய விமர்சனம் தோன்றியது நக்கீரன்காலத்தில் என்று சொல்லலாம். தமிழ் மன்னன் ஒருவன் தமது தேவியின் கூந்தலில் இருப்பது இயற்கை மணமா, அல்லது செயற்கை மணமா என்பதைப் புலவர் பெருமக்கள் தெரிவிக்க வேண்டுமென்று ஆசைப்பட்டான். ஏழைப் புலவன் ஒருவன், இன்னொருவர் எழுதிக் கொடுத்த பாட்டை மன்னன் சபையிலே கொணர்ந்து பாடிக்காட்டினன். நக்கீரன் எழுந்தான். பாட்டிலே பிழை கண்டான். சொற் குற்றம் இல்லை; பொருள் குற்றம் உண்டு என்று சுட்டிக்காட்டினன். கூந்தலிலே உள்ளது இயற்கை மணம் என்று பாடலில் சொல்லப்பட்டது தவறு என்று எடுத்துரைத்தான். மணம் செயற்கை மணந்தான் என்று வாதாடினன்

### இலக்கிய விமர்சனம் தோற்றம்

“பாட்டை எழுதித்தந்த புலவனிடம் சபையில் பாடி நாணிய புலவன் ஓடினன். விஷயத்தை விளக்கினன். எழுதியவன் வந்தான் சபைக்கு. காரசாரமான விவாதம் நடந்தது. ஈற்றில் பாட்டு எழுதியவரும் நக்கீரனோடு சபையில் வாதாடவந்தவரும் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் என்பது தெரியவந்ததோடு நக்கீரன் குற்றத்தைச் சுட்டிக் காட்டியதைக் காட்டியபடியே விட்டுவிட்டுப் பின்னர் ஏதேதோ எல்லாம் செய்ததாகச் சொல்லப்படுகிறது

இந்த நிகழ்ச்சிதான் தமிழில் இலக்கிய விமர்சனத்தின் தோற்றுவாயாக, தொடக்க சம்பவமாக நாம் அறியக்கிடக்கிறது.

### உரைகள்

“இதற்குப் பின்னர் பல நூல்களுக்கு பலரும் உரை எழுதியிருக்கிறார்கள். அவர்கள் ஏன் உரைகள் எழுதினர்கள்? ஒருகாலத்தில் ஒன்று எழுதப்படுகிறது என்றால் அந்தக் காலத்தவர்களுக்கு அது புரியக் கூடியதாகவே எழுதப்படுகிறது இது தான் வழக்கம் அப்படி இருக்க, விளங்கிக்கொள்ளக் கூடிய ஒன்றுக்கு ஏன் விளக்கம்? ஏன் உரை? அவை வெறும் உரைகளும் விளக்கங்களும் அல்ல அனைத்தும் விமர்சனங்கள் என்றே சொல்லத் தோன்றுகிறது.

### வளர்ச்சி ஸ்தம்பிதம்

“இடைக் காலத்தில் இலக்கிய விமர்சனக் கலை வளராமல் ஸ்தம்பித்துவிட்டது. இப்பொழுது அது வளர்க்கப்பட வேண்டும் என்று பலரும் விரும்புகிறார்கள். ஒரு நாடகத்தையோ, காவியத்தையோ, கதையையோ விமர்சனம் செய்வதானால் அது தோன்றிய சுமார் 50 வருட கால கட்டத்துள் எழுந்த அது போன்ற மற்ற நூல்களோடு அதை ஒப்பிட்டுப் பார்த்துத்தான் விமர்சனம் செய்ய வேண்டும். தனி ஒரு நூலை வைத்துக்கொண்டு விமர்சனம் செய்வது முடியாத காரியம். ஒருவேளை இதுதான் விமர்சனம் என்று சொல்லும்படியான ஒரு அளவு கோல் எங்கும் இல்லை. ஒரு நூலின் ஒரு சில அம்சங்களைப் பார்த்துவிட்டு நன்றாக இருக்கிறது. நன்றாக இல்லை என்று மட்டுந்தான் சொல்லலாமே தவிர அதை எடைபோட முடியாது.

### இலக்கிய பாரம்பரியம் தேவை

“அதனால் தான் இலக்கிய விமர்சனத்துக்கு ஒரு இலக்கிய பாரம்பரியமே தேவைப்படுகிறது. இலங்கையில் அப்படியான ஒரு பாரம்பரியம் இருப்பின், கடந்த ஐம்பது ஆண்டுகளுக்குள் இங்கு எழுந்த இலக்கியப் படைப்புகளைச் சேகரித்து வைத்துக்கொள்ள வேண்டும்.

அதைச் செய்யுமுன்னர் இலக்கிய விமர்சனம் செய்யப் புறப்படுவது சரியல்ல. அது முறையல்ல”—இவ்வாறு திரு கைலாசபதி கூறி முடித்தார்.

திரு எஸ். டி. சிவநாயகம் தமது தலைமை உரையில் இலக்கியத்தின் வெவ்வேறு பிரிவுகளையும் அவற்றின் இயல்புகளையும் விளக்கினர். அவர் பேசியதாவது:-

### கலையும் இலக்கியமும்

“கலையின் பாகுபிலே இலக்கியம் ஒரு பிரிவு. கலை கருத்தை அடிப்படையாகக் கொண்டு நுண் கலையாகவும் (Science) உணர்ச்சியை அடிப்படையாகக்கொண்டு கவின் கலையாகவும் (Art) பரிணமிக்கிறது. கவின்கலையிலிருந்து பிறப்பதுதான் இலக்கியம்.

“இலக்கியத்தில் இருவகைகள் உண்டு. ஒன்று கவிதை இலக்கியம் மற்றொன்று வசன இலக்கியம். கவிதை இலக்கியம் தனிப் பாடலாகவும் (Lyric), காவியமாகவும் (Epic), கவிதை நாடகமாகவும் (Poetic Play) இலைவிட்டிருக்கிறது. அதேபோல வசன இலக்கியமும் கட்டுரையாகவும் (Essay), சிறு கதையாகவும் (Short Story), நவீனமாகவும் (Novel) வசன நாடகமாகவும் (Drama) பல பிரிவுகளாகக் காணப்படுகிறது. இவை எல்லாவற்றையும் தொட்டு நிற்பது விமர்சனக் கலை (Literary Criticism or Review)

### நாடகமே முந்தியது

“முந்தியது எது? வசனமா? கவிதையா? நாடகமா? கவிதைதான் முதலில் தோன்றியது என்பதும், வசனம் அதற்கு அடுத்தபடியாக வந்தது என்பதும், நாடகம் தான் கடைசியாகத் தோன்றியது என்பதும் பலருடைய அபிப்பிராயமாகும். இது தப்பு முந்தியது நாடகம் அதை நயனம் அல்லது சைகை வழிவிளக்கம் (Pantomime) என்பார்கள். அடுத்து வந்தது வசனம். கைச் சைகையிலிருந்து இதனைக் கூட்டி இரு சொற்களைச் சேர்த்துப் பேச ஆரம்பித்ததும் வசனம் தோன்றிவிட்டது மூன்றாவதாக எழுந்ததுதான் கவிதை.

### கவிதை கால்கொண்ட காரணம்

“நாடகம் மனிதன் பேசாத காலத்திலேயே தோன்றிவிட்டது. பேசத் தொடங்கியபோது எழுந்தது வசனம். மொழிவளர்ந்து பேச்சிலும் கருத்திலும் செறிவு கண்ட பின்னர் பிறந்தது கவிதை இலக்கியம். கவிதை இலக்கியம் வசன இலக்கியத்தைவிட மிகப் பிரபலயம் அடைந்ததற்கும் வெகுவாகப் பேணப்பட்டதற்கும் ஆதரவு பெற்றதற்கும் சில முக்கிய காரணங்கள் உண்டு.

1. ஆரம்பகாலங்களில் அச்சுக் கலை இல்லாததால்

(5-ம் பக்கம் பார்க்க)


## “ஆஸ்த்மா”வைப் பற்றிய உண்மைகள்

ஆஸ்த்மா என்ற தொய்வு ஒரு பயங்கரமான வியாதியாகும். நரம்புத்தளர்ச்சி, காலநிலை, மூக்கடைப்பு மார்பில் ஏற்படும் சளி, வயிற்றுக்கோளாறுகள் ஆகிய பல காரணங்களால் ஆஸ்த்மா, என்ற தொய்வு ஏற்படுகிறது.

பல வருட ஆராய்ச்சிக்குப் பிறகு வியாதியைப் பூர்ணமாகக் குணமாக்கக் கூடிய “ஆஸ்த்மடிக்கா” என்ற அற்புதமான மருந்து கண்டுபிடிக்கப்பட்டது. இம் மருந்தின் பெருமையைப்பற்றி நூற்றுக்கணக்கான கடிதங்கள் தினசரிப் பத்திரிகைகளில் பிரசுரமாகியுள்ளதை நீங்கள் நன்கு அறிவீர்கள்-நன்றிக் கடிதங்கள் எழுதிய தமிழன்பர்கள் யாவருக்கும் நம் நன்றி—இன்னும் சில கடிதங்கள்.

(1) டாக்டர்,

எனக்கு பல வருடங்களாக இருந்த ஆஸ்த்மா, மாரடைப்பு, மார்சளி “ஆஸ்த்மடிக்கா” ஸ்பெஷல் பாவித்ததில் பூர்ண குணம்.

என் அன்பு நன்றி.

திரு. S. S. றமீது
C/o திரு. K. அப்துல் வஹாப்
(மட்டக்களப்பு பகுதிக்கு அரசாங்க கண்டிராக்டர்
11, பவுன்டரி ரோட் (BOUNDRY ROAD.) மட்டக்களப்பு)

(2) எனது மனைவிக்கு 15 வருட காலமாக இருந்த ஆஸ்த்மா, மாரடைப்பு, பூர்ணசுகம் நன் நன்றி.

திரு. இ. சரவணமுத்து
பிரதம அதிகாரி
வி. ஸி. ஆபீஸ் பங்கியல்ல (களுவாஞ்சிக்குடி)
களுவாஞ்சிக்குடி (EP)

ஒரு பாட்டில் ஆஸ்த்மடிக்காவில் எனக்கிருந்த ஆஸ்த்மா என்ற தொய்வு பூர்ணசுகம்.

வணக்கம்
திரு. அ. ஆனந்தலிங்கம்
ரூப்பியன் தோட்டம், கம்பர்மலை
வெண்வெட்டித்துறை

அன்பர்களே அநேக ஆண்டுகளின் ஆராய்ச்சியின் விளைவாக வந்த “ஆஸ்த்மடிக்கா” என்ற அற்புத மருந்தைப் பாவியுங்கள்.

3 பாட்டில்கள் தொடர்ச்சியாகப் பாவித்தால் வியாதி பூர்ண சுகமடையும் என்பது நம் உத்தரவாதம். ஆஸ்த்மா, மாரடைப்பு, மார்சளி, மார்பில் “கர்” என்ற சத்தம், இரவில் ஏற்படும் இருமல் இவைகளுக்கு

### “ஆஸ்த்மடிக்கா”
(ஒரு நவீன சஞ்சீவி)

ஆஸ்த்மடிக்கா ஸ்பெஷல்—ரூ. 15/-
மிக உபாதை தரக்கூடிய நாள் பட்ட ஆஸ்த்மாவுக்கு)
ஆஸ்த்மடிக்கா சாதாரணம் ரூ. 5/-
வி. பி. பி. சதம் -/85

விபரங்களுக்கு
டாக்டர்.

## சுக ஆதார வைத்தியசாலை
MODERN CLINIC
255, காலி ரோட், பம்பலப்பிட்டிய
கணவன்ட் எதிரில்
கொழும்பு-4.


## கடவுளுக்கு கடிதம்

தேவாதி தேவனே! மோட்ச உலகில் உபயோகமற்றிருக்கும் எல்லாக் கட்டடங்களையும் இடித்து விட்டு நரக உலகில் புதிய கட்டடங்கள் எழுப்பும் உங்கள் பிளான் என்னவாயிற்று? ஏருப்பிளானுகி விட்டதா?

நரக உலகம் என்றதும் தான் நினைவு வருகிறது. நமது முன்னுள் பிரதமர் படுகொலை சம்பந்தப்பட்ட துப்பறியும் கதையை நடுவே நிறுத்திவிட்டேன் என்று ஒரு பாட்டம் அழுதீர்களே! அதெல்லாம் பெரிய மனிதர்கள் சம்பந்தப்பட்ட பெரிய இடத்து விஷயம். அதுவுமல்லாமல் மந்திரிமாரெல்லாம் துப்பாக்கிகள் சகிதம் ரோந்து வருகிறார்கள். இந்நிலையில் அந்த வயிற்றெரிச்சல் பற்றிய எனது கருத்தைச் சொல்லி அழுதால் இக் கடிதம் ஒரு நகைச்சுவைக் கட்டுரையாக மாறிவிடும் என்ற பயம் வேறு.

அது போகட்டும். ஐயாவே ஐயா! தீபாவளிச் செலவை தெரியாத் தனமாகக் கூட்டிப் பார்க்கப்போய் அதனால் சன்னி கண்டு விழுந்து விட்டதால் இரண்டு வாரங்களாக உங்களுடன் தொடர்பு கொள்ள முடியவில்லை. அம்மாடி! தீபாவளிச் செலவென்ன சாதாரண உதையா?

உதைத்தாலும் போகேன் அடித்தாலும் போகேன் என்று படியாக ஒட்டிக் கொண்டிருக்குமாம் ஒருவினை அட்டை. அந்த அ(ர)ட்டைப் பேச்சு நமக்கு வேண்டாம். நம்பிக்கையில்லாத் தீர்மானம் விவாதத்தின் போது எதிர்க்கட்சியினர் ஆளும்கட்சியை துப்பு தும்பாக பிய்த்துப் போட்ட போதிலும் இன்னும் அரசாங்கமும் இயங்கி வருகிறது என்று நான் சொல்லி வைக்கிறேன். அட்டைப் பிடி எவ்வளவு அழுத்தமானது என்பதைக் கண்டு கொள்ள அரசாங்கத்தின் செயல் ஒன்றே போதுமென்று நினைக்கிறேன்.

எந்தப் போக்கு எப்படி இருந்தாலும் இனிமேல் தோதல்களுக்கு தபால் மூலம் வாக்களிக்கும் முறையைக் கொண்டு வரப்போகிறார்களாம். ஆமாம், சில கடிதங்கள் விலாசதாரரை வந்தடைய ஆண்டுகள் பல செல்வதாக பத்திரிகைகளிற் படித்தோமே, அந்த வழியில் இந்த வாக்குக் கடிதங்களும் உல்லாசப் பிரயாணங்களை மேற்கொண்டால் நமது அபேட்சகர்கள் நரை திரைக் கோலம் கொண்டு விடுவார்களே என்று யாரும் என்னைக் கேட்கவில்லை. எல்லாம் வல்ல மரைக்கார் மன்னர் காப்பாராக.

தயவு செய்து வித்தியாசமாக எண்ணி விடாதீர்கள் என்னைப் பற்றியும் ஒன்று சொல்லப் போகிறேன்.

நான் ஒரு கூட்டத்துக்குப் போனேன். நானும் பேச வேண்டும் என்று பிடித்துக் கொண்டார்கள். நான் பேசினேன். நான் பேசியதைக் கேட்டு பலர் கைதட்டினர்கள். நான் பேசியதை புத்தகமாக வெளியிட எழுதித் தர வேண்டும் என்று ஒரு பிரசுரகர்த்தா என்னைக் கேட்டுக் கொண்டார். நான் இந்தச் சந்தர்ப்பத்தை நழுவ விடலாமா? நான் மறுத்துப் பேச

(13-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை-இந்தியா போக்குவரத்து

## இந்திய அரசாங்கம் முதலில் போட்டது முட்டுக் கட்டை

## இலங்கை அரசாங்கம் 'நான் விட்டேனே பார்' என்று தன் பங்கைச் செய்தது

## பொதுவில் தமிழன் தவிக்கிருன்

—சென்னை நவம்பர் 11

இந்திய அரசாங்கம் (டில்லி அரசாங்கம்) தமிழைப் புறக்கணிக்கிறது என்ற குற்றச்சாட்டு எப்பொழுதும் இருந்து வருகிறது. "தமிழ் நாட்டு அபிவிருத்திக்கு மத்திய அரசாங்கம் போதிய பணம் ஒதுக்குவதில்லை. வடநாட்டுக்கு செய்வதில் நாலில் ஒரு பங்கு கூடத் தமிழ் நாட்டுக்கு செய்வதில்லை" என்பது தமிழ் நாட்டிலுள்ளவர்கள் டில்லி அரசு மீது சுமத்தும் குற்றச்சாட்டு.

### மொழி

மொழி விஷயத்திலும் தென்னுட்டு மொழிகளைக் காலக்கிரமத்தில் ஒழிக்கக் கூடியதான வழி வகைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருவதாகச் சொல்லப்படுகிறது இந்தித் திணிப்பு தமிழையும் பிற தென் மொழிகளையும் ஒழிக்கத்தான் என்று வெளிப்படையாக அபிப்பிராயம் தெரிவிக்கப் படுகிறது.

### அகதிகள் பிரச்னை

"அகதிகள்பிரச்னையைஎடுத்துக் கொண்டால் பிற நாடுகளில் இருந்து விட்டு தமிழ் நாட்டுக்கு திரும்புபவர்களுக்கு இங்கு வாழ வசதி இல்லையானால் அவர்களுக்கு உதவி அளிக்கும் பழக்கம் இல்லை. ஆனுல் வடநாட்டுப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் அகதிகளாக வந்தால் வாரி இறைக்கப்படுகிறது பணம் அவர்களுடைய புனர் வாழ்வுக்கு"—இந்தக் குற்றச்சாட்டும் சொல்லப் படுகிறது. தமிழ் நாட்டுப் பணத்தைச் சுரண்டி வட நாட்டுக்குச் செலவு செய்கிறதாம் மத்திய அரசு,

மொத்தத்தில் தென் நாட்டின் மீதும் குறிப்பாகத் தமிழர் மீதும் டில்லி அரசுக்கு அக்கறையே இல்லை என்று பெரும்பாலான வட்டாரங்களில் கருதப்படுகிறது. தி. மு. க போன்ற அரசியல் கட்சிகள் இக்கருத்தை மக்களிடம் சொல்லியும் வருகின்றன.

### கப்பல் போக்கு வரத்து

அவர்கள் கூற்றை மெய்ப்பிப்பது போல மத்திய அரசு சமீபத்தில் ஒரு நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறது. அதாவது முன்னர் தினமும் நடந்து வந்த தனுஷ்கோடி — தலைமன்னர் கப்பல் போக்கு வரத்தை வாரத்தில் மூன்றுமுறை மட்டும் நடைபெற வைத்திருக்கிறது. இதனுல தமிழ் நாட்டிலிருந்து இலங்கை செல்லும் தமிழர்களுக்கு பெரும் தொல்லை.

### குறிப்பு:

### ஐ. தொ. கா. அறிக்கை

ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் பொதுக் காரிய தரிசி திரு கே. ஜி.எஸ்.நாயர் இந்தப் போக்கு வரத்துச் சிக்கலால் இலங்கையிலிருந்து இந்தியா செல்ல விரும்பும் மக்களுக்கு ஏற்பட்டுள்ள தொல்லை பற்றி குறிப்பிட்டிருக்கிருர். அந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருப்பதாவது:—

### துயரம்

"இந்திய அரசாங்கம் தலைமன்னர் தனுஷ்கோடி கப்பல் போக்குவரத்தை கிழமைக்கு மூன்று நாட்களாக மாற்றிய பிறகு இலங்கை ரெயில்வேயும் இந்தியா செலவோருக்குப் பெரும் சங்கடங்களை உண்டுபண்ண ஆரம்பித்து விட்டதை அறிந்து பெரிதும் வருந்துகிறேன். நேரடியாகவும், கடிதமூலமாகவும் பலர் இதுபற்றி எனக்குப் புகார் செய்திருக்கின்றனர். நமது சகோதரர்களுக்கு இத்தகைய கஷ்டங்கள் மேலும் மேலும் பற்பல உருவங்க

தத்தினரே புகையிரதத்தில் பிரயாணஞ்செய்கின்றனர். அப்படியிருக்க குறிப்பிட்ட ஒருசில ரெயில்வே நிலையங்கள் மாத்திரம் மூன்று, நான்கு டிக்கட்டுகள் மட்டுமே கொடுத்து மக்களை எதற்காகத் தொல்லைகளுக்காளாக்க வேண்டுமென்று கேட்க விரும்புகின்றேன். இந்த மூன்று டிக்கட்டுகள் பெறுவதற்காகத் தொழிலாளர்கள் மூன்று நாட்களுக்கு முன்னே மூட்டை முடிச்சுக்களுடன் நிலையங்களில் வந்து காத்திருக்கவேண்டும். இப்படி எவ்வளவோ கஷ்டங்களை அனுபவித்தே அவர்கள் இந்த டிக்கட்டுகளைப் பெறவும் வேண்டியிருக்கிறது. இப்படியாகக் கோட்டா முறை வைத்திருப்பது, கள்ள மார்க்கட்டையும் லஞ்சத்தையும் மறை முகமாக வளர்க்கத்தான் உதவுமே தவிர குறைக்க உதவாது. ஆகையால் இக்கோட்டா முறை அவசியமில்லை என்பது [illegible] கருத்து.

### விமானப் பயணம்

"விமான மூலம் வருடத்திற்கு ஒரு தடவைதான் இந்தியா செல்ல வேண்டும் என்று சட்டம் போட்டு சங்கடத்தை உண்டுபண்ணி, ரெயில்வே மூலம் போவதில் இப்படிக் கோட்டா முறைத் தொல்லையையும் உண்டுபண்ணினுல் மக்கள் என்ன செய்வார்களென்பதை இலங்கை, இந்தியா அரசாங்கங்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். போகவேண்டியவர்கள் ஏற்கனவே இந்த நாட்டைவிட்டுப் போய்விட்டார்கள். தற்போது, தினமும் ஏறத்தாழ 150 பேர்களே சென்றுகொண்டிருக்கின்றனர் என்று தெரிகிறது.

"ஆகவே, நமது தொழில் மந்திரியும் மற்றும் இந்திய ஹைகமிஷனர் காரியாலயமும், இலங்கை புகையிரத இலாகாவும் இது விஷயமாக அரசாங்கத்தோடு கலந்து பேசி இதற்கொரு நல்ல முடிவு செய்ய முன்வரவேண்டுமாகக் கேட்டுக்கொள்கின்றேன்." — இவ்வாறு திரு நாயர் நமது அறிக்கையில் கூறியிருக்கிருர்.

## சென்னைக்கடிதம்

சுதந்திரன் சென்னை நிருபர் ஈழத்தரசன்

விலே வருவதைப் பார்க்கும் போது நம்மால் துயருருமலிருக்க முடியாது.

### கஷ்டங்கள்

"இலங்கை ரெயில்வே இலாகாவுக்கு நம்மைவிட இதுவிஷயத்தில் அதிகமாக புள்ளி விபரங்கள் கிடைத்திருக்குமென நம்புகிறேன். ஏற்கனவே இந்தியாவுக்குச் சென்றுவிட்டவர்கள் போக, இன்று மிகக் குறைந்த விகி

## அறிமுகப்படுத்துகிறோம்

நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் 'அறிமுகப் படுத்துகிறோம்' என்ற கலைப்பில் ஈழத்தில் அப்போதிருந்த எழுத்தாளர்கள், கவிஞர்கள், கலைஞர்கள் சுமார் 40 பேரைச் சுதந்திரன் அறிமுகப்படுத்தி வைத்தது நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம். இன்று பெரிய எழுத்தாளர்களாக, கவிஞர்களாக, கலைஞர்களாகத் திகழ்பவர்கள் புகழ் மணக்க வாழ்வது சுதந்திரன் பணிக்கு தக்க சான்று பகர்வதாகும்.

### தேவன் சொல்லியது

காலஞ்சென்ற தேவன் (ஆனந்தவிகடன்-தேவன்) தாமும் இப்படி அறிமுகப் படுத்தப்பட்டதனுலேயே ஆனந்தவிகடன் ஆசிரியர் குழுவில் இடம்பெற முடிந்தது என்று சுதந்திரன் ஆசிரியரோடு ஒருகால் மனம்விட்டுப் பேசியபோது தெரிவித்தார். தமிழ் நாடு சென்றிருந்த ஆசிரியரிடம் சுதந்திரனில் 'அறிமுகப்படுத்துகிறோம்' வரிசையில் பலரும் அறிமுகப்படுத்தப்பட்டு வந்ததைப் பார்த்து மகிழ்ந்த தேவன இன்னெரு விஷயத்தையும் குறிப்பிட்டார். ஆனந்தவிகடனிலும் அப்படி 'அறிமுகப் படுத்துகிறோம்' வரிசையைத் தாம் தொடங்கப்போவதாக அவர் கூறினர்.

### மாணவர் திட்டம்

'மாணவர் திட்டம்' விகடனில் வர ஏற்பாடாகியது. அதன் பயனுக மறைந்திருந்த தமிழகத்து மாணவ மணிகள் பலர்,மக்கள் மன்றத்துக்குத் தம் மணியான படைப்புகளை வழங்கியதும் பின்னாவிகடன் ஆசிரியா குழுவில் அவர்களுள் சிலர் சேர்த்துக் கொள்ளப்பட்டதும் காலஞ்சென்ற தேவன் தீட்டிய திட்டத்தின் பலனேயாகும்.

### ஈழத்தவர்கள் அறிமுகம்

ஈழத்தில் இப்போது புது எழுத்தாளர்கள், கவிஞர்கள், கலைஞர்கள் தோன்றியிருக்கிருர்கள். நாலாண்டுக்குள் கிடைத்த அந்த நல் மணிகளையெல்லாம் சுதந்திரன் அறிமுகஞ் செய்து வைப்பதில் பெருமை கொள்கிறது.

அறிமுகம் செய்து வைக்கப்படுபவர்கள் நமது வசதிப்படி முதலாவது இரண்டாவது என்று இப்படி எடுத்துக் கொள்ளப்படுகிருர்கள். அந்த வரிசையை அவர்களின் தரத்தைக் குறிப்பதாக எவரும் கொள்ளக் கூடாது என்பதைச் சொல்லி வைக்க விரும்புகிறேம்.

### சொந்தக் குறிப்புக்கள் அனுப்பலாம்

தாம் அறிமுகப்படுத்தப் பட வேண்டியவர்கள் என்று எண்ணும் எழுத்தாளர்கள், கவிஞர்கள், கலைஞர்கள் தங்களது புகைப்படப் பிரதி ஒன்றையும் தம்மைப்பற்றிய விவரங்களையும் சுதந்திரனுக்கு அனுப்பி வைக்கலாம்.

அறிமுகப்படுத்துகிறோம் வரிசை அடுத்த [illegible] ஆரம்பமாகிறது.

—ஆசிரியர்

## இலக்கிய விமர்சனம்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வாய்ச் சொல்லாக வழங்குவதற்கு கவிதைகள் தாம் உகந்ததாக இருந்தன. கேட்பவர்களுக்கும் கவிதைகளை இலகுவில் மனதில் பதிததுக்கொள்ள முடிந்தது.

2. அகராதிக்கு அப்பாற்பட்ட பொருளை கவிதைகளில் கையாள முடிந்தது. அதனுல உள்ளத்து உணர்ச்சிகளை வரம்பு கட்டிக் கட்டுப்பாடு செய்யாமல் உள்ளதை உள்ளபடி வெளியிட வாய்ப்பு கிடைத்தது.

3. எதுகைமோனை முதலிய ஒலி நயங்களாலும் சந்தம்போன்ற தாள நயத்தாலும் கவிதைகள் மக்கள் மனதைப் பெரிதும் ஈர்த்தன.

"மேற்படி காரணங்களால் கவிதை இலக்கியம் வசன இலக்கியத்தை விடப் பிரபல்யம் அடைய முடிந்தது. ஆயினும் நாடக இலக்கியம்தான் முந்தியது என்ற உண்மையை நாம் மறந்து விடக்கூடாது.

### மலரில் அமைப்பும் மணமும்

"இலக்கியம் மலரைப் போன்றது. மலரிலே முக்கியமாக(1) அமைப்பு(2)மணம்-இந்த இரண்டும் உண்டு. அமைப்பைச் சொற்களால் எடுத்துச் சொல்லலாம்; படம் போட்டும் காட்டலாம். ஆனுல் மணம் அப்படியல்ல. அதைச் சொற்களால் வர்ணிக்க முடியாது நல்ல மணம் என்றே கெட்ட மணம் என்றேதான் வெறுமனே சொல்லலாம். வேண்டுமானுல் உவமானத்தால் மட் [illegible] மணத்தைப் போன்றதென்று சொல்லி விளக்கலாம்.

"இன்னும், உணர்ச்சியைக் குறிப்பிடும் விளக்கலாம்:- அதாவது, அமைதியைத் தந்த மணம், மயக்கத்தைத் தந்த மணம் என்று குறிப்பிடலாம். இப்படி விளக்குவதை விளங்கிக்கொள்ள மற்றவர்கள் முன்னர் அப்படியான அனுபவத்தை பெற்றவர்களாக இருக்க வேண்டும். இல்லையேல் அவர்களுக்கு நாம் பெற்ற உணர்ச்சியைக் குறிப்பிட்டு விளக்குவது புரியாது.

### இலக்கியமும் மலரும்

"இலக்கியத்தை எடுத்துக் கொண்டால் அதனுடைய அமைப்பைச் சொல்லாம். ஆனுல் அனுபவத்தைச் சொல்லால் சொல்ல முடியாது. மலரிலிருந்து பக்குவமாகப் பிழிந்து எடுக்கப்படுவது அத்தர். அதற்குப் பல வழிகள் உண்டு. எனினும் மலரை உரலிலிட்டு இடித்துப் பிழிவது அத்தராகிவிடாது. மலர்ச் சாறுதான் கிடைக்கும். அனுபவமும் அனந்தம் உண்டு. அது ஆளுக்காள் மாறுபடும். பழைய ஞாபகத்தையும் சூழலையும் பொறுத்தது அது. அது போன்றதுதான் இலக்கிய அனுபவமும்.

"இலக்கியத்தில் முற்று முடிவான கருத்து இல்லை. பரம்பொருளை ஒத்தது அது. பலரும் பலவித கருத்துக்களைச் சொல்லுவார்கள். கருத்தரங்கம் அதற்கு வாய்ப்பு அளிக்கிறது. அதற்காக வளரும் எழுத்தாளர் சங்கத்தைப் பெரிதும் பாராட்ட வேண்டும்"-இவ்வாறு திரு சிவநாயகம் கூறி முடித்தார்.

### நாடகக் கலை

திரு கே. கே. இரத்தினசிங்கம் 'இலங்கையில் நாடகக் கலை' என்ற பொருள்பற்றிப் பேசி

(13 ம் பக்கம் பார்க்க)


தமிழ்
G. C. E.

101 வினு விடை

பரீட்சையில் சித்தி தலைவிதியைப் பொறுத்ததல்ல. வினுக்களுக்கு ஏற்ற விடை எழுதுவதில் தங்கியுள்ளது. பரீட்சைக்கு விடை எழுதும் முறைகளுடன் கூடிய புத்தகங்கள் உங்கட்கும் சித்தியைத் தர வல்லன.

* தமிழ்ப் பாஷை ரூ. 3-00
* எண் கணிதம் ரூ. 3-00
* குடியியல் ரூ. 3-00
* சரித்திரம் ரூ. 3-00
* பூமிசாஸ்திரம் ரூ. 3-00
* சுகாதாரம் ரூ. 3-00
* ஆங்கிலம் ரூ. 3-00
* பயிற்சிச் சிங்களம் ரூ. 3-00
* ரேமன் கத்தோலிக்கம் ரூ. 3-00
* இந்து சமயம் ரூ. 3-00
* இஸ்லாம் ரூ. 3-00

பரீட்சை
துணை நூல்கள்

கடந்தகால
வினு விடைகள்

பரீட்சை வினுக்களை அறிந்து விடைகளைப் படிப்பது சிறந்த பாடாயத்தமாகும். மாதிரி வினுவிடைகள் சித்திக்கு வழிகாட்டும்.

* தமிழ்ப் பாஷை ரூ 3-00
* எண் கணிதம் ரூ. 3-00
* குடியியல் ரூ 3-00
* சரித்திரம் ரூ 3-00
* பூமிசாஸ்திரம் ரூ 3-00
* சுகாதாரம் ரூ 300
* ஆங்கிலம் ரூ. 3-00
* பயிற்சிச் சிங்களம் ரூ. 3-00
* ரேமன் கத்தோலிக்கம் ரூ. 3-00
* இந்து சமயம் ரூ. 3-00
* இஸ்லாம் ரூ. 3-00

வி. பி. பி. கிடையாது
தபாற்செலவு 35 சதம்

விபரங்கட்கு:

அற்லஸ் ஹோல்,

723 மருதானைரேட் கொழும்பு


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தமிழியக்கம்

"தேசமெல்லாம் தமிழியக்கம் செழிக்கச் செய்வோம்"

தமிழியக்கத் தொண்டர்கள் அடிக்கடி எழுதி வலியுறுத்தி வரும் விடயங்கள் சிலவற்றை முதலிற் குறிப்பிட விரும்புகிறோம். "தமிழியக்கத்துக்கு இன்னும் அரசியற் கட்சிகளைச் சேர்ந்தோரும், தமிழறிஞர் பலரும், தமிழ்ப் பத்திரிகையாளரும், தமிழாசிரியர்களும் போதிய ஆதரவளிக்கவில்லை" என்பது தொண்டர்கள் பலருக்குக் கவலையளிக்கிறது. "தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் சிலர் இன்னும் தமிழிலே தமது பொதுக் கருமங்களை முற்ருகச் செய்யவில்லை என்றும் இவர்கள் இவ்வாறு தயங்கினுல் ஏனைய கட்சியினர் எவ்வாறு தமிழியக்கத்துக்கு ஆக்கம் நல்குவார்கள்" என்றும் பல தொண்டர்கள் வினவுகிருர்கள். இதனைத் தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினருக்கு அறிவித்தல் எமது கடன். உடனே ஆவன செய்தல் அவர்களின் கடனுகும்.

தமிழர்கள் நடத்தும் பொதுநிலையங்கள் பல தமிழிலே செய்யத்தக்க அலுவல்களை இன்னுஞ் செய்யாதிருக்கின்றன என்று அறிவித்த தொண்டர்கள் இவற்றிற் பலவற்றின் பெயரையும் எழுதி அனுப்பியுளர். இந்நிலையங்களை நடத்துபவர்களுக்கும் பொதுமக்களுக்கும் தமிழைப் போற்றுங்கள், தமிழிலே யாவற்றையுஞ் செய்யுங்கள் என்று மீண்டும் வேண்டுகோள் விடுக்கிறோம்.

## அரசாங்கத்தின் மொழிக் கொள்கை

தமிழ் எங்கள் தாய்மொழி தமிழுக்கிருந்த உரிமையை இலங்கை அரசாங்கம் பறித்துவிட்டது. தமிழை அழித்து ஒழித்துவிடக் கங்கணங்கட்டுகிறது. தமிழரைச் சிங்களத்திலே ஆளத் திட்டமிடுகிறது. "சிங்களம் வேண்டாமென்ருல் இப்போதைக்கு ஆங்கிலத்தைத் தருகிறேன். தமிழைத் தரமாட்டேன்" என்கிறது. அரசாங்கத்தின் அறிக்கைகளையும், படிவங்களையும் பாருங்கள்! அரசாங்கத்தின் செய்திமடலைப் (கசற்றை) பாருங்கள்! இந்த உண்மை நன்கு விளங்கும். "சிங்கள மக்களுக்கு எல்லாம் சிங்களத்தில், தமிழ் மக்களுக்குச் சில ஆங்கிலத்தில், தமிழில் ஒன்றுமில்லை" இதுதான் அரசாங்கத்தின் இன்றைய மொழிக் கொள்கை. "1961க்குப் பின் தமிழ் மக்களுக்கும் எல்லாஞ் சிங்களத்தில்" என்பதுதான் அரசாங்கத்தின் அடுத்த ஆண்டுக் கொள்கை.

## உலகறிந்த உண்மைகள்

இந்த அநீதியை எதிர்த்துப் போராட வேண்டியது தமிழரின் அரசியற் கட்சிகளுக்கு மட்டும் உரிய பணியன்று. பொதுமக்கள் எல்லாருக்கும் உரியது. மொழி ஓரினத்தின் பரம்பரைச் சொத்து. அம்மொழிக்குத் தாழ்வு வந்தால் அதனை நீக்க வேண்டியது அவ்வினத்தின் மூன்று காலத்தின் வாழ்வுக்குமாகச் செய்ய வேண்டிய பணி. "மொழியை அடிமைப்படுத்திஞல் இனத்தை இலகுவில் அடிமைப்படுத்தலாம். மொழியை அழித்தால் இனத்தை இலகுவில் அழிக்கலாம்" இவை உலகறிந்த உண்மைகள். "ஓரினத்தவர் அடிமைப்படும்பொழுது அவர்கள் தங்கள் தாய்மொழியைக் கண்ணுங்கருத்துமாகப் பாதுகாத்துக்கொள்ளும்வரையும் அவர்கள் தங்களுடைய சிறைச்சாலையின் திறப்பை தங்கள் கையில் வைத்திருப்பவர்களாவர்" என ஒரு பிரான்சிய அறிஞர் கூறியுளர்.

## அரசாங்கத்தை திகைக்க வைக்கலாம்

தமிழ் மொழி அடிமை மொழியாக்கப்படுவதை இல்லை, இல்லை, அழிக்கப்படுவதை எவ்வாறு தடுத்து நிறுத்தலாம்? இழந்த மொழி உரிமையை எவ்வாறு பெறலாம்? இரண்டு வழிகள் உள. ஒன்று ஒற்றுமையுடன் அரசியற்றுறையிற் போரிடல், மற்றையது பொதுமக்கள் யாவருஞ் சேர்ந்து கிளர்ந்தெழும்பித் தமிழிலே எல்லாக் கருமங்களையுஞ் செய்தல். பொதுமக்களிற் பலர் இன்னும் தமிழுக்கு நெருக்கடி உண்டாகியிருப்பதை நன்கு உணராமலும் அதனை நீக்குதற்கு வேண்டியன செய்யாமலும் இருப்பதாலேயே அவர்களை ஊக்குதற்காகத் தமிழியக்கத்தைத் தொடங்கினேம். தமிழியக்கத்துக்குப் பலர் அளிக்கும் ஆதரவு சொல்லளவிலே நின்றுவிடுகிறது. செயலாக உருவாதல் குறைவாக இருக்கிறது.

"தமிழ் மக்கள் யாவரும் அரசாங்கத்தோடு தொடர்புகளை 24 மணி நேரத்தில் தமிழிலே வைத்தால் இந்த அரசாங்கம் திகைப்படைந்துவிடும்" என்ரேரறிஞர் கூறிய தன் உண்மையைத் தமிழ்ப் பொதுமக்கள் நன்கு உணரல் வேண்டும். தமிழர் யாவரும் தமிழிலே அரசாங்கத்தோடு தொடர்பு வைத்தால் எல்லா அரசாங்கப் பகுதியிலும் தமிழ் உத்தியோகத்தர்களை நியமிக்க வேண்டிய நிலைமை உண்டாகும். தமிழ் உத்தியோகத்தர்களின் உதவியின்றி அரசாங்கத்தை நடத்த முடியாது என்பதை சிங்கள வெறியர்கள் உணருதற்கு வாய்ப்பு உண்டாகும். தமிழ உத்தியோகத்தர்களுக்குப் போதிய வேலையும் நன்மதிப்பும் உண்டாகும். தமிழ்ச் சுருக்கெழுத்தாளர்கள் தட்டெழுத்தாளர்களுக்கும் வேலை கிடைக்கும்.

## தன்மானம் காக்கும் தலையாய தொண்டு

மேலும், தமிழர் தமிழிலே அரசாங்கத்தோடு தொடர்பு வைப்பது சிரமமான காரியம் அன்று. பெற்ற தாயைப் போற்றுதல் போன்ற பெருஞ் சிறப்புடைய தொண்டு; தன்மானங்காக்கும் தலைசிறந்த தொண்டு. சிங்கள மக்கள் சிங்களத்தைப் போற்றும்பொழுது நாம் ஏன் நம்மொழியைப் போற்றுதற்குப் பின்னிற்றல் வேண்டும்? எனவேதான மீண்டும் தமிழ்ப் பொதுமக்களையும் தமிழ்ப் பெருமக்களையும் எல்லாவற்றையுந் தமிழிலே செய்யுங்கள் என்று வேண்டுகிறேரும்.

தமிழர் சிலர் சிறிதும் உணர்ச்சியின்றி மானமிழந்து வாழ்வதைக் கண்டு தொண்டர்கள் பலருடைய மனம் துடிக்கிறது. இந்தத் துடிப்பை அகற்றுமாறு இத்தமிழர்களைக் கேட்டுக்கொள்ளுகின்றேம்.

## உழைப்பு வேண்டும்

தமிழிலே எல்லாவற்றையும் செய்யுமாறு தாங்கள் கேட்டுஞ் செய்யாத நிலையங்களின் பெயர்களையும் தமிழ் மக்களின் பெயர்களையும் பத்திரிகையில் வெளியிட வேண்டும் என்று பல தொண்டர்கள் வற்புறுத்துகிருர்கள். [illegible] ரங்கப்படுத்தப்படும் என்று அஞ்சித் திருந்துவார்களா? என்பது சந்தேகமே. இவ்வச் சங்காரணமாக அவர்கள் தமிழிலே தங்கருமங்களைச் செய்யத் தொடங்கினுலும் பற்றுடன் செய்வார்கள் என்று நம்ப முடியாது. ஆகையால் இவர்களை எல்லாம் மீண்டும் மீண்டும் சந்தித்துப் பேசி இவர்களுக்கு தமிழிலே ஆர்வம் பிறக்கச் செய்தல்தான் நன்று இதற்குத் தமிழியக்கத் தொண்டர்கள் இடைவிடாது உழைத்தல் வேண்டும்.

## யார் சிறந்த தொண்டர்கள்?

தமிழியக்க வாரத்தை இந்த ஆண்டு முடிவதற்குள் நடத்த முயல்வோம் அதற்கிடையில் ஆயிரக்கணக்கான தொண்டர்கள் சேர வேண்டும். பிறர் இடித்து உரைப்பதைக் கேட்டுச் சேருகிறவர்களிலும், தமிழ்த் தாயைப் போற்றும் பணி என்றவுடன் தாமாகவே சேருகிறவர்களே சிறந்த தொண்டர்கள். தமிழியக்கத்திற்ருமாகச் சேருபவர்களின்தொகையிலிருந்தே இலங்கைத் தமிழரின் உண்மையான தமிழ் ஆர்வமும் தமிழ்ப் பணி செய்யும் மனப்பான்மையும் புலனுகும். தமிழ் விரைவில் இழந்த உரிமையைப் பெறுமா? தமிழர் சளைக்காமற் போராடும் உறுதியுடையவர்களா? இவற்றிற்கும் தமிழியக்கத்திற் சேர்வோர் தொகையும், அவர்தம் உணர்ச்சியின் உறைப்பும் விடையிறுக்கும்.

எனவே, இதனை வாசிக்கும் ஒவ்வொரு தமிழரையும் உடனே தமிழியக்கத் தொண்டராகச் சேருமாறு கேட்டுக்கொள்ளுகிறேரும். தமிழர் ஒவ்வொருவரும் தமிழியக்கத் தொண்டர் என்று கூறுவதிற் பெருமைகொள்ளல் வேண்டும். தமிழியக்கத் தொண்டராக எல்லோரும் எவ்வித வேறுபாடுமின்றிச் சேரலாம். "தமிழியக்கத் தொண்டர்" என்ருல் தமிழுக்குப் பணியாற்றி தன்மானங்காக்க விரும்பியவர், தமிழிலே தம்முடைய அலுவல்களைச் செய்ய உறுதி பூண்டவர், தமிழுக்கு முதன்மை கொடுக்க முனைந்தவர் என்பவற்றைக் குறிக்கும். இப்பெருஞ் செயல்களைச் செய்யத் தமிழியக்கத்திலே சேருங்கள் என்று கேட்டுக்கொள்ளுகிறேரும். தமிழுக்குத் தொண்டாற்றுவோம் என்போருக்கு, தமிழியக்கம் ஒரு வாய்ப்பளிக்கிறது. உங்கள் பெயர், தொழில், வயது, முகவரி, என்பனவற்றை எழுதிக் கையொப்பமிட்டு தமிழியக்கம் மே/பா. சுதந்திரன், த; பெ. 1183 கொழும்பு எனும் முகவரிக்கு அனுப்புங்கள்.

## தமிழியக்கத் தொண்டர்கள்

206 மர்சிலின் ஜெமெல் பர்ஞந்து, இராஜகதஞவை. 207 ஜோ. சிப்ரியான்குருஸ், இராஜகதஞவை. 208 மத்தியஸ் அல்வெற் லெம்பேட், இராஜகதஞவை. 209 பேதுரு இன்டனிஸ்லாவுஸ் பெர்ஞண்டோ, இராஜகதஞவை; 210 என் சிவநேசம், மாங்குளம். 211 அ. பஞ்சாட்சரம், வட்டக்கச்சி. 212 அ. கி. இ. அன்ரனி மாதகல். 213 க. தருமதுரை, சிலாபம். 214 க. குழந்தைவடிவேல், பூவரங்குளம். 215 ப. வேலாயுதன், நிலாவெளி.

216 க. பழனித்தம்பி, கஞவாஞ்சிக்குடி. 217 வேலாயுதம், வட்டகொடை 218 ந. டே. குணரெத்தினம், ஒவிலிகந்த. 219 க பாலசரசுவதி, கொக்குவில். 220 வை. புனிதவதி, கொக்குவில். 321 சு. பராசக்தி, கொக்குவில். 222 செ. பூமணி கொக்குவில். 223 நா. தேவராசன், அரியாலை. 224 வெ. முத்துக்குமார், யாழ்ப்பாணம். 225 வ. தலையசிங்கம், யாழ்ப்பாணம்.

226 கரிகாலன், யாழ்ப்பாணம். 227 செ. தேவபாலசிங்கம், யாழ்ப்பாணம். 228 அ. சகாதேவன் துரை, கிரியல்ல 229 க. சுதர்சன், கொழும்பு-13. 230 செ. அச்சுதம்பிள்ளை, மிருசுவில். 231 வே. கந்தையா, மிருசுவில். 232 வி அருளானந்தம், மிருசுவில். 233 வே. விஞசித்தம்பி, மிருசுவில். 234 சி. கனகரத்தினம், மிருசுவில். 235 சி. தில்லையம்பலம், மிருசுவில்.

236 கு. விஞயகமூர்த்தி, மிருசுவில் 237 ம. செல்லமுத்து மிருசுவில். 238 க. கமலாட்சி, மிருசுவில். 239 பொ. செல்வரத்தினம், மிருசுவில். 240 நா. ஆறுமுகம், நுவரெலியா.

## அல்வாய் வடக்கு சன சமூக நிலையம்

அல்வாய் வடக்கு சன சமூக நிலையத்தின் விளையாட்டுப் போட்டி சேர, சோழ, பாண்டியன் இல்லங்களுக்கிடையே உன்னதமான முறையில் 31-10-59 தீபாவளியன்று நடைபெற்றது. கட்டைவேலிப் பகுதி சுகாதாரப் பரிசோதகர் திரு என். சுப்பிரமணியம் நிலையத்தின் கொடியை ஏற்றி, முத்தமிழ் மன்றத்திற்கும், வாலிபர்களுக்கும் தமது ஆசியையும் நன்றியையும் தெரிவித்துக்கொண்டார்.

முதலாவது இடத்தைப் பெற்ற சோழன் இல்லத்திற்கு செல்வன் சி. தங்கதுரையால் வழங்கப்பட்ட கோப்பாய் கோமான் திரு கு. வன்னியசிங்கம் ஞாபகார்த்த வெள்ளிக் கிண்ணமும் இரண்டாது இடத்தைப் பெற்ற சேரன் இல்லத்திற்கு மயிலம்மை ஞாபகார்த்த வெள்ளிக் கிண்ணமும் பரிசாக வழங்கப்பட்டன.

## மாணவர் சேர்வு-படிவம்

1. கல்லூரியின் பெயர்..........................................

2; தமிழ் மன்றத்தின் பெயர்..........................................

3. மாணவர் முழுப் பெயர்..........................................

4. வகுப்பு..........................வயது..........................

சொந்த ஊர்..........................................

நான் என்னுடைய கருமங்கள் யாவற்றையும் தமிழிலேயே செய்வேன் எனவும் என்னுடைய ஆசிரியரையும் சுற்றத்தாரையும் நண்பர்களையும் தமிழிலேயே அவர்களுடைய கருமங்களைச் செய்யுமாறு தூண்டுவேன் எனவும் உறுதிகூறுகிறேன். என்னைத் தமிழியக்கத் தொண்டராகச் சேர்க்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

.............................. தமிழ் மன்றச் செயலாளர் கையொப்பம்

.............................. மாணவர் கையொப்பம்


வழுக்கை விழுகின்றதா.....?

அப்படியானுல் உடனே

"ஹெர்பிஞேல்"

உபயோகியுங்கள்.

இந்த அற்புத தயாரிப்பு

★ உதிர்ந்த மயிர்களை மீண்டும் வளரச் செய்கிறது.

★ மயிர் உதிர்வதைத் தடுக்கின்றது.

இந்த உன்னத தயாரிப்பு மூகலாயச் சக்கிரவர்த்தி ஷா ஃ ஆலம் அவர்களின் அரண்மனை வைதநியர்களது ஏட்டுச் சுவடியில் காணப்பட்ட விபரத்திற்கேற்ப தகுந்த மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்டதாகும்.

42 வகையான மூலிகைகள், வேர்கள, மலர்கள் இலைகள் மற்றும் பெருமதியான சாறுகள் கலக்கப்பட்டது. ஒவ்வொரு கலவைப் பொருளும் மனித கேசத்திற்கு நன்மை பயப்பதற்கென பரீட்சிக்கப்பட்டு நிருபணமானது. இந்த ஆச்சர்யமான கேச டானிக்கை தயாரிப்பதற்கு, மேற் கூறப்பட்டவைகள் அனைத்தும் சுத்தமான ஜேசம் எண்ணையில் விஞ்ஞான ரீதியாக கலக்கப்பட்டுள்ளன.

"ஹெர்பிஞேல்" ஆரோக்கியமான அடர்த்தியான பட்டுப் போன்ற கருமையான கேச வளர்ச்சிக்கு உறுதுணை புரிகின்றது. பலவீனமான மயிர்க் கால்களை வலிமையடையச் செய்கின்றது. இதன் காரணமாக மயிர் உதிர்வது தடுக்கப்படுவதோடு புதிதாக கேசம் வளர ஏதுவாகின்றது.

சோல் ஏஜண்டுகளும் விநியோகஸ்தர்களும்:-

சிர்ருல் கதீர் அன் கம்பெனி,

41, & 43 இரண்டாம் குறுக்குத் தெரு, கொழும்பு.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பாராளுமன்றத்தில் அமரர் கு. வன்னியசிங்கம்:

# பெயரிலேயே பாகுபாடும் ஓரவஞ்சனையும்!

## தேர்தல் நிதி தருக

வட மாகாணத்தில் இரண்டு உப தேர்தல்கள் நடைபெறவிருக்கின்றன என்பது எல்லோருக்கும் தெரியும். திரு. வன்னியசிங்கத்தின் மரணத்தால் காலியான கோப்பாய்த் தொகுதியிலும், திரு வி சுந்தரலிங்கத்தின் ராஜினாமாவினால் காலியான வவனியாத் தொகுதியிலும் அந்த உபதேர்தல்கள் நடக்கும்.

இந்த இரண்டு உப தேர்தல்களும் பொதுவாகத் தமிழர்களுக்கும் குறிப்பாகத் தமிழரசுக் கட்சிக்கும் விடப்பட்டிருக்கும் சவாலாகும். எங்கள் மக்களும் கட்சியும் தமிழுக்கும் தமிழருக்கும் பரிபூரண விசுவாசமாக இருந்து, தமிழர் நலனுக்காகப் போராடக் கூடிய தகுதி வாய்ந்த அபேட்சகர்களை உபதேர்தல்களுக்கு நிறுத்த முடியுமா என்பதுதான் அந்தச் சவால் ஆகும்.

குறிப்பாக வவனியா, நன்முக உழைக்கக் கூடிய சிறந்த ஒரு தொண்டரை—அந்தப் பிராந்தியத்தைத் தமிழர் பிரதேசத்தின் ஒருபகுதியாகப் பாதுகாத்துக் கட்டுக்கோப்பாக வைத்திருக்க அயராது போராடக் கூடிய ஒரு வீரரை, தெரிவு செய்தாக வேண்டும். தமிழ் பிரதேசத்தின் எல்லைப்புற அரணாக அமைந்திருப்பது வவனியா.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு விஷயத்தைச் சுட்டிக் காட்ட வேண்டும். அதாவது ஒருவர் அரசியல் வாதியாக இருப்பதானல் அவருக்கு கணிசமான அளவு ஓய்வும் சொந்த வருமானமும் வேண்டும். துரதிர்ஷ்ட வசமாக தமிழர்களுள் சொந்த வருமானம் உள்ளவர்களிடம் இலங்கையில் தமிழினம் அழிந்து போகாது பாதுகாக்கப்படல் வேண்டும் என்ற எண்ணம், அதற்கான உணர்வு போதிய அளவில் இல்லை. அதே நேரத்தில் தமிழினத்தின் நலனிலும் நல் வாழ்விலும் அக்கறை கொண்ட ஆண்கள்பெண்கள்—இரு பாலரிடமும் தேர்தலில் போட்டியிட்டு தம் இனத்துக்காகத் தமது முழு நேரத்தையும் செலவிட பணபலம் இல்லை. அதாவது வருமானம் கிடையாது.

இந் நிலையில், தமிழரசுக்கட்சி திறமையும் பொதுப் பணி நாட்டமும் கொண்ட ஒருவரையே வவனியாத் தொகுதித் தேர்தலுக்கு அபேட்சகராகத் தெரிந்தெடுக்க வேண்டும்; அத்தோடு அவருக்காகத் தேர்தல் பிரசாரம் செய்வதையும் பணம் செலவு செய்து உழைப்பதையும் கட்சியே பொறுப்பேற்க வேண்டி இருக்கிறது.

இதே போன்ற நிலைமைதான் கோப்பாய்த் தொகுதியிலும். நாம் அங்கு நிறுத்தும் அபேட்சகரான திருமதி கோமதி வன்னியசிங்கத்துக்கு ஆதரவு தருவது மட்டுமல்ல, அவருக்காக தேர்தல் வேலைகளைச் செய்து செலவினங்களைக் குறைக்கவும் அந்தத் தொகுதி மக்கள் ஆயத்தமாக இருக்கிறார்கள். அப்படி இருந்தும், ஒருசில ஆயிரம் ரூபாய்கள் அங்கே செலவு செய்துதான் தீர வேண்டும். தேர்தல் பிரசாரத்தின் போது அந்தச் செலவினம் தவிர்க்க முடியாததாகும்.

ஆகவே இலங்கைத் தமிழரசுக் கட்சி நிதி உதவியையும் வேறு உதவிகளையும் கோரி நிற்கிறது. கட்சி கடந்த காலத்தில் தமிழ்பேசும் மக்களுக்கு சேவை செய்திருக்கிறது; வரும் காலத்திலும் அது தொடர்ந்து செய்து வரும் எனவே கட்சியின் தேர்தல் நிதிக்கு தாராளமாகத்தந்து உதவுங்கள்.

—எஸ். ஜே. வி. செல்வநாயகம்

நிதி அனுப்பவேண்டிய முகவரி:
16, அல்பிரட் ஹவுஸ் கார்டின்ஸ்,
கொழும்பு—3.

## உத்தியோகத்தர் நியமனம்—ஒழுங்காக இல்லை—தமிழுக்கு துரோகம்

### மானிய ஒதுக்கலிலும் தில்லு முல்லுகள்

### அரசகரும மொழித் திணைக்களத்தின் அவல நிலை

அமரர் கு. வன்னியசிங்கம் பாராளுமன்றத்தில் நிகழ்த்திய கடைசிப் பேச்சின் ஆறுவது பகுதி 1-11-59 சுதந்திரனில் வெளியிடப்பட்டது. இன்று இங்கே அப்பேச்சின் ஏழாவது பகுதி தரப்படுகிறது.

அரசகரும மொழித் திணைக்களத்தில் நடத்தப்பட்டு வரும் தமிழ் ஒழிப்பு வேலைகளையும் தகடுதத்தங்களையும் தமது பேச்சில் இப் பகுதியில் அமரர் கு. வன்னியசிங்கம் அருமையாக அம்பலப்படுத்தியிருக்கிறர்.

அரசகரும மொழித் திணைக்களத்தில் இப்பொழுது பதிற் கொமிஷனர்மார் இருவர் உளர். ஒருவர் தன் மொழிப்பகுதிக்கும் மற்றவர் அரசாங்க மொழிப் பகுதிக்கும் பொறுப்பாக உளர். அரசாங்க மொழிப் பகுதிக்குப் பொறுப்பாக உள்ளவர் கலாநிதி என். டி. விசயசேகர என்பவர் ஆவர்.

இத்திணைக்களத்தின் மானியங்கள் இதுவரை இரண்டாக விருக்க இந்நிலை வருடம் அவை மூன்றாக, மானியம் இல. 1, 2, 3 எனப் பிரிக்கப்பட்டுள, மானியம் இல. 2 இதுவரை "கல்விப் பிரசுரங்கள்" எனக் குறிப்பிடப்பட்டு வந்தது. ஆனால் இப்பொழுது அது "அரசாங்க மொழிப் பிரசுரங்கள்" எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தேசிய மொழிப் பிரசுரங்கள் எனவோ தன் மொழிப் பிரசுரங்கள் எனவோ குறிப்பிடப்படாதிருப்பது கவனிக்கத்தக்கது. தமிழ்ப் பிரசுரங்கள் எவற்றையேனும் இனிமேல் வெளியிடுவதில்லையென்பதா பிரதமரினதும் அவரின் கீழுள்ள இத்திணைக்களத்தினதும் நோக்கம்? அல்லது தமிழ்ப் பிரசுரங்கள் யாவும் 3-ம் இலக்க. மானியத்தின் கீழ்க்கொண்டு வரப்படுகின்றனவா?

#### மானியம் 2

2-ம் இலக்க மானியத்தின் கீழ் "அத்தியட்சர், பாடப் புத்தகப் பிரசுரமும் மொழி பெயர்ப்பு அலுவலகமும் (தமிழ்) என ஒரு பதவி குறிப்பிடப்பட்டிருக்கிறது; அத்துடன் "3 பதிப்பாசிரியர், தொழில் நுட்ப அகராதி" என்ற பதவிகளும் குறிப்பிடப்பட்டுள. இவ்வாசிரியர் மூவரில் ஒருவர் தமிழ் அகராதி தொகுக்கும் வேலையில் அமர்ந்திருக்கிறார் என நம்பகமாக நான் அறிகிறேன்; அப்படியாயின் தமிழும் இப்பொழுது ஒரு அரசாங்க மொழியின் நிலைக்கு உயர்த்தப்படுகிறதா அல்லது 2-ம் இலக்க மானியத்தின் கீழ் இவற்றைக் கொண்டுவந்தது பிழையா?

#### மானியம் 3

3-ம் இலக்க மானியத்தின் கீழ் உதவிக் கமிஷனர் ஒருவர் இருக்கிறர் எனக் காட்டிவிட்டு அவருடைய சம்பளம், தமிழை ஒழித்துக் கட்ட முனைந்து நிற்கும் விசேட கொமிஷனராலும் அதே மனப்பான்மையுள்ள பிரதிக் கொமிஷனராலும் நிருவாகிக்கப்படும் 1-ம் இலக்க மானியத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதன் காரணம் யாது? இவ்விருவரும் விரும்பியவாறு அந்த உதவிக் கொமிஷனரை வைத்து ஆட்டுவதற்கா?

#### மாற்றம் ஏன்?

தமிழ், சிங்கள பாடப் புத்தகங்களை ஆக்கும் பொறுப்புடைய பிரிவே 2-ம் இலக்க மானியத்தின் கீழ் உள்ளது. சென்ற ஆண்டு இப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதிக் கொமிஷனரின் கீழ் சிங்கள உதவிக் கொமிஷனர் ஒருவரும், தமிழ் உதவிக் கொமிஷனர் ஒருவரும் இருந்தனர். ஆனால் இவ்வாண்டு 2-ம் இலக்க மானியத்தின்கீழ் சிங்கள உதவிக் கொமிஷனர் ஒருவருடைய பதவி மாத்திரம் காட்டப்பட்டிருக்கிறது; தமிழ் உதவிக் கொமிஷனர் பதவி 3-ம் இலக்க மானியத்தின்கீழ்க் கொண்டுவரப்பட்டுள்ளது. 3-ம் இலக்க மானியமே புதிதாகச்சிருட்டிக்கப்பட்டுள்ள தமிழ்மொழி பெயர்ப்பு அலுவலகமாகும். இதுவரை தமிழ்ப் பாடப் புத்தகங்களின் ஆக்கத்தை மேற்பார்வை செய்து வந்த தமிழ் உதவிக் கொமிஷனரை 3-ம் மானியத்திற்கு மாற்றிவிட்டால் அவர் பார்த்து வந்த கடமையை இனியார் பார்ப்பது? அல்லது அவரே இரண்டு பிரிவையும் மேற்பார்வை செய்யப் போகிருரா?

#### அர்த்தமற்றது

இத்தகைய அர்த்தமற்ற மாற்றங்கள் ஏன் செய்யப்பட்டிருக்கின்றனவென்பது விளங்கவில்லை, இதுவரை வெளிவந்த தமிழ்ப் பாடப் புத்தகங்களின் தொகை, சிங்களப் புத்தகங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, மிகக் குறைவாகவே காணப்படுகிறது. இந்த நிலைமையிருக்கும்போது தமிழ் உதவிக் கொமிஷனரை அப் பிரிவிலிருந்து மாற்றுவதோ அவருக்கு வேறு பொறுப்புக்களையும் கொடுப்பதோ புத்தியாகாது.

(10-ம் பக்கம் பார்க்க)

## திருக்கோயில்களில் தமிழில் நடக்கட்டும் வழிபாடு

### புலவர் குழு வற்புறுத்து

திருக்கோயில்களில் வழிபாடு தமிழில் நடைபெற வேண்டும் என்று வற்புறுத்தும் தீர்மானம் ஒன்றையும் தமிழ் வளர்ச்சிக்குரிய வேறு பல தீர்மானங்களையும் தமிழகப் புலவர் குழு நிறைவேற்றியுள்ளது.

தமிழகப் புலவர் குழுவின் மூன்றாம் கூட்டம் அண்மையில் மதுரை தமிழ்ச் சங்கத்தில் நாவலர் ச. சோமசுந்தரபாரதியார் தலைமையில் நடைபெற்றது. அப்போது நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுள் முக்கியமானவை வருமாறு:-

புகைவண்டி நிலையங்களிலும் நெடுஞ்சாலைகளிலும், நகராட்சி, மாவட்ட மன்றங்களிலும், உள்ள பெயர்ப் பலகைகளில் காணப் பெறும் பிழைபட்ட தமிழ்ச் சொற்களைத் திருத்திக் கொடுப்பது என்று இக் குழு முடிவு செய்கின்றது.

#### புலவர்கள் விழாக்கள்

ஆண்டுதோறும் தைத்திங்களில் தொல்காப்பியர் முதலிய புலவர் பெருமக்கள் விழாக்களைக் [illegible] படிப் பொது [illegible] ஊரி, பள்ளித் தலைவர்களையும் இக்குழு கேட்டுக்கொள்கிறது.

#### பாராட்டு

'ஸ்ரீ'க்கு மாற்றாகத் 'திரு'வைக் கையாள்வதென முடிவுசெய்துள்ள, சென்னை, மதுரை, காஞ்சி, சேலம் இவற்றிலுள்ள நகராட்சி மன்றங்களையும், பல ஊராட்சி மன்றங்களையும் இக்குழு பாராட்டுகின்றது.

#### மடங்களும் 'திரு'வும்

தமிழகம் முழுவதுமுள்ள எல்லா நகராட்சி, ஊராட்சி [illegible]

(15ம் பக்கம் பார்க்க)

★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா

கண்ணைக் கவரும் வண்ணங்களிலும்

கருத்தைக் கவரும் வடிவங்களிலும் சிறந்த பாவனையிலும் உறுதியான சாயத்திலும்

முன்னணி வகிக்கிறது

லதா

கேம்பிரிக்

சட்டை, ஜாக்கெட், கவுண், பாவாடை, கிமோனு முதலியவைகளுக்குச் சிறந்தது.

இலங்கை முழுவதிலுமுள்ள புடைவை வியாபாரிகளிடம் கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:

குண்டன்மால்ஸ்

26, கெய்ஸர் வீதி, கொழும்பு.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்

SUTANTIRAN

1959 நவம்பர் மாதம் 15-ந் தேதி

194 ஏ, தட்டாதெரு, கொழும்பு. போன்: 3411 த. பெ. 1183


## கசடைக் களைய வழி

சமீபகாலத்தில் நமது நாட்டில் நடைபெற்ற பல கலவரங்களுக்குப் பின்னணியில் சில குறுகிய நோக்கமுடைய அரசியல் பிக்குகள் ஏவல் பிசாசுகளாக நின்றார்கள் என்பது பகிரங்க இரகசியமாகும்.

தார்ச் சட்டி இயக்கம், தமிழர் கடை மறியல், 1958 வகுப்புக் கலவரம் ஆகிய சகலவற்றையும் ஒருசில இழிதகைமை வாய்ந்த பௌத்த பிக்குகள் மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் முன்னின்றே நடத்தினார்கள் என்பதும் யாவரும் அறிந்ததே.

இத்தகைய சுயநலமும், அரசியல் வியாபார வாஞ்சைகளுமுடைய சில பௌத்த பிக்குகளின் பெயர்கள் பிரதமர் திரு பண்டாரநாயகாவின் படுகொலையோடு நேரடியாக சம்பந்தப்படும் அளவிற்கு வந்துவிட்டனவென்றால் பௌத்த குருத்துவத்தின் நிலை இந்த நாட்டில் எவ்வளவு கேவல தசையடைந்துவிட்டது என்பது சொல்லாமலே விளங்கும்.

தினப் பத்திரிகைகளைப் புரட்டினால் பெண்கடத்தல், எறிகுண்டு தயாரித்தல், ஏமாற்றுதல், கள்ளக் கடன் முறி எழுதுதல், போலி நாணய நோட்டு அச்சிடல், பொய் வதந்திகளைப் பரப்புதல், குடித்தல், வெறித்தல், பலாத்காரம் செய்தல், படுகொலை செய்தல், கள்ள மார்க்கட் வியாபாரம் செய்தல், வகுப்பு வெறியினைக் கிளப்புதல், மொழிபேதத்தைத் தூண்டுதல்போன்ற பாதகச் செயல்களில் மஞ்சள் அங்கி அணிந்த மத குருக்கள் ஈடுபடுவதாக செய்திகள் வெளியாவதைக் கண்டு பொதுமக்கள் மனங்கலங்கி வருகிறார்கள். இந்தக் கசடைக் களைவதற்கு வழியென்ன என்று அவர்கள் ஏங்கி நிற்கிறார்கள்.

வெளுத்ததெல்லாம் பால் என்று நம்பிக்கிடக்கும் சிங்களக் கிராமிய மக்களை அறியாமையின் அதலபாதாளத்துக்கு இட்டுச் சென்று அவர்களைத் தவறான அரசியல் பாதையில் கவிழ்த்துவிடும் கைங்கரியத்தைச் செய்பவர்கள் "அரசியல் பிக்குகள்" தாம்.

இலங்கையில் பௌத்த சிங்கள மக்களோடு தொடர்பு கொண்டுள்ள நான்கு முக்கிய அரசியல் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, சமசமாஜக் கட்சி, கொம்யூனிஸ்டு கட்சி ஆகியவற்றில் ஒன்றைத் தவிர ஏனைய மூன்று கட்சிகளிலும் "அரசியல் பிக்குகள்" செயற்குழுவில் அங்கத்துவம் வகித்தே ஆதிக்கம் செலுத்துகிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. ஐக்கிய தேசியக் கட்சி ஒன்றில்தான் அரசியல் பிக்குகளின் வாலாட்டத்துக்கு இடமில்லை. இந்தப் பாதுகாப்பை ஏற்படுத்திய பெருமை சேர் ஜோன் கொத்தலாவலையைச் சார்ந்தது. அதற்காக நாம் ஐக்கிய தேசியக் கட்சியைப் பாராட்டுவது கூடத் தவறாகாது.

வேறு எந்த மதத்தைச் சேர்ந்த மத குருக்களும் ஒரு சில பௌத்த பிக்குகளைப்போன்று அரசியலிலும், வியாபாரத்திலும், படுபாதகச் செயல்களிலும் ஈடுபட்டுத் தாம் சார்ந்த மதத்துக்கும், இனத்துக்கும், மக்களுக்கும் அபகீர்த்தியையும், அவமானத்தையும் தேடித் தருவதாக இல்லை.

பௌத்த பிக்குகள் என்று நாம் குறிப்பிடும்போது மகா சங்கத்தைச் சார்ந்த எல்லா பௌத்த பிக்குகளும் கெட்டவர்கள் என்பதல்ல நமது கருத்து. புனிதமான மஞ்சள் ஆடையைத் தரித்த பௌத்த பிக்குகளில் எத்தனையோ அரிய கல்விமான்கள், பெரிய மெஞ்ஞானிகள், நேர்மையாளர்கள், நெறியாளர்கள், ஆத்ம வைத்தியர்கள், போதிசத்துவர் எனக் குறிப்பிடத்தகுந்தவர்கள் இருந்திருக்கிறார்கள்; இருந்து வருகிறார்கள்.

இத்தகைய மகான்களுக்கு ஈனம் விளைவிப்பதுபோல் ஒருசில புல்லுருவிகளும் புனித உடைக்குள் புகுந்துகொண்டுவிட்டன என்பதே கவலை தரும் நிலையாகும். புனித சங்கம் வாழ வேண்டுமானால், புத்த தர்மம் தழைக்க வேண்டுமானால் பிக்கு வேஷத்தில் நடமாடும் பசுத்தோல் போர்த்த புலிகளைப் பிரித்து அவைகளை அழித்தொழிக்க வேண்டியது அறத்தின் பேரால் செய்யப்பட வேண்டிய அருட்பணியென்பதில் யாருக்கும் ஆட்சேபனை இருக்க முடியாது.

இந்த அடிப்படையில் பௌத்த பிக்குகளின் ஒழுக்க நடைமுறைகள் சம்பந்தமாக பௌத்த சாஸனக் கமிஷன் வெளியிட்டுள்ள பல சிபார்சுகளை நாம் மனப்பூர்வமாக வரவேற்கிறோம்.

குறிப்பிடக்கூடிய சிபார்சுகள் மூன்று:

1. பௌத்த பிக்குகள் அரசியலில் ஈடுபடுவது தடுக்கப்பட வேண்டும்

2. பௌத்த பிக்குகள் வர்த்தகத்துறைகளில் இறங்குவது தவிர்க்கப்பட வேண்டும்

3; பௌத்த பிக்குகள் ஆலயச் சொத்துக்களை நிர்வகிப்பது அறவே நிறுத்தப்பட வேண்டும்

என்பனவாகும். இந்த சிபார்சுகள் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டால் நிச்சயமாக பௌத்தம் மாசு நீங்கித் துலங்கும் என்பதும், அரசியல் புனிதமுறும் என்பதும் நாட்டில் இன மொழி வெறியர்களும், குறுமதிச் செயல்களும் கணிசமான அளவு குறையும் என்பதும், வகுப்புக் கலவரங்களும், குழப்பங்களும் தவிர்க்கப்படும் என்பதும் சர்வ நிச்சயமாகும்.

# 'கலரி' மக்களுக்கு டாக்டர் காட்டும் கரண விளையாட்டு

# அதுதான் தனி மந்திரி மீது நம்பிக்கை இல்லாப் பிரேரணை

எதிர்க் கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேரா அடிக்கடி நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் கொண்டுவருவதாக ஆர்ப்பாட்டம் செய்வதையும், பிரதமர் திரு தஹநாயகா "ஆஹா, நம்பிக்கையில்லாத் தீர்மானமா கொண்டு வருகிறீர்கள்? வாருங்கள், வாருங்கள். பேஷாகக் கொண்டு வாருங்கள். நூற்றுக் கணக்கில், ஆயிரக்கணக்கில் எத்தனை வேண்டுமானாலும் கொண்டு வாருங்கள். நான் நன்றியுடையவனாயிருப்பேன். ஆனால் ஒன்று. விவாதத்துக்கு நீங்கள் கேட்கும் தேதியைத் தர முடியாது. வேண்டுமானால் சில தினங்கள் முன்னால் தருகிறேன்" என்று வாஞ்சையோடு சொல்வதையும் பார்த்தால் விளையாட்டாகவும் வேடிக்கையாகவும் தோன்றுகிறது.

### டாக்டர் விஷயம்

நாடு பொருளாதார மந்தத்தினாலும், வேலையில்லாத் திண்டாட்டத்தினாலும், வாழ்க்கைச் செலவு உயர்வினாலும் திணறித் திண்டாடிக்கொண்டிருக்கும் இந்த வேளையில் அரசாங்கத்தை நடத்துபவரும், அரசாங்கத்தை எதிர்த்து அதை நல்ல வழியில் நடக்கும்படி தூண்ட வேண்டியவரும் இப்படி "நம்பிக்கையில்லா" விளையாட்டில் அடிக்கடி இறங்குவதன் இரகசியம் தான் என்னவோ?

### புதிர்

அரசியல் தத்துவங்களைக் கரைத்துக்குடித்தவர் டாக்டர் என். எம். பெரேரா என்று சொல்லப்படுகிறது. அப்படிப்பட்டவர் கபினெட் முறையில் நடைபெறும் ஒரு அரசாங்கத்தில் ஒரு சில மந்திரிகளை மட்டும் பொறுக்கியெடுத்து அவர்கள்மீது நம்பிக்கையில்லை என்று பிரேரணை கொண்டு வருவது நமக்கு விளங்காத புதிராகவே இருக்கிறது.

கபினெட் மந்திரிசபை கூட்டுப் பொறுப்பை உடையது. ஆங்கிலத்தில் Collective Responsibility என்று சொல்லுவார்கள். எந்த ஒரு மந்திரிக்கும் தனித்துவம் கிடையாது. ஒரு மந்திரி தவறு செய்தால் அதற்கு எல்லா மந்திரிகளும் பொறுப்பாயிருக்க வேண்டும். முடிவில் பிரதமரே சகல உத்தரவாதங்களுக்கும் உரியவராயிருக்க வேண்டும். பிரதமரில் அரசாங்கம் தங்கியிருக்க வேண்டும்.

### கலரி மக்களுக்கு கரண விளையாட்டு

கூட்டுப் பொறுப்புள்ள ஒரு மந்திரி சபையில் ஒரு தனி மந்திரிமீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவது முறைகேடான செயல் என்பதும் அப்படி ஏதாவது கொண்டுவருவதானால் முழு அரசாங்கத்தின் மீதுந்தான் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வர வேண்டும் என்பதும் அரசியல் மேதையென்று தம்பட்டமடிக்கப்படும் டாக்டர் என். என். பெரேராவுக்குத் தெரியாதா?

[illegible] இப்படி நம்பிக்கையில்லாப் பிரேரணைகளை அடிக்கடி அடுக்குவதன் மர்மம் என்ன?

மர்மம் இதுதான்: அடுத்த பொதுத் தேர்தலில் கண்ணை வைத்துக்கொண்டு அவர் கலரி மக்களுக்கு கரணக் காட்சிகள் நடத்திக்காட்ட முற்படுகிறார். இதனால் யாருக்கும் பயனில்லையென்பதை எதிர்க் கட்சியிலுள்ள இதர கட்சிகள் அவருக்குச் சுட்டிக்காட்டத் தவறக் கூடாது.

### தஹநாயகா வரவேற்கும் அந்தரங்கம்

நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் அடிக்கடி வருவதை பிரதமர் தஹநாயகா வரவேற்கும் அந்தரங்கம் என்ன?

அரசாங்கக் கட்சிக்குள்ளே பிரதமர் தஹநாயகாவுக்குச் சகிக்க முடியாத நெருக்கடி. கட்டுக்கோப்பை இறுக்கமாக வைத்திருக்க முடியவில்லை. ஒரு கழுதை ஒரு புறம் இழுக்கிறது. ஒரு குதிரை ஒரு காலால் உதைக்கிறது. இந்த நிலையில் அடிக்கடி நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் வந்தால்– "இதோ வந்துவிட்டது நம்பிக்கையில்லாப் பூச்சாண்டி. எல்லோரும் கப் சிப் பென்று ஒருவர் முதுகோடு ஒருவர் ஒட்டிக்கொண்டு ஒன்றாயிருங்கள். இல்லையேல் லாயத்தைக் கலைத்துவிடுவேன். லகானை இழுத்துவிடுவேன்" என்று சவுக்கைச் சொடித்து பயங்காட்ட நம்பிக்கை இல்லாப் பிரேரணைகள் பயன்படுகின்றன அல்லவா?

# உள்ளூராட்சி அமைச்சரின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வெற்று வெறுங் கையுடன் வந்தனர்.

கைகுலுக்குகையுடனும் அறிமுகத்துடனும் வரவேற்புபசாரம் முடிந்தது; அமைச்சர் தன் சகாக்களுடன் மோட்டார் வண்டியிலேறி ரெஸ்ட் ஹவுசுக்குச் சென்று அங்கு பாதுகாப்பாக ஒரு அறையில் இருந்தார்.

### உளம் களித்த ஒருவர்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கிராமக் கமிட்டித் தலைவர்கள் மாநாட்டுக்குத் தலைமை தாங்கவே அவர் முக்கியமாக இங்கு வந்து சேர்ந்தார். மேறபடி கிராமக் கமிட்டித் தலைவர்கள் சங்கத்தின் தலைவரான புரக்டர் திரு சி அருளம்பலம் அமைச்சரை அழைப்பதில் அக்கறை காட்டியவர்களில் முக்கியமானவராவர். விமலாவை ஒருதடவையேனும் இங்கு கொண்டு வர முயன்றும் அவரது முயற்சி கைகூடவில்லை.

தமிழ்க் காங்கிரஸ் செயலாளரும் கோப்பாய்த் தொகுதியில் இருதடவை போட்டியிட்டு அமரர் வன்னியசிங்கத்திடம் புறமுதுகு காட்டியவருமான புரக்டர் அருளம்பலம் அமைச்சர் மெதிவக்கையின் வருகையால் உளப்பூரிப்படைந்திருந்தாரென்பதில் தவறில்லை.

### விருந்தில் பொன்மொழி

றெஸ்ட் ஹவுசில் திங்கள் மத்தியானம் கிராமச் சங்கத் தலைவர்கள் அளித்த விருந்தில் அருமையான பொன்மொழியொன்று திரு அருளம்பலத்தின் வாயிலிருந்து உதிர்ந்தது. இன்னும் 18 மாதங்களுக்காவது எம். ஈ. பி. அரசாங்கமேயிருக்க வேண்டுமெனவும் அதுவரை காலமும் திரு மெதிவக்கையே ஸ்தல ஸ்தாபன மந்திரியாக இருக்க வேண்டுமென்றும் அவர் திருவாய் மலர்ந்து வாழ்த்தியபோது அங்கிருந்த அநேக முகங்கள் சுண்டிப்போய்விட்டன. அமைச்சர் மட்டும் வில்லங்கமாகப் புன்னகையை வரவழைத்தார்.

### ஒருவர் நப்பாசை

விருந்தை அதிகம் சுவைத்த மற்றொரு வயோதிப கிராமச் சங்கத் தலைவர் அங்கிருந்த அரசாங்க அதிபர் திரு எம். ஸ்ரீகாந்தாவை சுட்டிக்காட்டி "அவர் ஒரு எம். பி.யானால்......" என்று சொல்லவே "ஆமாம் அவர் ஒரு தங்கமான மனிதர் தான்" என்று அமைச்சர் சான்றுப் பத்திரம் வழங்கினார்.

இந்த விருந்து காதும் காதும் வைத்தாற்போல நடந்தேறியது. செவ்வாய்க்கிழமை மற்றொரு விருந்தை இராசவால் முதலியார் சி. தியாகராசா சன சமூக நிலைய சமாஜத்தின் சார்பில் நடத்தினார்.

### மெய்ப்பாதுகாவலர்

அமைச்சருடன் வந்திருந்த மெய்ப்பாதுகாவலர் அவரை நிழல்போலத் தொடர்ந்துகொண்டேயிருந்தார். நகர மண்டபத்தில் கிராமக் கமிட்டித் தலைவர்கள் மாநாடு நடந்துகொண்டிருந்தபோது அந்தக் காவலாளி கனத்த தோல் பையொன்றுடன் வாசலில் குறுக்கும் நெடுக்குமாக நடந்துகொண்டிருந்தது வேடிக்கையாக இருந்தது. அந்தப் பையில்தான் ரிவால்வர் இருந்ததா?

மாநாடு முடிந்து பத்திரிகை நிருபர் ஒருவருடன் அமைச்சர் தனியாகப் பேசிக்கொண்டிருந்தபோது கூட மெய்ப்பாதுகாவலர் பின்னால் மௌனமாக நின்றார்.

### வரம் கிட்டவில்லை

அமைச்சர்களை அழைத்து அவரிடம் குறையிரந்து கேட்டால் வரந் தருவார்கள் என்ற நம்பிக்கை வெறும் தப்பெண்ணமேயென்பது அமைச்சர் மெதிவக்கையின் யாழ்ப்பாண விஜயத்தின்மூலம் தெளிவாகிவிட்டது. அவரிடம் கேட்ட கோரிக்கைகளுக்கெல்லாம் 'இல்லை, இயலாது' என்ற பல்லவியிலேயே பதில் கிடைத்தது.

அமைச்சரை எப்படியும் நேரில் கண்டு காரியத்தைச் சாதிப்பதென ஒற்றைக் காலில் தவங்கிடந்த கிராமக்கமிட்டித் தலைவர்கள் சங்கம் இதன் மூலம் நல்ல அனுபவத்தைத் தேடிக் கொண்டது.

### அபிவிருத்தி கண்டிக்குத்தான்

யாழ்ப்பாணத்திலுள்ள பிற்போக்கடைந்த கிராமங்களை அபிவிருத்தி செய்ய உதவுமாறு கோரப்பட்டபோது "இது கொள்கையளவில் வரவேற்கக்கூடியது தான். ஆனால்...கண்டிப் பகு,

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல், சொத்து, வியாபாரம்—இவை வேண்டாம் பிக்குகளுக்கு

## உதவி நன்கொடை பெறும் பாடசாலைகள் தேவையில்லை-ஒழிக்கப்படவேண்டும்

## சாசனக் கமிஷன் சிபார்சுகள்

பௌத்த பிக்குகள் அரசியலில் பங்குபற்றக் கூடாது என்றும் அவர்கள் வியாபாரத் தொடர்புகள் வைத்திருப்பது தடுக்கப்படவேண்டும் என்றும் பௌத்த தேவாலய நிலங்களின் நிர்வாகம் அவர்களின் கைகளிலிருந்து மீட்கப்பட வேண்டும் என்றும் சாசனக் கமிஷன் சிபார்சு செய்திருக்கிறது.

இவை தவிர இன்னும் சில சிபார்சுகளையும் சாசனக் கமிஷன் செய்திருக்கிறது. அவற்றுள் ஒன்று உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளை வைத்து நடத்தும் நடைமுறை ஒழிக்கப்படவேண்டும் என்பதும் அரசாங்கமே சகல பிள்ளைகளுக்கும் கல்வி அளிக்கும் பொறுப்பை ஏற்கவேண்டும் என்பதுமாகும்.

சாசன மண்டலம் ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் அதன் அனுமதி பெருமல் எந்த பிக்குவும் ஆசிரியத் தொழில் பார்க்கச் செல்லக்கூடாதென்றும் சாசனக் கமிஷன் சிபார்சு செய்திருக்கிறது. பிக்குகளுக்கு வேலை கொடுப்பதற்கும் சாசன மண்டலத்தின் அனுமதி பெற்ருகவேண்டும் என்றும் சாசனக் கமிஷனின் சிபார்சு ஒன்று கூறுகிறது.

பௌத்த கமிஷனின் அறிக்கையில் அடங்கிய சில சிபார்சுகளை அமுல் நடத்துவதற்கான வழி வகைகளை ஆராய்வதற்காகவும் பிக்குகள் சங்கத்தை திருத்தி அமைப்பதற்கான சிபார்சுகளைச் செய்வதற்காகவும் 1957 மார்ச் மாதத்தில் கவர்னர் ஜெனரால் சாசனக் கமிஷன் நியமிக்கப்பட்டது.

சாசனக் கமிஷன் செய்துள்ள சிபார்சுகள் அடங்கிய நீண்ட அறிக்கை அரசாங்க பிரசுரமாக வெளியிடப்பட்டுள்ளது.

## வவுனியா இடைத் தேர்தல்

வவுனியா இடைத் தேர்தலில் போட்டியிடும்படி டாக்டர் எஸ். ஏ. தர்மலிங்கத்தை தமிழரசுக் கட்சி கேட்டிருக்கிறது. இதற்கான தீர்மானத்தை கட்சியின் காரியக் கமிட்டி இவ்வாரம் யாழ்ப்பாணத்தில் நிறைவேற்றியது.

டாக்டர் தர்மலிங்கம் தாம் சிந்தித்து முடிவு கூறுவதற்கு சில தினங்கள் அவகாசம் தரும்படி கட்சியைக் கேட்டிருப்பதாகத் தெரிகிறது வவுனியா இடைத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் இம்மாதம் 26ந் தேதி தாக்கல் செய்யப்பட வேண்டும்.

தமிழரசுக் கட்சிக் காரியக் கமிட்டி செய்துள்ள இன்னெரு முடிவு கட்சி மாநாடு பற்றியதாகும். எதிர்வரும் டிசம்பர் மாதத்தில் நடத்த திட்டமிட்டிருந்த வருடாந்த மாநாட்டையும் கணகாட்சியையும் பின்போட்டிருக்கிறது. தற்போது அமுலில் இருக்கும் அவசரகால நிலைமை வாபஸ்பெறப்பட்டதும் அவற்றை நடத்துவது என்று காரியக் கமிட்டி தீர்மானித்திருக்கிறது.

## கோமதி வன்னியசிங்கம்

### நியமனப் பத்திரம் தாக்கலாயிற்று

கோப்பாய்த் தொகுதி இடைத் தேர்தலில் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிடும் திருவாட்டி வன்னியசிங்கத்தின் நியமனப் பத்திரம் கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணம் கச்சேரியில் தாக்கல் செய்யப்பட்டது.

#### வரிசை

தமிழரசுத் தந்தை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், கட்சித் தலைவர் திரு என். ஆர். இராஜவரோதயம், செனட்டர் ஜி. நல்லையா, மற்றும் தமிழரசுக் கட்சி எம். பி. களும் வேறு பல பிரமுகர்களும் திரளான பொதுமக்களும் திருவாட்டி வன்னியசிங்கத்தின் சுண்டிக்குளி வீட்டுக்கு சென்ருர்கள். அங்கிருந்து அவரை வரிசையோடு தமிழரசுக் கொடிகள் சகிதம், மிக்க உற்சாகத்தோடு கச்சேரிக்கு அழைத்து வந்தார்கள். கச்சேரியில் அவருடைய நியமனப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

#### சுப்பிரமணியம்

சுயேச்சையாளராகப் போட்டியிடப் போவதாக அறிவித்திருந்த திரு. எஸ். சிவசுப்பிரமணியமும் தமது நியமனப் பத்திரத்தைத் தாக்கல் செய்தார். இவருடன் ஒரு சிலர் கச்சேரிக்கு வந்திருந்தார்கள். அவர்களில் திருவாளர்கள் அருளம்பலமும் புரக்டர் கதிரவேலுவும் இருவராவர்.

திரு. அருளம்பலம் முன்னர் கோப்பாய்த் தொகுதியில் காலஞ் சென்ற திரு. வன்னியசிங்கத்துடன் போட்டியிட்டு தோல்வி கண்டவர் என்பதும் திரு. கதிரவேலு, திருவாளர் ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் தமிழ்க் காங்கிரஸில் முன்னுளில் காரியதரிசிப் பதவி வகித்தவர் என்பதும் குறிப்பிடத் தக்கனவாகும்.

#### நடராசா

நியமனப் பத்திரம் கச்சேரியில் தாக்கல் செய்த மூன்றும் ஆள் ஆசிரியர் திரு எஸ். பி. நடரயசா ஆவர். கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் கோப்பாய்த் தொகுதியில் போட்டியிடக் கிளம்பியிருக்கிருர். இவரோடு கச்சேரிக்கு வந்திருந்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் இல்லை.

## உள்ளூராட்சி அமைச்சரின்....

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

தியிலுள்ள சில கிராமங்களின் சீர்கேடு பற்றியே இப்போது சர்க்கார் கவனம் செலுத்தி அபிவிருத்தி செய்து வருகிறது" என்று மிக நிதானமாகக் கூறினுர்.

### குடி தண்ணீர் விவகாரம்

குடாநாட்டில் குடி தண்ணீர்ப் பஞ்சம் பல இடங்களில் தாண்டவமாடுகிறது, குழாய்த் தண்ணீர்த் திட்டத்தை அமுல் நடத்திஞல் என்ன என்று ஒரு கேள்வி எழுந்தது. "உங்களுக்கு மட்டுமா தண்ணீர்ப்பஞ்சம் அதிக மழை பெறும் இடமான இரத்தினபுரியில் கூடத் தண்ணீர்ப் பஞ்சம் இருக்கிறதே" யென்று அமைச்சர் கூறிச் சமாளித்துக் கொண்டார்.

### ஆகட்டும் பார்க்கலாம்

யாழ்ப்பாண நகர தண்ணீர்ச் சப்ளை விட்டுத்திட்டம் முதலான பல்வேறு முக்கிய விவகாரங்கள் பற்றிப் பேச மேயர் கூட்டிய மகாநாட்டிலும் ஏமாற்றமே எதிரொலித்தது. கேட்டதற்கெல்லாம் அமைச்சர் கைவிரித்து "ஆகட்டும்பார்க்கலாம்" என ஆசை வார்த்தையும் கூறினுர்.

### நிகழ்ச்சிகள் ஆங்கிலத்தில்

கிராமக் கமிட்டித் தலைவர்கள் மகாநாட்டில் மற்ருெரு விசேடமும் நடந்தது. ஆங்கிலம் தெரியாத அநேக கிராமக் கமிட்டித் தலைவர்கள் சமூகமளித்திருந்த அந்த மகாநாட்டில் நிகழ்ச்சிகள் ஆங்கிலத்திலேயே நடந்தன. பின் வரிசையில் இருந்த பலர் விஷயம் புரியாதுபேந்தப் பேந்த விழித்தனர். ஒரு சந்தர்ப்பத்தில் தமிழில் தன் கோ[illegible] சமர்ப்பித்துப் பேசிய ஒரு பிரதிநிதியிடம் அமைச்சர் ஆங்கிலத்தில் எதையோ வினவினுர்.

### நண்பன்

ஸ்தல ஸ்தாபன அமைச்சரின் பாராளுமன்றக் காரியதரிசி திரு வி. ரி. ஜி. கருணுரத்திஞ எம். பி. இந்த நிகழ்ச்சிகளின் போதெல்லாம் எதுவும் பேசாமல் ஏனே மௌனமாயிருந்தார். நீலச் சால்வையணிந்து சதா சிகரட்டு புகைத்தவண்ணம் அவர் தன் கழுகுக் கண்பார்வையால் அங்குமிங்கும் நோட்டம் விட்டபடியேயிருந்தார். யாரோ ஒருவர் "கருணுரத்திஞ யாழ்ப்பாணத்தாரின் நண்பன்" என்றபோதுதான் லேசாகச் சிரித்தார். அந்த "யாழ்ப்பாண நண்பன்" அமைச்சருடன் செவ்வாய்க்கிழமை விமானமூலம் கொழும்புக்குத் திரும்பவில்லை. அன்று மாலை புகையிரதத்தில் செல்லும்வரை மோட்டார் வண்டியில் அங்குமிங்கும் ஓடித்திரிந்தார். அப்படித் தலைபோகிற காரியம் அவருக்கு இங்கு என்னஇருந்ததோ தெரியவில்லை.

### தப்பினுர்

இப்படியாகவே அமைச்சர் மெதிவக்கையின் யாழ்ப்பாண விஜயம் மாலை மரியாதைகள் எதுவும் மருந்துக்குத்தானும் இன்றி வெறும் உத்தியோக பூர்வமான வரவேற்புடன் அடக்க ஒடுக்கமாக நிறைவேறியது. இதன்மூலம் அவர் அதிர்ஷ்டவசமாகக் கருப்புக்கொடிகளின் முகத்தில் விழிக்காமல் தப்பித்துக் [illegible]

## யாழ் தொழில் நுட்பக்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இளந் தமிழர் இயக்கத்துக்கு அதிபர் அனுப்பிய கடிதத்தின் முழு வரைம் வருமாறு:—

"செயலாளர்,
இளந் தமிழர் இயக்கம்,
யாழ்ப்பாணம்.

ஐயா,

தங்களால் கௌரவ பிரதம மந்திரி அவர்களுக்கு எழுதப்பட்டு கல்வியமைச்சின் நிரந்தரக் காரியதரிசியினுல் பரிசிலனை செய்யுமாறு கோரி என்னிடம் சமர்ப்பிக்கப்பட்ட தங்கள் 18-8-59ம் தேதியிடப்பட்ட கடிதத்தினை யொட்டி தங்கட்குத் தெரிவித்துக் கொள்வது யாதெனில் கொழும்பிலுள்ள தொழில் நுட்பக் கல்லூரியின் போதனு மொழியாக, தொடர்ந்தும் ஆங்கிலமே இருக்கும்.

ஓர் கனிஷ்ட தொழில் நுட்ப பாடசாலை யாழ்ப்பாணத்திலுள்ள கொக்குவில் என்னுமிடத்தில் நிறுவப் பட்டிருக்கின்றது. சென்ற 22—10—59ல் இக் கல்லூரிக்கானவோர் பிரவேசபரீட்சை நடாத்தப் பட்டது இப்பாடசாலையின் போதனு மொழி தமிழும் ஆங்கிலமுமாகவே இருக்கும். காலக்கிரமத்தில் இப்பாடசாலை ஓர் பூரணத்துவம் பெற்ற கல்லூரியாக படிப்படியாக மாற்றப் பெறும்.

தங்கள் கீழ்ப்படிவுள்ள
ஊழியன்,

எஸ் எல். டி. சில்வா, அதிபர்.
கொழும்பு தொழில்
நுட்பக் கல்லூரி

இளந் தமிழர் இயக்கம் அதன் 16—8—58ல் நடந்த கூட்டத்தில் நிறைவேற்றிய தீர்மானங்கள் பின்வருமாறு:—

1. கொழும்பு தொழில் நுட்பக் கல்லூரியில் படிப்படியாகச் சிங்களம் புகுந்து வருவதால், தமிழில் நுட்பக் கல்வி புகட்டக் கூடிய ஒரு பூரணத்துவமுடைய தொழில் நுட்பக் கல்லூரி யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட வேண்டும் என்றும் அதற்கான நடவடிக்கையில் உடனடியாக ஈடுபடுமாறும் அரசாங்கத்திடம் இழந் தமிழர் இயக்கம் கேட்டுக் கொள்கிறது.

2. கொழும்பு தொழில் நுட்பக் கல்லூரியில் தனிச் சிங்களம் புகுத்தப் படுவது மூலம் தமிழ்ப் பேசும் மாணவர் வஞ்சிக்கப்பட்டு வருவதையிட்டு அரசாங்கத்தினர் மீது கண்டனம் தெரிவிப்பதுடன் இவ்விஷயத்தில் பூரண திருப்தியளிக்கக்கூடிய மனமாற்றத்தை அரசாங்கம் ஏற்படுத்திக் கொள்ளாத பட்சத்தில் தமிழ்ப் பேசும் மாணவர்கள், தம் சக்திக்குட்பட்ட எதிர்ப்பு அல்லது கண்டன நடவடிக்கையில் ஈடுபடுவார் என்பதை இழந் தமிழர் இயக்கம் தெரிவித்துக்கொள்ளுகிறது.

மேற்படி தீர்மானங்களையொட்டி இளந் தமிழர் இயக்கம் அடிக்கடி வற்புறுத்தியமையும், கண்டனத்தைத் தெரிவிக்கு முகமாக ஒரு நாள் ஹர்த்தால் நடாத்தத் திட்டமிட்டிருந்ததும் குறிப்பிடத் தக்கனவாகும்.

## அகில இலங்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படுத்திவிடும் என்று சுட்டிக் காட்டப்படுகிறது. ஆயினும் பதவி வேட்கை கொண்டோர் எதிலும் தம் அழுங்குப் பிடியைத் தளர்த்துவதாயில்லை.

### பஞ்ச படலங்கள்

இது சம்பந்தமாக மட்டக்களப்பிலுள்ள திரு சி. பூபால பிள்ளை என்ற ஒரு தலைமை ஆசிரியர் சுதந்திரனுக்கு அபிப்பிராயம் வெளியிடுகையில் பின்வருமாறு கூறினுர்:

"நமது ஆசிரியர் சங்கம் 1. அமைப்புப் படலம் 2. தெரிவுப் படலம் 3. நிருவாகப் படலம் 4. இடமாற்றப் படலம் 5. பிளவுப் படலம் அல்லது அழிவுப் படலம் என்று பஞ்ச அங்கங்களைக் கொண்டதாய் அமைந்து விட்டது.

"வாழைக்குத் தானீன்ற காய் கூற்றம் என்பது போன்று சங்கத்தை இந் நிலைக்கு உருக்குலைத்தவர்கள் சங்க நிர்வாகஸ்தர்களே என்று சொல்ல வேண்டும்.

### ஆயுதத் துர்ப்பிரயோகம்

"ஆசிரியர் சங்கம் தன்னைத்தானே தற்கொலை செய்து கொண்டு அழிவதற்கு இடமாற்ற அதிகாரம் என்ற வாளாயுதத்தைச் சங்க நிர்வாகிகளின் கையில் ஒப்படைத்தார் புத்திசாலியான கல்வி அமைச்சர் திரு தஹநாயகா. நிர்வாகிகள் இடமாற்ற அதிகாரம் என்ற அந்த ஆயுதத்தைத் துர்ப்பிரயோகம் செய்ததால் ஒருவர் கழுத்தை ஒருவர் வெட்டிக் கொண்டு, சங்கத்தின் மூல வேரையும் வெட்டிவிட்டார்கள். சங்கத்துக்கு வந்த விளை இதுதான். சங்கம் இனிப் பிழைக்கும் என்று எந்த வைத்தியராவது உறுதி கூற முடியாது. தமிழர் ஆசிரியர் சங்கம் சந்தி சிரிக்கும் நிலையை அடைந்து விட்டது. வாழ்க ஆ. க. சு. — வாழ்க தியாகராசா — ஆசிரியர் சங்கம் அடியோடு வாழ்க." இவ்வாறு அந்த ஆசிரியர் கூறி முடித்தார்.


## மாபெரும் கலாவிருந்து!

### தென்னிந்திய சினிமா நட்சத்திரங்கள் கலந்து கொள்கிருர்கள்

● சிவகெங்கைச் சீமை புகழ் சின்னமருது எம். கே. முஸ்தபாவின் சமுகம் ● நடன ராணி ர ரகினியின் நடன விருந்து ● பின்னணிப் பாடகர் ஹ—சேன்தீனின் இன்னிசை ● டி. எஸ். தனலட்சுமியின் இசை அமுது ● எஸ். எஸ். கொக்கோவின் வாரிசான ஜிப்பியின் நகைச்சுவை, மக்களை மகிழ்ச்சியூட்டி களிப்பூட்டும் கலாவிருந்து

காணத் தவருதீர்கள்!

15—11—59 மாலை 6 மணிக்கு பாபல பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும்.

டிக்கட் விபரம் ரூ. 5, 3, 2.

மண்டபத்திலேயே டிக்கட் பெற்றுக்கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உமா—என் உமா

சிறுகதை — எழுதியவர்: உதயணன்

"உமா.........!"

"..................."

அவள் எங்கோ பார்த்த படி படுத்திருந்தாள். நான் அவளுக்குப் பக்கத்தில் போய் அமர்ந்தேன். அவளுடைய நெற்றியில் சுருண்டு கிடந்த தலைமயிரை ஒதுக்கி விட்டேன். கைகளைத் தூக்கி எனது கைகளில் வைத்து வருடிவிட்டேன்.

"உமா..............!"

"........................."

உமாவுடைய கன்னத்தைத் தொட்டு என் பக்கம் திருப்பிவிட்டேன். அவள் என்னைப் பார்க்கவில்லை. யன்னல் வழியாக வெளியே நோக்கினாள். உடலை நெளித்துப் புரண்டு படுத்தாள். நான் ஒருவன் இருப்பதே அவளுக்குத் தெரியாமல் போய்விட்டதா?

"உமா..............!"

நான் அழுதுவிட்டேன்.

அவள் சிரித்தாள்.

* * *

பொருமை விளையும் பூமியான யாழ்ப்பாண மண்ணில் பிறந்த தோஷம்—எனது தகப்பனார் வயோதிப வயதடைந்த பின்னரும் புகையிலை வியாபாரத்தைத் தொடர்ந்து நடத்துவது ஒருசிலரின் கண்களைக் குத்தியது. அதனால் அடுத்த வாரிசான நானே புகையிலை வியாபாரியாக முடி சூட்டிக் கொண்டு புகையிலைச் சிப்பாய்களுடன் மட்டக்களப்புக்கு ரயில் ஏறினேன்.

சிற்றாண்டி புகையிரத நிலையத்தில் இறங்கி நான் பேந்தப் பேந்த விழிக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. அப்பா சொல்லிவிட்ட குறிப்பின்படி முறக்கட்டான் சேனைச் சந்திக்கு வந்துவிட்டேன் என்பதை தெருவின் இரு பக்கமும் வானோங்கி நின்ற இரண்டு வாகை மரங்கள் உறுதி செய்தன. அந்தச் சந்தியில் ஒரு வாசிகசாலையும் அதன் அருகில் ஒரு தேனீர்க் கடையும் இருந்தன. இதுதான் அப்பா சொன்ன செல்வரத்தினத்தின் கடையாக இருக்க வேண்டும் என்று துணிந்து நுழைந்தேன்.

சிவந்த மேனியும் சிரித்த முகமுமாக காட்சி தந்த அந்த இளைஞர் செல்வரத்தினத்திடம் என்னை அறிமுகப் படுத்தி விஷயத்தைச் சொன்னேன். அவருடைய கடையில் ஓசியில் ஒரு தேனீரும் அருந்தி அவரிடம் வழி கேட்டுக்கொண்டு சிற்றாண்டிச் சந்தியை நோக்கி நடையைக் கட்டினேன்.

சந்திக்கு வந்துவிட்டேன். அவர் குறிப்பிட்ட ஆலமரம், கிணறு, புதிதாகக் கட்டப்பட்ட கடை யாவும் இருந்தன. அந்தக் கடை எமது வாடிக்கைக்காரர் சுப்பையாவுடையது.

சுப்பையாவைக் கண்டதும் அவர் சஷ்டியப்த பூர்த்தியைக் கொண்டாடப்போகும் நாள் விரைவில் என்று எண்ணிக்கொண்டேன். என்னை இன்னார் என்று அறிந்து கொண்டதும் மனுஷன் விழுந்து விழுந்து உபசரித்தார்! அவருடைய அன்பும் அடக்கமும் என் இதயத்தைச் சிறையெடுத்தன.

அவர் தமது வீட்டுக்கு அழைத்துச் சென்றார். அவருடைய மனைவி காமாட்சி குணத்தில் சுப்பையாவை மண் கவ்வ வைத்துவிட்டாள். அவர்நளுடைய வீட்டில்இருதினங்கள் தங்கிவியாபார விஷயத்தை முடித்துக் கொண்டு திரும்பினேன்.

நான் சுப்பையாவிடம் அடிக்கடி போகவர நேர்ந்து, ஒன்றாக—நன்றாகப் பழகிவிட்டேன். என்னைப் பொறுத்த வரையில் சிற்றாண்டி என்றால் சுப்பையாவுடைய வீடு என்றுதான் பொருள். சாப்பாடு முதல் படுக்கை வரை அவருடைய தயவுதான். இத்தனை நடந்தும் அவருக்கு உமா என்ற வண்ணக்கிளி புத்திரியாக இருப்பதை அறிந்து கொள்ள எத்தனை நாட்கள் பிடித்தன!

ஒரு முறை நான் அங்கு போனபொழுது காமாட்சி படுத்த படுக்கையாகிவிட்டதாலும் நான் அந்தக் குடும்பத்தில் ஒருவன்போல் ஆகிவிட்டதாலும் அந்த நடமாடும் பொற்சிலையைக் காணும், பேசும், பழகும் வாய்ப்பு ஏற்பட்டது.

உமா! அவளுடைய கொள்ளை அழகை வார்த்தைகளில் சொல்ல எனக்குத் திறமை போதாது. வயது பதினெட்டிருக்கும். சாதாரண பருத்திப் புடவை ஒன்றை அள்ளிச் சொருகித் தாவணி போட்டிருந்தாள். சிவந்த நிறம். மெல்லிய உயரமான தோற்றம். காந்த சக்தி நிரம்பிய தாமரை வதனம். இரண்டு வட்டக் கருவழிகள்—விழிகள்—ஆம், அந்த வேல்களுக்குப் பெயர் விழிகளாம்!

அவளை நான் ஏதாவது கேட்டுவிட்டால்,கடைக்கண்களால் என்னைக் கொன்று குற்றுயிராகப் போட்டுவிட்டுப் பதில் சொல்வாள்; அப்புறம் அவள் சொல்வதை விளங்கிக்கொள்ளும் திராணி எனக்கு ஏது? நான் எதையாவது வேடிக்கையாகப் பேசி அவளைச் சிரிக்க வைப்பேன். அவள் ஒரு முறை சிரித்தாள் என்றால் அதைக் கற்பனை பண்ணிக்கொண்டே ஓராண்டுக்கு இருந்துவிடலாம்.

அன்று நான் சில வியாபார அலுவல்களை முடித்துக் கொண்டு வீட்டுக்கு வர இரவு அதிக நேரமாகிவிட்டது. சுப்பையா உணவை முடித்துக்கொண்டு படுக்கைக்கு கடைக்குப் போய் விட்டார். காமாட்சி உறங்கி விட்டாள். உமா மட்டும்—உமா!—எனக்காகக் காத்துக் கொண்டு கண் விழித்திருந்தாள்.

திண்ணையில் பாயை விரித்து உட்காரவைத்து உணவு பரிமாறினாள். "ஏன் உமா நீ சாப்பிட்டு விட்டாயா?" என்று கேட்டேன். அவள் பேசவில்லை. பொருத்த சமயங்களில் மௌனம் பெண்களுக்குத் துணை செய்து விடுகிறது.

"நான் உனக்கு மிகவும் சிரமம் தந்து விடுகிறேன இல்லையா?"

"அதெல்லாம் ஒன்றும் இல்லை" மூன்று முத்துக்கள் பிறந்தன.

"அப்படியென்றால் தினம் தினம் காலம் தாழ்த்தியே வரட்டுமா?"

அவளுடைய கன்னத்தில் சுழித்தது ஒரு சிரிப்பு.

சாப்பாட்டை முடித்துக் கொண்டு கை கழுவ வெளியே வந்தேன். இருட்டில்—வழியில் கிடந்த எதுவோ தடுக்கி விட்டதால் குப்புற விழுந்துவிட இருந்தேன். கையிலிருந்த செம்பு தவறி ஒரு கல்லைல் 'டணல்' என்று பட்டு மணலில் விழுந்தது. சப்தத்தைக் கேட்டு உமா போத்தல் விளக்கும் கையுமாக வெளியே ஓடி வந்தாள்! 'சோ'வென்று வீசிய காற்று விளக்கை அணைத்தது.

அவளுடைய கை!

"உமா..............!"

"......................"

"உமா.....................!"

"ம்..........................!"

மறுநாள், "நான் போய் விட்டு வருகிறேன், உமா!"

(11-ம் பக்கம் பார்க்க)


## ஆங்கிலம்

ஆங்கிலம் அழகாகப் பேச, வாசிக்க, எழுத ஆறே மாதங்களில் படிக்க விரும்பினால் இலவச விபரங்களுக்கு எழுதுக.

**அற்லஸ் ஹோல்,**
723, மருதானை ரோடு,
கொழும்பு-10.
த. பெட்டி 649.



## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கை, கணுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சில காலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00.

இத்துடன், "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனாமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50. சிறியது ரூ. 3-00.
வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:-
**ஆனந்தா வைத்தியசாலை**
நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11


# பெயரிலேயே பாகுபாடும் . . .

(7ம் பக்கத் தொடர்ச்சி)

### சிங்களத்துக்கு 7 தமிழுக்கு 2

சென்ற ஆண்டு 1ம் இலக்க மானியத்தின்கீழ் ஆறுமொழி பெயர்ப்பு அத்தியட்சகர்பதவிகள் இருந்தன; இவற்றுள் இரண்டு,தமிழ்அத்தியட்சகர் பதவிகள், இப்பதவிகள் இரண்டும் இவ்வாண்டு 3-ம் இலக்க மானியத்தின்கீழ்க் கொண்டுவரப்பட்டுள்ளன. சிங்கள பாடப் புத்தக பிரசுர வேலையைக் கவனிக்க ஏழு அத்தியட்சகர் இருக்கும் போது தமிழுக்கு இருவர் மாத்திரம் உளர் என வட்டுக்கோட்டைப் பிரதிநிதி ஏற்கனவே எடுத்துக் காட்டியுள்ளார். தமிழ்ப் பிரசுர வேலைகளைப் பார்ப்பதற்காகய உத்தியோகத்தர் தொகை மிகக் குறைவாக இருக்கிறதென்பது நன்றாகத் தெரிகிறது.

### தமிழ்ப் பிரிவை நசுக்குவதா நோக்கம்?

3-ம் இலக்க மானியத்தின் கீழ் உயர்தர உத்தியோகத்தருக்கு வேண்டிய எழுது வினைஞர், ஓர் தட்டச்சாளர், கீழ்ப்பணியாளர் முதலியோர் எவருமில்லை. அப்பிரிவிலுள்ள ஆராய்ச்சி உத்தியோகத்தர், மொழி பெயர்ப்பு அத்தியட்சர், மொழி பெயர்ப்பாளர் ஆகியோர் எழுது வினைஞர், தட்டச்சாளர் முதலியோரின்றி எவ்வாறு தம் கடமைகளைச் செய்யலாம்? ஏன் இத்தகைய பாகுபாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை விளங்கிக்கொள்ள முடியவில்லை. தமிழ்ப் பிரிவின் வேலைகளை நசுக்க வேண்டுமென்பதுதானு நோக்கம்?

### விசித்திரமான பதில்

2-ம் இலக்க மானியத்தின் கீழ் வருவது தன் மொழி அலுவலகமாகும். அந்த அலுவலகத்தை இப்பொழுது "அரசாங்க மொழிப் பிரசுரங்கள்" என மாற்றியுள்ளனர். தமிழ்ப் பிரசுர வேலைகளும் அங்கேயே நடைபெறுவதனால் அப்பிரிவை "தேசிய மொழிப் பிரசுரங்கள்" என அழைக்க வேண்டும். இவ்வாறு பொருத்த மற்ற பெயரைச் சூட்டியவர் யாரெனத் தெரியவில்லை; ஆனால் ஒன்று நடைபெறுவது உண்மை—தமிழ்ப் பிரிவுக்கு மேலும் உத்தியோகத்தர் தேவையெனக் கேட்டால் தமிழை ஒழித்துக்கட்டக் கங்கணம் கட்டி நிற்கும் பிரதிக் கொமிஷனர் என்ன சொல்வார் தெரியுமா? "ஓ! இது அரசாங்க மொழி அலுவலகமேயன்றி, அரசாங்க மொழிகள் அலுவலகமன்று. நீங்கள் 1955-ம் ஆண்டுக்கு முந்திய காலத்தை மனதில் வைத்திருக்கிறீர்கள். இப்பொழுது தமிழுக்கோ, தமிழருக்கோ இங்கே இடமில்லையல்லவா?" என்பார்.

### செயலாளர் நியமனங்கள்

செயலாளர் எனப்படும் நியமனங்கள் பற்றிச் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். சென்ற ஆண்டு சிங்கள பாடப் புத்தகப் பிரிவுக்கு 5 செயலாளரும் தமிழ்ப் பிரிவுக்கு 2 செயலாளரும் இருந்தனர். இவ்வாண்டு மேலும் 4 செயலரளரை நியமிக்க நிதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது; ஆனால் அவை சிங்களப் பதவிகளா தமிழ்ப் பதவிகளா எனக் காட்டப்படவில்லை. இப்புதிய பதவிகளைத் தமிழ்ப் பிரிவுக்கு ஒதுக்கி, காலம் தாழ்ந்துவிட்ட பாடப் புத்தக வேலைகளைத் துரிதப்படுத்தப் பிரதம மந்திரி உதவிபுரிவாரா?

### காலியான இடம்

ஒரு காலியான இடமுண்டு. அதற்குத் தமிழ் உத்தியோகத்தர் ஒருவரை நியமியுங்கள் என நாம் கேட்டவுடன் திடுதிப்பென அந்த இடத்தை விளம்பரப்படுத்தி அதற்கு ஒரு சிங்கள உத்தியோகத்தரை நியமித்துவிடுவது உங்கள் வழக்கம். அவ்வண்ணந்தான் இனியும் நடைபெறுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

2ம் இலக்க மானியத்தின் கீழ் இவ்வாண்டு மூன்று புதிய மொழிபெயர்ப்பு அத்தியட்சகரை நியமிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் அப்பதவிகள் சிங்களப் பிரிவுக்கா தமிழ்ப் பிரிவுக்காவென்பது குறிப்பிடப்படவில்லை. இப்பதவிகளையும் தமிழ்ப் பிரிவுக்கென ஒதுக்கி பின்தங்கிவிட்ட தமிழ்ப் பாடப் புத்தக வேலைகளை முடிப்பதற்குப் பிரதம மந்திரி உதவிபுரிவாரா? இப்பொழுது சிங்களப் பிரிவில் 7 அத்தியட்சகரும் தமிழ்ப் பிரிவில் 2 அத்தியட்சகரும் மாத்திரம் உளர்.

திரு எஸ் டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயகா: நான் கவனிக்கிறேன்.

### புது நியமனம்

திரு வன்னியசிங்கம்: இப்பொழுது கலைச் சொல் அகராதி பதிப்பிக்கும் பொறுப்புடைய சிங்களப் பதிப்பாசிரியர் ஒருவரும் தமிழ்ப் பதிப்பாசிரியர் ஒருவரும் உளர். இவ்வாண்டு மேலதிகமாக ஒருவரை நியமிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது; அவரையும் சிங்களப் பகுதிக்கே நியமிக்கக்கூடும். அது எவ்வாறிருந்தபோதிலும் இவ்வாண்டுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 4 மொழிபெயர்ப்பாளர்கள் எப்பிரிவுக்கு நியமிக்கப்படவிருக்கின்றனர் என்பதை அறியலாமா? அகராதி உதவியாளரும் நால்வர் இவ்வாண்டு நியமிக்கப்படவிருக்கின்றனர். இவர்கள் எப்பிரிவுக்கு நியமிக்கப்படவிருக்கின்றனர் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

### அச்சுப்படி வாசிப்போர்

அச்சுப்படி வாசிப்போர் நால்வர் சிங்களப் பிரிவிலும் இருவர் தமிழ்ப் பிரிவிலும் இப்பொழுதுளர். இவ்வாண்டு அறுவர் புதிதாக நியமிக்கப்படவிருக்கின்றனர். இவர்களிற் சிலர் தமிழ்ப் பகுதிக்கு நியமிக்கப்படுவார்களா என்பதையும் பிரதம மந்திரி தெரிவிப்பாரா?

### தட்டெழுத்தாளர்

தமிழ்த் தட்டெழுத்தாளர் இப்பொழுது மூவர் மாத்திரம் உளர், ஆனால் நால்வர் இவ்வாண்டிற் புதிதாக நியமிக்கப்படவிருக்கின்றனர். இந்த நால்வரும் எப்பிரிவுக்கு நியமிக்கப்படுவர் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருட்டுத் தொழிலில் தையலர் கைவரிசை!

## மேல் நாடுகளில் உள்ள திருடிகள் துணிந்தவர்கள்

### ஆயினும் இரக்க சிந்தை இறுதியில் அவர்களை அடிமைப் படுத்துகிறது-அகப்பட்டுக் கொள்கிறார்கள்

வேறு எத்தேச மக்களும் கண்டிராத நாகரிகத்தைத் தாம் அடைந்திருப்பதாகப் பெருமையடித்துக்கொள்கின்றனர் மேல்நாட்டார். அவர்கள் அடைந்திருப்பதுஉண்மையான நாகரிகம்தானு என்பது வேறு விஷயம். ஆனுல் ஒன்று மட்டும் உண்மை. மற்ற தேசங்களைவிட இந்நாடுகளில்தான் கொலை, கொள்ளை, திருட்டு முதலிய தீச்செயல்கள் அநேகமாக நடைபெறுகின்றன. இத்தீச் செயல்களிலும் பெண்கள் 'சரிநிகர் சமானமாக' ஆண்களோடு போட்டி போடுகிறுர்களென்ருல் கேட்க வேண்டுமா! இக்கூற்றை மேல்நாடுகளிலிருந்து அடிக்கடி வெளியாகும் செய்திகள் நிருபிக்கின்றன.

### சைக்கிள் பிரயாணம்

அதிகாலையில் கோயில் மணி இரண்டு முறை 'டாங், டாங்' என்று அடித்து ஓய்ந்தது. இங்கிலாந்து தேசத்தில் 'போவரி' என்ற கிராமப்புறத்தில் ஓர் விவசாயி வீட்டு அறையில் தங்கியிருந்த அழகிய இளம் மங்கை ஒருத்தி தன் படுக்கையை விட்டும் எழுந்து கண்களை அப்படியும் இப்படியுமாக உருட்டிப் பார்த்தாள். எங்கும் நிசப்தம் நிலவியது. மெதுவாகத் தனது அறையை விட்டு வெளிக் கிளம்பினுள். தனது சைக்கிளையும் தள்ளிக்கொண்டு வீட்டைவிட்டும் வெளியேறினுள். வெளியே வந்ததும் சைக்கிளில் ஏறி இருட்டில் மறைந்துவிட்டாள்.

வெளிச்சம் இல்லாமல் சைக்கிளை ஓட்டினுள் அவள். பிரதான வீதிக்குச் சென்றுவிடாமல் கவனமாகப் பார்த்துக்கொண்டு சிறு ஒழுங்கைகளாலும் நடைபாதைகளாலும் சென்ருள் அவள். இப்படிச் செல்வதால் ரோந்து சுற்றும் பொலிஸ்காரனையோ அல்லது நேரந்தவறி வீடு வரும் பிரயாணியையோ சந்திக்க நேரிடாது என்பது அவளுக்கு நன்ருகத் தெரிந்திருந்தது.

#### விதவையின் வீடு

அவள் நினைத்துக்கொண்டு சென்ற இடத்தை அடைவதற்கு சுமார் இருபது நிமிடங்கள் பிடித்தன. அது ஓர் நிதானமான தனிப்பட்ட மாடி வீடு. அவ்வீட்டின் சொந்தக்காரி ஓர் பணக்கார விதவை. அவள் ஆஸ்திரியாவுக்கு உல்லாசப் பிரயாணம் சென்றிருந்தாள். வீட்டின் அருகாமையில் நீரோடை ஒன்று ஓடிக்கொண்டிருந்தது.

சைக்கிளை ஓர் பக்கத்தில் சாத்திவிட்டு அடிமேல் அடிவைத்து வீட்டின் கொல்லைப் புறத்துக்குச் சென்ருள் அவள். காரியத்தில் நன்ருகப் பழக்கப்பட்டவள்போல் தனது சட்டைப் பைக்குள் கையை விட்டு சிறு ஆயுதமொன்றை எடுத்தாள். பூட்டப்பட்டிருந்த குசினிக் கதவின் வாயில் அதைப் போட்டுத் திருப்பினுள். கதவு திறந்துகொண்டது. சத்தம் செய்யாமல் உள்ளே நுழைந்தாள்.

#### வைன் போத்தல் காலி

தான் கொண்டு வந்த சிறிய டோர்ச் லைட்டின் உதவிகொண்டு நேரே வீட்டின் பிரதான அறைக்குள் சென்ருள். ஓர் பெட்டிக்குள் கிடந்த 200 பவுன்கள் பெறுமதியான ஆபரணங்களையும் இன்னும் அங்குமிங்கும் சிதறிக் கிடந்த பணத்தையும் சுருட்டி எடுத்துக்கொண்டாள். மேல்மாடிக்கு ஏறுவதற்கு முன்பு அங்கே கிடந்த 'வைன்' போத்தலை எடுத்துக்கொண்டாள். ஒரேமூச்சில் போத்தல் காலி. மேல்மாடியில் எடுத்துச் செல்வதற்குப் பெறுமதிவாய்ந்ததொன்றும் அங்கு காணப்படவில்லை. ஓர் கனத்த பை மட்டும் இருந்தது. நேரம் சென்றுகொண்டிருந்ததால் அவளுக்கு அப்பையை உடனே திறந்து பார்ப்பதற்கான அவகாசம் கிடைக்கவில்லை. விடிவதற்கு முன்பாக யாருக்கும் தெரியாமல் தன் இருப்பிடத்துக்குப் போய்விட வேண்டும் அவள்.

#### 'நல்ல' பெண்மணி

சற்று நேரத்தில் தனது அறைக்குள் மீண்டும் படுக்கையில் காணப்பட்டாள் அவள். வீட்டுச் சொந்தக்காரனுகிய விவசாயியும் அவன் மனைவியும் அடுத்த அறையில் குறட்டை விடும் சத்தம் கேட்டு அவள் லேசாகச் சிரித்தாள். ஒரு பாவமும் அறியாத அந்த வீட்டுச் சொந்தக்காரத் தம்பதிகள் தாம் ஒரு "நல்ல" பெண்மணிக்கே தங்கள் வீட்டில் இடம் கொடுத்து வைத்திருப்பதாக எண்ணிக்கொண்டார்கள்.

### காதல் கடிதம்

மறுநாள் விவசாயியுடைய வீட்டைவிட்டும் ஜெர்மன் பட்டணத்துக்குப் புறப்பட்டுவிட்டாள் இத்திருடி. அங்கு ஓர் ஓட்டலில் தங்கியிருந்துகொண்டு தான் திருடிக்கொண்டு வந்த பையைப் பரிசோதிக்கலானுள். அதற்குள் கடிதங்கள் குவிந்து கிடக்கக் கண்டாள்! முகத்தில் ஏமாற்றக் குறிகள் படர அவற்றை அப்படியே சுருட்டி பைக்குள் மீண்டும் போட்டுவிட்டு உறங்கினுள்.

அடுத்த நாள் இரவு இன்னுேர் திருட்டை நடத்துவதற்குத் திட்டமிட்டவண்ணம் மேற்படி பையில் கிடந்த கடிதங்களை எடுத்து வாசிக்கத் தொடங்கினுள். அவைகள் அவ்விதவைக்கு அவள் கணவன் சாவதற்கு முன்பு எழுதிய அன்புமொழியும் காதல கடிதங்கள்! இத்திருடி மிகவும் கடினமான இதயம் படைத்தவள். ஆனுலும் விதவையின் இறந்த காதலன் எழுதியிருந்தவை அத்திருடியின் உள்ளத்தை இளகச் செய்துவிட்டன.

#### கடிதம் மீண்டது

"அன்பே! எதிர்காலம் எப்படியானுலும் எங்கள் காதல் சத்தியமாக அழியாது!" என்று ஓர் கடிதத்திலிருந்த வரிகளைப் படித்ததும் அவள் மனம் உருகிற்று. இக்கடிதங்களை எப்படியாவது அவை கிடந்த இடத்தில் திரும்பவும் வைத்துவிட வேண்டுமென உடனே தீர்மானித்துவிட்டாள். மறுநாளே ஒருவருக்கும் தெரியாமல் விதவையின் வீட்டை நோக்கிப் புறப்பட்டாள்.

இப்படியான இரக்க சிந்தை திருடிகளை எப்பொழுதும் வெற்றிகொண்டுவிடுகிறதென இவர்களின் திருட்டு முறைகளையும் குணதிசயங்களையும் ஆராய்ந்த குற்ற நிபுணர்கள் கூறுகிறார்கள்.

### அனுமதேயக் குறிப்பு

இன்னுேர் திருடி சில பதக்கங்களைத் திருடியதற்காக சிறைக்கனுப்பப்பட்டாள். இப்பதக்கங்கள் முதலாவது உலகப் போரில் சண்டையிட்டு மாண்ட ஓர் போர் வீரனுக்குச் சொந்தமானவை. இவற்றைத் திருடியவள் அவ்வீட்டின் சொந்தக்காரனுக்கு அவற்றைத் திருப்பி அனுப்பும்பொழுது ஓர் அனுமதேயக் குறிப்பையும் சேர்த்து அனுப்பிவிட்டாள். "நான் அன்றிரவு இவற்றைத் திருடி வந்ததற்காக மன்னிப்புக் கோருகிறேன் நானும்கூட உலகயுத்தத்தில் ஓர் கிட்டிய உறவினரை இழந்து தவிக்கின்றேன்" என்று அக்குறிப்பு கூறிற்று. கடைசியில் இக்குறிப்பே அவளைக் காட்டிக் கொடுத்துவிட்டது!

முன்னைவிடப் பெரிய திருட்டுக்களில் ஈடுபடும் பெண்கள் இப்பொழுது குறைவென்று சொல்லப்படுகிறது. ஆனுல் சாப்புக் கடைகளில் திருடுவோரின் தொகை நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே வருகிறது. கடைக்காரனின் கண்பார்வை மறைவதற்குள் கைக்கெட்டிய பொருட்களை வாரிச் சுருட்டித் தங்கள் பைகளுக்குள் திணித்துக் கொள்கின்றனர் இந்நாகரிகத் திருடிகள். இக்காரணத்துக்காகவேதான் தங்கள் சாப்பின் வாயில்களிலொன்றை மூட வேண்டிய அவசியம் ஏற்பட்டதென கொழும்புக் கோட்டையிலிருக்கும் பெரிய கடையொன்றின் மானேஜர் சமீபத்தில் கூறினுர்.

### அடித்துப் பறித்தல்

அடித்துப் பறிக்கும் திருட்டுத் தொழிலிலும் அழகிய மங்கையர் ஈடுபடுகின்றுர்கள். ஒரு பெண் கடை முதலாளி ஒருவரை அடித்துப் பறித்த சம்பவம் யோக்ஷயர் என்னும் நகரில் நடைபெற்றது.

கம்பீரமான தோற்றமுடைய பெண் ஒருத்தி ஓர் கடைக்குள் புகுந்து சில இனிப்புப் பண்டங்களை வாங்கினுள். பிறகு வயது சென்ற அக்கடை முதலாளியை ஓர் போத்தலால் தாக்கிவிட்டு பணத்தைப் பிடுங்கிக் கொண்டு ஓடிவிட்டாள். முதலாளி சுயஉணர்வு பெற்று கூக்குரலிடுவதற்குள் கார் ஒன்றை ஓட்டிக்கொண்டு கம்பிநீட்டிவிட்டாள் அத்திருடி. அவள் ஓட்டிச் சென்ற கார் திருடப்பட்டதென்றும் நகரத்துக்குப் பல மைல்களுக்கப்பால் அது கவனிப்பாரற்றுக் கிடந்ததென்றும் பின்பு தெரிய வந்தது.

---

## உமா - என் உமா

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

என்ற பொழுது அவள் முகம் சுண்டியது. "இனி எப்போ வருவீர்கள்?" என்று கேட்டாள். அவளுடைய குரலில் சோகம் இழையோடியது. எனது கால்கள் நிலத்தோடுஒட்டிக்கொண்டு விட்டன.

நான் உமாவின் பேச்சை எடுத்தபொழுது, அப்பா சாதி சமய அந்தஸ்துக் கொடிகளை வரிசையாக நாட்டிப் பலமாக எதிர்த்தார். நான் சொல்லாமல் கொள்ளாமல் யாழ்ப்பாணத்தை விட்டு ஓடிவந்துவிட்டேன்.

ஒரு சாராயப் போத்தியின் தலைமையில் உற்றம் சுற்றம் சூழாமலே சில முக்கியஸ்தர் மத்தியில் எங்கள் கல்யாணம் நிகழ்ந்தது. வானத்துப் பறவையாக இருந்த உமா எனக்கு உரியவளாகி விட்டாள். இனி அவள் என்னுடையவள். அவளை—

இதனுல் எனது தகப்பனுரின் பரம விரோதத்தைத் தேடிக்கொண்டேன். எனது தாயார் காலமான பொழுது யாழ்ப்பாணத்துக்கு ஓடிப் போய், தாயாரின் சடலத்திலும் விழிக்க விடாததால் அவமானப்பட்டுத் திரும்பினேன். அப்பா தேடி வைத்த ஏராளமான சொத்தை இழந்தேன். ஆனுல் இவற்றுக்கெல்லாம் ஈடு நின்றது உமாவுடைய அன்பு, உமாவுடைய பண்பு, உமாவுடைய கள்ளங்கபடமற்ற அடக்க ஒடுக்கமான பெருந்தன்மை. உமா ஒரு சாதாரண பெண்ணல்ல; அவள் ஒரு தெய்வப்பிறவி.

உமாவுக்கு நீண்ட நாட்களாக ஒரு ஆசை. பருவமடைந்த காலம் தொட்டு வெளியுலகம் தெரியாமல் வீட்டுக்குள் வாழ்ந்ததால் இம்முறையாவது சிற்றுண்டிக் கந்தசுவாமி கோவிலில் மயில்க் கட்டுத் திருவிழா பார்க்க வேண்டும் என்று விரும்பினுள். கந்தசுவாமியார் மயில்வாகனத்தில் ஏறி வலம் வருவதும், வள்ளியம்மன் கோவிலுக்கு பக்கமாக வரும்பொழுது, தெய்வானை அம்மாளுக்குத் தெரிந்துவிடக்கூடாதென்று ஓசைப்படாமல் நழுவுவதும் வேடிக்கையாக இருக்கும் என்ருள். 'சரி' என்றேன்.

ஆனுல்...

சிற்றுண்டிக் கந்தசுவாமி கோவில் வாசலில் ஒரு பிரமாண்டமான ஆலவிருட்சம் இருப்பது எவ்வளவு தூரம் உண்மையோ, அவ்வளவு தூரம் உண்மை [உம]ா நோய் வாய்ப்பட்டு படுக்கையில் சரிந்தது.

டாக்டர் உமாவைச் சோதித்துப் பார்த்தார்.

"மிஸ்டர்! உங்கள் மனைவி கர்ப்பமுற்றிருக்கிருள். ஆனுல்கர்ப்பப்பைஒழுங்காக இல்லை. ஒரு சிறு ஆபரேசன் செய்தால் சரியாகி விடும். உயிருக்குஒன்றும் பயமில்லை. பின்னர் குழந்தைகள் பிறக்காது" என்ருர் டாக்டர்.

உமாவை அப்போ குழந்தைப் பைத்தியம் பிடித்திருந்தது. நான் எவ்வளவு சொல்லியும் அவள் சத்திரசிகிச்சைக்கு உடன்படவில்லை. அவளுடைய தாய்மை உணர்ச்சிக்கு முன் நான் எதிர்த்துப் போரிடுவது எப்படி? விட்டு விட்டேன்.

பத்தாவது மாதம்—அதாவது விவாகமான பதினெராவது மாதம்—வாஸ்ழச்சேனை ஆஸ்பத்திரியில் கொண்டு போய்ச்சேர்த்தேன். தன்னைப் போல ஒரு அழகு விக்கிரகத்தைப் பெற்றெடுத்தாள். அதே நேரத்தில் என்னை ஏமாற்றிவிட்டாள் என்னுடைய உமா. என்னை நிராதரவாய்த் தவிக்க விட்டு விட்டாள் என்னுடைய உமா; என்னை நடைப்பிணமாக்கி

(13-ம் பக்கம் பார்க்க)


பணம்! சேமியுங்கள்!! பணம்!!!

இன்றே நாஷனல் பாட்டரிகளைப்



பாவிக்க ஆரம்பித்து அதிக லாபம் பெற்று ஆனந்தியுங்கள்.

நீடியகாலம் பாவிக்கிறது



விலையோ மிகக் குறைவு

இறக்குமதியாளர்கள்:

எஸ். பூ. முகம்மது ஹாஜியார்,

70, டாம் வீதி, கொழும்பு. போன்: 7653 ★ 143, மெயின்வீதி, காலி. போன்: 525.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

நாடக விமர்சனம்:

# இன்பக் கனவு

இரண்டு வாரங்களுக்குமுன் வா நடந்தது இன்பக் கனவு இலங்கை தேசிய கலை அரங்கம் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் அளித்தது. இப்பொழுது நினைத்துப் பார்த்தால் இன்பம் மட்டுமல்லாமல் துன்பமும் கலந்துதான் உள்ளத்தை நிரப்புவதாக இருக்கிறது.

## இன்பம்

தேசிய கலை அரங்கம் நாடகத்தைத் தயாரித்து அளித்தது மகிழ்ச்சிக்கு உரியது. டி. எஸ். பிச்சையப்பா குழுவினர் நல்ல இசை விருந்து அளித்தது இன்பம் தந்தது. ஓவியர் ஆர். எஸ். எப். தீட்டிய ஓவியங்களையும் ஆக்கி அளித்த காட்சி அமைப்புகளையும் பார்த்துப் பார்த்து மகிழ முடிந்தது. குறிப்பாக இடிந்த கோயில் காட்சியும் பராக்கிரம ரேடியோ ஸ்தாபனத்தாரின் ஒளி அமைப்பு உத்திகளோடு தத்ரூபமாகக் காட்டப்பட்ட கனவுக் காட்சி—அந்தக் காட்சியின் போது நீலவானில் மேகக் கூட்டங்கள் தவழ்ந்து சென்ற வாகவம்—இவற்றைப் பார்க்க மகிழ்ச்சி மட்டுமல்ல, பெருமையும் தலையெடுத்தது.

## துரதிர்ஷ்டம்

ஆயினும் என்ன? மேகக் கூட்டங்கள் நகர்ந்த வேகத்திலாவது நாடகம் விறுவிறுப்பாகச் செல்ல வேண்டாமா? குறிப்பாக இடைவேளை வரை அரைந்து சென்ற நாடகம் அதற்குப் பின்னல் சிறிது வளர்ச்சி கண்டு நகர்ந்து சென்றது. பார்ப்போரை 'அரஸ்ட்' செய்து 'விறுவிறு' என்று இழுத்துச் செல்லத் தவறிவிட்டது. இதற்கு ஒரு காரணம் காட்சி அமைப்புகளில் உள்ள கோளாறு. அரை நிமிஷம் ஒரு நிமிஷத்துக்குக் கூடக் காட்சிகளை அமைத்து முகப்புத் திரையை தூக்குவதும் விடுவதுமாக இருந்தால் என்ன ஆகும்? நாடகத்தில் விறுவிறுப்பு காணுமா? இல்லை—பார்ப்பவர்கள் மனதில் அலுப்புத்தான் ஏறிக் குடிகொள்ளும். இது நடந்து விட்டது. துரதிர்ஷ்டம்.

## கதை

கதை சமூக சீர்திருத்தக் கதை, புரட்சி நடிகர் எம். ஜி. ஆருடையது. நாடக அமைப்புமே அவருடையது தான். காதல், கழுத்தறுப்பு, கோள் சொல்லல், ஏழை—பணக்காரன் மோதல் முதலான சமூகப் பிரச்னைகள் அலசப்படுகின்றன; ஏழைப் பெண்ணுக்குப் பெரிய இடத்துப் பிள்ளைக்குமிடையே காதல். அதைச் சுற்றித்தான் கதை மிக்க இன்னலுக்கிடையே வலம் வந்து நலமாக முடிகிறது. முடிவிலே அந்த ஏழைப் பெண் உண்மையில் ஒரு ஏழைப் பெண் அல்ல என்றும் மாப்பிள்ளையின் முறைப் பெண் என்றும் செல்வம் படைத்தவள் என்றும் காட்டப்படுகிறது.

## முடிவு

ஏழை-பணக்காரன் காதல் நியாயமானதுதான என்ற லட்சியக் கருத்தை ஸ்தாபிக்க வேண்டிய நாடகம் என்பதை அதன் போக்கு உணர்த்துகிறது. முடிவோ அதை தகர்த்துவிடுகிறது. ஏழைப் பெண்ணாக அனாதையாகக் காட்டிய சிவகாமியை கடைசிவரை ஏழையாகவே காட்டி பணக்காரக் கண்ணனுக்கு மனைவியாக்கியிருக்கலாமே. அதிலே தானே புதுமை இருக்கும். அது தானே புரட்சிக் கருத்தாக அமையும்.

## சிக்கல்

நாடகத்தில் எப்படியும் ஒரு சிக்கல் வைக்க வேண்டும்; கடைசியில் அதை புட்டுக் காட்ட வேண்டும் என்பதற்காக கருத்தை திரித்து குறிக்கோளை மாற்றி நாடகத்தையே தடம் புரள வைப்பதா? இலங்கை தேசிய கலையரங்கத்தாரை மட்டும் நாம சொல்லவில்லை. இந்தத் தவறுக்கு எம். ஜி. ஆரும பொறுப்புத்தான்.

## குணசித்திரம்

இது தவிர இன்னொரு விஷயம். இன்பக்கனவிலே ராஜன் பாத்திரம் ஒரு குண சித்திரப் படைப்பு. அதாவது நல்ல Character. சீர்திருத்தவாதியாக, பகுத்தறிவாளனாக, மனிதாபிமான முள்ளவனாக, ஏழை பங்காளனாகக் காட்டப்படுகின்றான் ராஜன். அந்தப் பாத்திர சிருஷ்டியிலேயும் பெரிய குளறுபடி நடந்துவிட்டது. ஏழை சிவகாமியை தங்கையாக மதித்து அவளைக் காப்பாற்றி வருகிறான். ஆரம்பக் கட்டத்தில் அவள் அவன் மேல் காதல் கொண்டபோது அதை முறித்துசகோதர பாசமாக படம் போட்டு விடும் பண்பாளனாகத்திகழ்ந்தான் ராஜன். அதே ராஜன் கடைசியில் என்ன சொல்லுகிறான்? கண்ணனைத் தாம் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று சிவகாமி பிடிவாதமாகச் சொல்லும் போது "கண்ணன் வேண்டாம். நான் இருக்கிறேன் உன்னைக் காதலிக்கிறேன என்னைக் கல்யாணம் செய்து கொள் சிவகாமி. இன்பமாக வாழலாம்" என்று பல்லை இளித்துக்கொள்ளுகிறான். அங்கே குணசித்திரப் படைப்பு தவிடுபொடியாகிறது.

> ## தீச்சுடர்
>
> 'தீச்சுடர்' என்ற நாடகம் பற்றி கே. கே. ஆர். எழுதியது அடுத்த வாரம் வெளிவரும்.

## இயற்கையாக இல்லை

இன்னும் சிவகாமியைக் கண்டவுடனேயே ஒரு ரௌடி "நான் பாடுகிறேன் நீ ஆடு" என்று சொன்னதும் அவள் மறு பேச்சின்றி திடீரென்று ஆட ஆரம்பித்து விட்டது இயற்கையாக இல்லை ஏதோ முன் ஏற்பாட்டின்படி நடப்பதாகவே தோன்றியது. ஆட்டம் அவ்வளவு சோடை போகவில்லை என்ற உண்மையையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

## கதாநாயகன்

நடிப்பைப் பொறுத்த வரையில் கண்ணன் பாத்திரமேந்தி கதாநாயகனாக நடித்த எஸ். வி. பத்மநாதன் மேடையில் காதல்செய் [illegible] என்பது புரியவில்லை பாத்திரமேந்தி மேடையில் தோன்றி விட்டால் இறங்கும் வரை தாம் பத்மநாதன் [illegible] யிருந்தது. முகத்திலே பாவமும் இன்னும் வேண்டும். துடிப்பு கூடுதலாக வேண்டும்.

## ராஜன்-சிவகாமி

ராஜனாக நடித்த டி. என். ராஜன் சிறப்பாக நடித்தார். சிவகாமியாக நடித்த ஏ. எம். கலாராணியும் அருமையாக நடித்தார். இருவரும் சேர்ந்து நடித்த கட்டங்களில் இரண்டு உள்ளத்தைத் தொட்டன. பலமான 'அப்ளோஸ்' பெற்றன. இரண்டு கட்டங்களிலும் சிவகாமி கண்ணன் காலில் விழுந்து கதறுகிறாள். கண்ணனும் துயரம் தாங்காது துடிக்கிறான். குறிப்பாக கலாராணிக்கு நடிப்புத்துறையில நல்ல எதிர்காலம் உண்டு. ஆடத் தெரிகிறது அவருக்கு; பேசத் தெரிகிறது; முகத்தில பாவத்தை வரவழைக்கத் தெரிகிறது; மேடை நிலையும் நடமாட்ட நுணுக்கமும் நன்கு புரிகிறது. தக்கவரிடம் பயிற்சி பெற்றால் மிக்கவிரைவில் முன்னுக்கு வரக் கூடியவர் அவர்.

## சாஸ்திரி-கபாலி

மற்றும் சாஸ்திரியாராக நடித்த எஸ். கே. ஸ்ரீகாந்தா அசல் சாஸ்திரியாகவே காணப்பட்டார். பேச்சும் நடையும், உடல் அசைப்பும் ரம்மியமாக இருந்தன. நகைச்சுவை விருந்தளித்த கபாலிப் பாத்திரம் தாங்கிய

(13-ம் பக்கம் பார்க்க)



துள்ளாத மனமும் துள்ளும்! இந்த வெள்ளை மாதின் ஒய்யார நிலை அப்படி! கொல்லும் பார்வை, வெல்லும் சிரிப்பு, விரிந்த கூந்தல்—இவை சொல்லாமல் சொல்லவில்லையா கதை? ஆங்கிலப் படக் காட்சி.



ஆஹா, என்ன நெருக்கம்! கணவனிடம் காரியம் சாதிக்கும் வழி இதுதான் என்று காண்பிக்கிறாரா? "வைஜயந்திமாலா"வில் எம். என். ராஜமும் டி. ஆர். மகாலிங்கமும்.



"டப்பாவில் உள்ளது வேண்டாம், உன் வண்ணத்தை அப்படியே வடித்துக்கொடு; காதல் தேனை ஊற்றிக் கொடு" என்பதுதான் எம். ஆர். ராதாவின் பார்வையின் அர்த்தம். கலைவாணி மூவிடோன்ஸ் "வைஜயந்திமாலா"வில் மாலினியை இப்படி அர்த்த புஷ்டியோடு பார்க்கிறார் ராதா.

# கொழும்பில் கலை நிகழ்ச்சிகள்

இன்னிசை பொழிய இருவர், இங்கிதமாக ஆட ஒருவர், விழுந்து விழுந்து வயிறு குலுங்கச் சிரிக்க வைக்க வேறொருவர், கலா நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு அவற்றைச் சிறப்பிக்கப் பிறிதொருவர்—ஆக ஒரு கலைஞர் கோஷ்டியை வரவழைத்திருக்கிறார்கள். அவர்களுடைய கலை நிகழ்ச்சிகள் 15-11-59 ஞாயிறு



நடனராணி ராகினி

(13-ம் பக்கம் பார்க்க)



"குலம் காத்த கொற்றவன்" என்ற நாடகத்திலிருந்து ஒரு காட்சி. திருமலையில் தீபாவளியன்று நடந்த வாலிபர் கலை விழாவின்போது திருவள்ளுவர் கழகத்தினரால் இந் நாடகம் நடித்துக் காண்பிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலக்கிய. . .

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

னர். இலங்கையில் நாடகக் கலை அழுக்கடைந்து, துருப் பிடித்து, இருளடைந்து போயிருப்பதாகக் கூறினர் அவர். 25 லட்சம் தமிழ் பேசும் மக்கள் வாழும் இந்த நாட்டிலே 'இதோ ஈழத்தின் நாடகம்' என்று பெருமையாக எடுத்துச் சொல்ல, நடித்துக் காட்ட ஒரு நாடகம்தானும் உண்டா என்று கேட்டார் அவர்.

நாடகக் கலை இலங்கையில் வளராமல் பின்தங்கி இருப்பதற்கான காரணங்களை அவர் எடுத்து விளக்கியதோடு இலங்கை தேசிய கலைக் கழகம் முயன்றுல் நிலைமையை ஓரளவு அபிவிருத்தி செய்யலாம் என்றும் கூறி முடித்தார். (நாடகக் கலைபற்றிய பேச்சின் முழு விவரம் அடுத்த வாரம் வெளிவரும்)

### நாவல்கள்

'இலங்கையில் நாவல்கள்' என்ற பொருள்பற்றி திரு சில்லையூர் செல்வராசன்பேசினர். இலங்கையில் இதுவரை எழுதப்பட்ட நாவல்களின் பெயர்களையும் அவற்றை எழுதிய ஆசிரியர்களின் பெயர்களையும் அவை வெளிவந்த ஆண்டுகளையும் வரிசைக் கிரமமாகத் திரு செல்வராசன் தெரிவித்தார்.

திருகோணமலையைச் சேர்ந்த திரு சரவணமுத்துப் பிள்ளை என்பவர் 1895ல் 'மோகனங்கி' என்ற நாவலை எழுதினர் என்றும் இதுவே இலங்கையில் எழுதப்பட்ட முதல் நாவலென்றும் திரு செல்வராசன் குறிப்பிட்டார்.

பின்னர் 1902ல் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு தம்பி முத்துப்பிள்ளை என்பவரால் "அழகவல்லி" என்ற நாவல் எழுதப்பட்டதென்றும் இது இலங்கையின் இரண்டாவது நாவல் என்றும் திரு செல்வராசன் சொன்னர்.

மூன்றுவது நாவல் 1916ல் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு சி. வை. சின்னப்பிள்ளை என்பவரால் எழுதப்பட்டது என்றும் அவர் எழுதிய நாவலின் பெயர் 'சுந்தரம் செய்த தந்திரம் அல்லது விஜயசீலம்' என்றும் அவர் கூறினர்.

### சிங்கள இலக்கியமும் தமிழும்

திரு ந. சுப்பிரமணியம் 'சிங்கள இலக்கியமும் தமிழும்' என்ற பொருள்பற்றிப் பேசினர். அவர் சொன்னதாவது:

"சிங்கள இலக்கியம் என்பது பௌத்த இலக்கியம், பௌத்த இலக்கியத்தை வளர்க்கப் பாடுபட்ட மக்களில் தமிழர்களும் அடங்குவர் பௌத்த இலக்கியத்தை வளர்த்ததன்மூலமாக தமிழர்கள் சிங்கள இலக்கியத்திற்கு அழியாத சேவையைச் செய்திருக்கின்றனர்"

அவர் மேலும் பேசுகையில், இந்த நாட்டிலே தொன்றுதொட்டு தமிழ் மக்களும் சிங்களவரும் வாழ்ந்து வந்திருக்கிருர்கள் என்பதை மகாவம்சக் குறிப்புகள் மூலம் நிரூபித்ததுடன், இங்கு வந்து பௌத்தத்திற்கும் பாலி இலக்கியத்தின் மூலமாக சிங்களத்திற்கும் அரும் பெருஞ் சேவைபுரிந்த தமிழ்ப் பெரியார்களைப் பற்றியும் மகாவம்சம், தாதுவம்சம், தீபவம்சம்போன்ற நூல்களிலிருந்து ஆதாரங்கள் எடுத்துக்காட்டி ரஸமான தகவல்கள் தந்தார்.

கருத்தரங்கத்தின் தொடக்க நிகழ்ச்சியாகத் திரு இனுவைமாறனின் வரவேற்புரை நடைபெற்றது. முந்திய கருத்தரங்கத்தில் பேச்சாளர்கள் வெளியிட்ட கருத்துக்களின் திரட்டை அவர் கூடியிருந்தவர்களுக்கு அளித்ததோடு அனைவரையும் வரவேற்றும் பேசினர். முடிவில் சங்கத் தலைவர் திரு வில்லவன் நன்றியுரை கூறினர்.

## கொழும்பில் . . .

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

மாலையில் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும் என்று காட்சித் தயாரிப்பாளர் திரு. கே. பாலச்சந்திரன் அறிவித்திருக்கிருர்.



ஜுனுப் முஸ்தபா

கலை நிகழ்ச்சிகளுக்காக இலங்கை வர வழைக்கப்பட்டுள்ள கலைஞர்களின் விவரம் வருமாறு:-

(1) "சிவகெங்கை சீமை" புகழ் எம். கே. முஸ்தபா, (2) பாடகர் ஹுசேன்தீன் (3) பாடகி கே. எஸ். தனலட்சுமி (4) நடன மாது ராகினி (5) நகைச்சுவையாளர் ஜிப்பி—கொக்கோ. இந்த இவரும் ஒவ்வொரு வகையில் சினிமாவோடு சம்பந்தமுடையவர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கலை நிகழ்ச்சிகள் சினிமாப் பாணியில் உயர் தரமாக இருக்கும் என்றும் அதனுல் இலங்கை மக்களுக்கு பெறுமதி வாய்ந்த நல்ல கலை விருந்து அளிக்க வேண்டுமென்ற தமது குறிக்கோள் நிறைவேறும் என்றும் தாம் நம்புவதாகத் திரு. பாலச்சந்திரன் தெரிவித்தார்.

## இன்பக் கனவு

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

எஸ். ஏ. ஜோர்ஜ்வும் நினைவிலே இருக்கிருர். ஏனைய பாத்திரங்கள் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய அளவுக்கு இல்லை.

### ஒலி, ஒளி, மேக்அப்

ஒலி, ஒளி அமைப்புகளும் 'மேக் அப்'பும் திருப்தி. ஒரே நாளில்—தீபாவளித் தினத்தன்று—இரண்டு காட்சிகள் வைத்தார்கள். இன்னும் அப்படிப் பற்பல காட்சிகள் வைத்து மக்கள் ஆதரவை மென்மேலும் பெற மேலே சொன்ன சில குறைபாடுகள் களையப்படவேண்டும்.

— கே. கே. ஆர்.

## உமா—என் உமா

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

விட்டு தான் பிணமாகி விட்டாள்.

அன்று எங்களுடைய வீட்டுக்கு வந்தயமன் உமாவுடன் திரும்பிப் போகவில்லை. சில காலம் தங்கி இருந்து காமாட்சியையும் தொடர்ந்து சுப்பையாவையும் கூட்டிக் கொண்டு போய் விட்டான் அந்தக் கணகெட்ட காலன்.

உமாவே அந்தப் பெரிய கூட்டை விட்டு குழந்தையின் சிறிய கூட்டில் புகுந்து விட்டாள் என்று எனக்கொரு பிரமை. அதனுல் குழந்தைக்கும் உமா வென்றே பெயரிட்டேன்.

* * *

'வீல்' என்று கத்தினுள் உமா.

பால் போத்தலை எடுத்து உமாவின் வாயில் திணித்தேன். அவள் நாவால் அதை வெளியே தள்ளி விட்டுத் தொடர்ந்து கத்தினுள்.

நான் உமாவைத் தூக்கித் தோளில் போட்டுக்கொண்டு மன்னவடிக்கு வந்து—

என்னுடைய இறந்த காலம் கதையாய் கனவாய் காட்சி தந்தது. எதிர்காலமோ ஒரே பாழ் வெளியாய், வெறும் சூனியமாய் பெரும் கேள்விக் குறியாய் தோற்றம் தந்தது.

"உமா......! நீ என்னை எங்க வைத்து விட்டுப் போனது கூடப் பெரிதில்லை. ஆசைக்கு உன்னுடைய சின்ன உமாவைக் கொஞ்சி, அவளை உன்னுடைய மடியில் வைத்துப் பாலூட்டி, தலை வாரிப் பூச்சூடி பொட்டிட்டு பார்க்காமல் போய்விட்டாயே யம்மா........"

என்னுடைய கண்களிலிருந்து வழிந்தோடிய கண்ணீரை சிரித்துக் கொண்டே தன் சின்னக் கைகளால் துடைத்துவிட்டாள் என்னுடைய உமா—சின்ன உமா.

## கடவுளுக்கு . . .

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை. நான் அடிக்கடி போய் அவரை நச்சரித்தேன் நான் பல கடிதங்கள் எழுதி அவரைத் தொந்தரவு செய்தேன். கடைசியில் எனது புத்தகமும் வெளிவந்து நானும் இலக்கியம் வளர்த்த பெரும் பேறு பெற்றேன்.

—நாரதர்.

15-11-59.


கொழும்பில் 4-வது மாதமாக ஓடுகிறது!

கெயிட்டி (கொட்டாஞ்சேனை)

அதிக பணச் செலவில் தயாரிக்கப்பட்ட அதிஉன்னத படம்!

# வீரபாண்டிய கட்டபொம்மன்

டவர் (மருதானை)

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

எம். கே. தியாகராஜ பாகவதர் நடித்த

# அமரகவி

செல்லமஹால் திரையில்

4-வது வாரம்!

பி. எஸ். சரோஜா, டி. கே. பாலசந்திரன், ராகினி, சந்திரபாபு, ராஜசுலோசன நடித்த



# பாண்டித்தேவன்

3-வது வாரமாக காண்பிக்கப்படுகிறது!

முருகன் (ஜிந்துப்பிட்டி) ஓடியன் (கல்கிசை) ராணி (யாழ்ப்பாணம்) லிபர்ட்டி (பதுளை) ஆகிய தியேட்டர்களில்



# பாக்கிய தேவதை

தன் தங்கையின் நல வாழ்வுக்காக தன் வாழ்வை தியாகம் செய்தாள் நங்கை

ஜெமினி கணேசன், சாவித்திரி, நம்பியார், ராஜசுலோசன, கோபால் நடித்தது

பின்னணி: கண்டசாலா — திருச்சி லோகநாதன் — ஜமுனாராணி — சுசிலா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஔவை அமுதம்: 14

## கண்டொன்று சொல்லேல்

கண்ணால் நேரில் பார்த்ததை அல்லது மனத்தால் சரியெனக் கண்டதை மாறுபடுத்திப் பிறிதொன்று கூருதே என்பது இதற்குப் பொருள்.

கண்ணால் நேரில் கண்டதை நாம் அப்படியேசொல்ல வேண்டும். அதை மறைத்துப் பிறிதொன்று சொல்வது நேர்மைக்கு மாருனது. எமது உறவினர் அல்லது நண்பர் அல்லது எமக்கு மிகவும் வேண்டியவர் என்பதற்காக நாம் கண்டதை மறைத்து, திரித்துக் கூறக் கூடாது. அப்படிச் செய்வது பொய் சொல்வதாகும். பொய் எமக்குப் பாவத்தையும் பழியையும் கொண்டு வரும்.

பொய் சொல்லி ஒருவரைக் காக்க நினைப்பது தவறு. உண்மையில் ஒருவன் தவறுசெய்தால்அதற்கு அவன் தண்டனை அனுபவித்தே திர வேண்டும்—அது தான் இயற்கை நியதி.

ஒருவன் திருந்த வேண்டுமென்ற நல்ல எண்ணத்துடன் நாம் பொய் சொன்னலும் அது ஈற்றில் தீமையாக முடிந்துவிடுவதுண்டு. தண்டனை அனுபவியாத ஒருவன் திருந்துவது அருமை. தண்டனை பெற்ற ஒருவன் நிச்சயம் திருந்திவிடுவான்-சூடு கண்ட பூனை அடுப்பங்கரை நாடுமா?

எம் மனதில் சரியெனக் கண்டதை மறைத்துப்பேசக் கூடாது. பிறருக்காகப் பயந்தும், சிநேகம் கெட்டுவிடுமென்றும் எமது எண்ணத்தை வெளியிடாமல் மறைப்பதால் நாமடையும் பலன் எதுவுமில்லை. இப்படிச் செய்யும்போது எம்மையே நாம் ஏமாற்றிக் கொள்ளுகிறோம்.

கண்ணால் கண்டதையும் சரியென எண்ணியதையும் கொஞ்சமும் தயங்காமல் உறுதியுடன்வெளியிடவேண்டும். அதுதான் ஆண்மை, வீரம், பண்பு எல்லாம்.

"வினைத்திட்பம் என்பது
ஒவன் மனத் திட்பம்
மற்றைய எல்லாம் பிற."

—ஏ. ஜீ. ஆனந்தம்




# குறள் மொழி

"தாமரைத் தீவான்"

செந்தமிழ்ச் செல்வர்களே! செல்விகளே! நீங்கள் நந்தமிழ்ப் பெருநூலாம் திருக்குறளை நாளாந்தம் கசடறக் கற்று வருகிறீர்களா? "அதெல்லாம் கற்க நேரமேது?" என்று சிலர் சொல்லப்போகிறீர்கள்போற் தெரிகிறது? நேரமில்லை என்பது ஒப்புக்கொள்ள முடியாத ஒன்று. ஒரு மனிதன் ஒரு நாளில் எவ்வளவோ அரும்பெருங் காரியங்களைச் சாதித்து விடுகிறுன். நம்மால் இத் தேன் குறளைப் பயின்று முடிக்க வியலாதா? சொல்லவும் வெட்கமாகவுள்ளதே! "ஏன் அவ்விதம் குறளையே படிக்க வேண்டும்?" எனக் கேட்கிறீர்களா? நீங்கள் மற்றைய ஆயிரம் நூல்களைப் படிப்பதும் சரி. குறள் ஒன்றை முறையாய்ப் பயில்வதும் சரிதான். அதனுற்ருன் பயிலுமாறு கூறுகிறேன். கற்றுப்பாருமின்! உண்மை தெற்றென விளங்கும்.

பழந் தமிழாம் இளந் தமிழ் பேசும் பண்புள்ள தோழ தோழியர்காள்! இந் நூற்ருண்டில் தமிழர் என்னும் பெரும் பேறு பெற்றுப் பிறந்த நீங்கள், தனித் தமிழிற் தோன்றிய—எல்லாமுள்ள—எல்லோர்க்குமுரிய எப்போதும் வேண்டிய—என்றும் பொய்யாத—காலங்கடந்த-வள்ளுவரின் பெரும் புகழ் பரப்பும் ஒப்புயர்வற்ற உலகப் பொது நூலாம்திருக்குறளை இதுவரை பயிலாதிருந்தால் அது மன்னிக்க முடியாத மாபெருங் குற்றந்தான். அக் குற்றத்திற்குக் கழுவாய் தேடியே ஆக வேண்டும். எனவே இனியும் தாமதம் வேண்டாம்இன்றே பயிலத் தொடங்குங்கள். நாளாந்தம் முடிந்தவரை கசடறப் பயிலுங்கள். நினைவில் வையுங்கள். அவ்வாறே ஒழுகுங்கள். வாழ்வில் இன்பம் நிறைவதைக் காண்பீர்கள்.

காலத்தைப் பற்றிக்கொஞ்சம் கருதிப் பாருங்கள். இந நாளைய நமக்கு ஆயுள் அறுபதாண்டிலும் குறைவென்றே சொல்ல வேண்டும். அதில் துயிலினல் இருபதாண்டுகள் கழியலாம். இளமையிற் பத்தாண்டுகள் பாழாயின. முதுமையிலும் ஐந்தாவது அகலும்போலும்! நோய் கட்கும் ஒரு ஐந்தை ஒதுக்கிவிட்டு மீதியைப் பார்ப்போமாயின் இருபதாண்டுகள் கூட இரா. இச் சொற்ப காலத்துள் பார்ப்பனபார்க்க வேண்டும் கேட்பன கேட்க வேண்டும்-சுவைப்பன சுவைக்க வேண்டும்-முகர்வன முகர வேண்டும்-தொடுவன தொட வேண்டும்-படிப்பன படித்து அறிவன அறிய வேண்டும். போனகாலம் திரும்ப வராது. வருங்காலமும் உறுதியல்ல. நிகழ் காலம் நகர்ந்த வண்ணமேயுள்ளது. நாளை நடப்பதை நாமறியோம். எனவே எல்லோரும் போற்றுங்குறளினை நாமும் ஒரு முறையாவது படித்துப் பாராமல் இருக்கலாமா? இனிமேற் தவருது நீங்கள் எல்லோரும் குறள் படிப்பீர்கள் என உறுதியாய் நம்புகிறேன். அவ்விதம் படிக்குமாறு உங்கள் எல்லோரையும் தமிழ் அன்னையின் பேரால் அன்பாய் வேண்டிக் கொள்ளுகிறேன்.

இன்னுமொன்று கேளுங்கள்! குறளை அதிகாரம் அதிகாரமாய் மனனஞ் செய்யுங்கள். இரண்டாம் அதிகாரம் மழை என்று மனதில்இருத்த வேண்டும். ஒன்பதாம் அதிகாரம் விருந்து என்பது தெரிய வேண்டும். நாற்பதாம் அதிகாரம் என்றவுடன் கல்வி என்பது மனதில் வர வேண்டும். நூற்றிநான்காம் அதிகாரம் உழவு என்பதை மறத்தலாகாது. இவ்விதம் பாடம் பண்ணிவிட்டால் உலகிலுள்ள சகல காரியங்களையும் பிறர் அறியாமல் எவ்விடத்திலும் யாம் பேசிவிடலாம். "இரண்டும் இல்லாதாய் நாற்றிநான்கு நடக்கவில்லை. ஒன்பது எப்படிக் கிடைக்கும்? இந் நிலையில் நாற்பதை என்ன செய்வது?" என்று கூறும்போது, "மழை இல்லாததால் உழவு நடைபெற வில்லை. விருந்து எப்படிக் கிடைக்கும்? இந் நிலையில் கல்வியை என்ன செய்வது?" என்ற பொருள் படுகின்றதல்லவா? இது தான் புது மொழியான குறள் மொழி. எப்படி? நல்ல சுவையாகப் பேசலாமல்லவா? பாடமாக்கிப் பேசிப் பாருங்கள். (ஒருவர்க்கொருவர் கடிதங்களிலும் எழுதலாம்.) எல்லா அதிகாரங்களையும் மனனஞ் செய்வது உங்களுக்கு இன்னலாய்த் தெரியும். முககியமானவற்றை இங்கே தருகின்றேன். சுலபமாய்ப் பயின்று-பேசி-இன்புறுங்கள்.

2. மழை, 6. மனைவி, 7. மக்கள், 8. அன்பு, 9.விருந்து, 10. இனியவை கூறல், 11. நன்றியறிதல், 12. நடுநிலைமை, 13. அடக்கம், 14. ஒழுக்கம், 16. பொறுமை, 23. ஈகை, 24. புகழ், 26. புலால் நீக்கல், 27. தவம், 29. களவெடாமை, 30. உண்மை, 31. கோபியாமை, 33. கொல்லாமை, 39. அரசு 40. கல்வி, 42. கேள்வி, 53. சுற்றந்தழுவல், 54. மறவாமை, 55. நல்லாட்சி, 61. சோம்பல் இல்லாமை, 64. அமைச்சு, 65.சொல்வன்மை, 69. தூது, 71. குறிப்பறிதல், 74. நாடு, 77. படை, 79. நட்பு, 93. கள்ளுண்ணுமை, 94. சூது, 95. மருந்து, 97, மானம், 100, பண்பு, 104. உழவு, 105. வறுமை, 106. இரத்தல்.

## "வெள்ளம்"

வானவெளிதனிலே—மேகக்கூட்டம்
கறுத்துப் பெருகிடவே
மின்னலும், வெட்டையிலே—மழையும்
'சோ'வென்று பெய்யுதடி

மேட்டு நிலத்தினிலே—பெய்தமழை
வடிந்தும் வந்திடவே
தாழ்ந்த தரையினிலே—ஒன்றுகி
வெள்ளமாய்ப் பாயுதடி

வெள்ளமும் பாய்கையிலே—கலங்கிநீர்
செந்நிறமாகிடவே
இன்பமும் பொங்கையிலே—மீனினம்
துள்ளியே பாயுதடி

தூண்டிலும் போடுகையில்—மீனினம்
கௌவிப் பிடித்திடவே
சுண்டி இழுக்கையிலே—இருலொன்று
தரையில் விழுகுதடி

பொழுதும் விடிகையிலே—பெருவெள்ளம்
வற்றி வடிந்திடவே
அழகிய சோலையிலே—மரங்கள்
பெயர்ந்து கிடக்குதடி

—மு. கனகராஜா

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் லகாண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

### வளர்மதி

### சுதந்திரன் மாணவர் மன்றம்

அங்கத்தவர் மனுப்பத்திரம்

இல. 7.

பெயர்.................................................................

பாடசாலை.............................................................

விலாசம்...............................................................

.........................................................

................................ ................................
பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம் கையொப்பம்

## வானத்திற் சுடர்விடும் வளர்மதியே...

நீலவானிலே நீந்தி விளையாடும் வளர்மதியே கேள்! நீயோ! வானத்திலே சுடர் விடுகின்ருய்! வையஇருளையகற்றி ஒளியாக்குகின்ருய்! ஆனல், உன்னையும் மிஞ்சி அறிவாகிய செந்தமிழ்த் தேன் நிலவைப் பொழிகிறது எங்கள் வளர்மதி! ஆம் நீ ஆச்சரியப் படுவாய்! அமெரிக்க, ருஷிய நாட்டு விஞ்ஞானிகள் கூட எவ்வளவோ பணத்தையும்,காலத்தையும், விஞ்ஞானிகளையும் விரையமாக்கிச் சந்திர மண்டல யாத்திரை செய்தும், என்னை மிஞ்சக் கூடிய—சமனை ஒரு செய்மதியைச் செய்ய முடியவில்லை. ஆனல், இந்த மாணவன் இப்படிக் கூறுகிருனே என்று! நண்பர்கள் அப்படி நினைக்க மாட்டீர்களே!

நான் குறிப்பிடுவது வானத்தை வலம் வர அனுப்பப் போகும் செயற்கைச் சந்திரன்களைப் பற்றியல்ல; "சுதந்திரன் செந்தமிழ் ஏட்டிலே சுடர் விடும் பாலர்மன்றமான 'வளர்மதி'யைத்தான்!"

கன்னித்தமிழ் சொட்டும் கருத்துக் குவியல்களையும், கண்ணையும், கருத்தையும் கவரும் சொட்டுந்தேன் தமிழ்க் கட்டுரைகளையும் சிரித்துச் சிரித்துப் புரிந்து கொள்ளக் கூடிய சிறுகதைகளையும் மட்டுமல்ல; பொழியும் எமது வளர்மதி!

நல்லவற்றை நவிலும் மாமாவின் பொன் மொழிகள் சுடர்விட்டுப் பிரகாசிக்கும். வாரித்தேன் சொரியும் வண்ண வண்ணச் சிறு கவிதைகள் சிதறிக்கிடக்கும். வண்ண ஒளிபரப்பும் வளர்மதிக் கதிர்களான மருமக்கள் பெயர்கள் மலர்ந்து மயல் கொள்ளக் கிடக்கும் 'டிக்'.........எனும் நிமிடக் கதைகள் நிரம்பிய ஒளி வீசும்! இப்படி எத்தனை எத்தனையோ சுடர்க் கதிர்களைப் பரப்பும் 'சுதந்திரன்' வளர்மதி, வானத்திற் சுடர் விடும் வளர்மதியை விட அறிவு நிலவை அள்ளி வீசுகிற தென்ருல் மிகையல்லவே!

அமுதைப் பொழியும் வளர்மதியின் நிலவு ஒரு சொற்ப பகுதியினருக்கே இன்பத்தை ஊட்டும். இனிமையைச் சுரக்கும் ஆனல், சுதந்திரனிற் சுடர் விடும் வளர்மதியின் அறிவு ஒளியைக் கன்னித் தமிழ் மக்களெல்லாம் கருத்தொருமித்துப் படிக்கின்றனர். சுவைக்கின்றனர். வாழ்க வளர்மதி!

—சித்தாண்டிச் சபா

## மூன்று நண்பர்கள்

பள்ளிக்கூடத்தில் இடைவேளை. எல்லா சிறுவர்களும் சிறுமிகளும் சிற்றுண்டி அருந்திக்கொண்டிருந்த போது விக்டர் மாத்திரம் தனியாக அறையின் மூலையில் நின்றுகொண்டிருந்தான்.

"நீ ஏன் சாப்பிடவில்லை?" என்று கேட்டான் கோல்யா.

"நான் கொண்டுவந்த சிற்றுண்டி எங்கேயோ தொலைந்து விட்டது..."

"ரொம்ப மோசம். மாலை வரையிலும் எப்படித்தான் பசியைப் பொறுத்துக் கொண்டிருப்பாயோ" என்று சொல்லிவிட்டு வாய் நிறைய ரொட்டியைக் கடித்துக் கொண்டான் கோல்யா.

"எங்கே தொலைத்து விட்டாய்?" என்று விக்டரிடம் மிஷா கேட்டான்.

"எனக்குத் தெரியாது" என்று சொல்லிவிட்டு வேறு பக்கம் திரும்பிக் கொண்டான் விக்டர்.

"பையில் வைக்காமல் சட்டை ஜேபியில் வைத்துக் கொண்டிருப்பாய். அதனுல் தான் எங்கோ விழுந்து விட்டது" என்ருன் மிஷா.

மூன்ருவது சிறுவன் வலோத்யா எந்தக் கேள்வியும் கேட்கவில்லை. தன்னுடைய சிற்றுண்டியை இரண்டாகப் பிரித்தான். விக்டரிடம் சென்று "இந்தா இதை வாங்கிக்கோ, சாப்பிடு!" என்ருன் வலோத்யா.

—வி. அசெயேவா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

### புங்குடுதீவில் நூல் நிலையம்

"வீட்டுக்கொரு நூல் நிலையம் வெளிநாடுகளிலே உண்டு. இங்கு நாட்டுக்கொரு நூல் நிலையம்கூட இல்லையே இதைப்பற்றி நம்முள் யார் கவலைப்படுகிறோம்?"

புங்குடுதீவு இளைஞர் கழகத் தலைவர் திரு வே. க. சோமசுந்தரம் கழக மண்டபத்தில் சமீபத்தில் நடந்தேறிய அதன் நிர்வாக சபைக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கிப் பேசும்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் அவர் கூறியதாவது:- "நமக்காகவே நாம்" என்ற எண்ணத்தோடு கூடிய சுயநல வாழ்க்கை முறையை நாம் ஏற்றுக்கொண்டோம். அடுத்த வீட்டுக்காரனையோ அயலானையோபற்றிச் சிந்திக்கும் நினைவு நம்மிடம் சிதைந்துவிட்டது. இரும்புப் பெட்டியிலே பணத்தைப் படைக்கும் இறைவன் இதயத்திலே ஈரத்தைப் படைக்க மறந்துவிடுகிறான். "நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்—நிதிகுறைந்தவர் காசுகள் தாரீர்" என்ற வரிகளை நினைவுபடுத்த நான் விரும்புகின்றேன்"

பகிரங்க நூல் நிலையமொன்றை இளைஞர் கழக மண்டபத்தில் திறந்து வைப்பதென்றும், அதற்குத் தேவைப்படும் ரூபா மூவாயிரத்தை வெளியூர்ப் பிரமுகர்களிடத்திலும்-நாடகமொன்றைப் புங்குடுதீவில் நடாத்தி-நிதி வசூல் செய்வதின்மூலமும், திரட்டுவதென ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

### செந்தமிழ் வளர்ச்சி மன்றம்

செந்தமிழ் வளர்ச்சி மன்றக் கூட்டம் சென்ற 1-11-59ல் கிரிலப்பனை கத்தோலிக்க தமிழ் பாடசாலை மண்டபத்தில் கூடியது. செயலாளரால் கடந்த கூட்ட அறிக்கையும், பொருளாளரால் வரவு செலவு அறிக்கையும் சமாப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டன. பல முக்கிய விஷயங்கள் ஆராயப்பட்ட பின்னர் கீழ்க்கண்டவர்கள் புதிய நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்:-

தலைவர்: எஸ் அன்ரனி பெர்னன்டோ, செயலாளர்: அ. டேவிற் இராசையா, துணைச் செயலாளர்: மணிமாறன், பொருளாளர்: இரா தமிழ்ச் செல்வன், செயற் குழுவினர்களாக எஸ். அன்ரனி பெர்னன்டோ, அ. டேவிற் இராசையா, மணிமாறன், இரா. தமிழ்ச்செல்வன், சலமோன் முதலியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

### திருவள்ளுவர் பாடசாலை

திருவள்ளுவர் பாடசாலை மாணவர் தேர்ச்சி சங்கத்தின் வாராந்திரக் கூட்டம் கடந்த 30-10-59ல் தலைமை ஆசிரியர் திரு எஸ். சங்கர் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் மாணவர்கள் நகர வாழ்க்கை நல்லதா? அல்லது கிராம வாழ்க்கை நல்லதா என்னும் பொருள் பற்றி ஒரு சொற்போர் நடத்தினர். அதில் நகர வாழ்க்கை நல்லது என்று செல்வர்கள் சிவலிங்கம், சொக்கலிங்கம், ராமன் ஆகியோரும் 'கிராம வாழ்க்கை' நல்லது என்று செல்வர்கள் நீலகண்டன், இராமகிருஷ்ணன், ஷார்து ராஜ் ஆகியோரும் பேசினர், முடிவில் 'கிராம வாழ்க்கை' நல்லது என்று பேசிய மாணவர்கள் அதிகமாக 2 புள்ளிகள் எடுத்து வெற்றிபெற்றனர். பார்வையாளராக வந்திருந்த இ. தி. மு. க. பொரளை கிளையின் செயலாளர் எஸ் சண்முகநாதன் "மாணவரும் சங்கமும்" என்ற பொருள்பற்றி ஒரு சொற்பொழிவாற்றினர்.

### 'இளந் தமிழர்' இயக்கம்

'இளந் தமிழர்' இயக்க செயற்குழுக் கூட்டம் சென்ற 1-11-59ல் இயக்க அலுவலகத்தில் நடைபெற்றது. இணைச் செயலாளர்களில் ஒருவராகிய திரு இ. வி. சாமி வேலையின் காரணமாக விலகியதையொட்டி புதிய செயலாளராக திரு க. மகேந்திரன் தெரிவு செய்யப்பட்டார். நிர்வாகத்தினைப் பகிர்ந்து பொறுப்பேற்க வேண்டுமெனவும், ஊக்கத்துடன் இயக்கம் பணியாற்ற வேண்டுமெனவும் தலைவர் தெரிவித்த ஆலோசனையின் பேரில் ஓர் அமைச்சரவை நிறுவப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு:-

பிரதம மந்திரி: இயக்கத் தலைவர், அரசாங்கப் பிரதம கொறடா: திரு நா. தேவன், பிரச்சார அமைச்சர்: திரு இ. ஸ்ரீதரன், இயக்க விஸ்தரிப்பு அமைச்சர்: திரு க. மகேந்திரன், நிதியமைச்சர்: திரு இ. பாலேந்திரன், நிதி வஸ்தரிப்பு அமைச்கர்: திரு ரி. சிதம்பரநாதன், எழுத்துவினை அமைச்சர்: திரு செ. யோகநாதன், கட்டுப்பாட்டு அமைச்சர்: திரு அ ம இராசநாயகம்.

இயக்கத்தின் கட்டுப்பாட்டினைப் பலப்படுத்தும் முகமாக, இயக்கத்திற்கென ஒரு கொடியும், இலட்சினையுண்டையும் தெரிவுசெய்யப்பட்டன. 'எல்லாத் தமிழியக்க'த்திறகு ஆதரவு தெரிவித்தும் கருத்துக்கள் பரிமாறப்பட்டன. விசேஷ அழைப்பின்பேரில் வந்திருந்த காயபாளர்களில் ஒருவராகிய ஆசிரியர் திரு நாகலிங்கம் (பண்டிதர்) வேண்டிய ஆலோசனைகளை வழங்கினார்.

### அச்சுவேலி பொழுதுபோக்குச் சங்கம்

அச்சுவேலி பொழுது போக்குச் சங்கம் என்னும் ஸ்தாபனத்தை அச்சுவேலி வாலிபர்கள் பலர் அணிமையில் நிறுவினர்.

மேற்படி சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் சென்ற 23-10-59ல் அச்சுவேலியிலுள்ள "அன்னபவன"த்தில் திரு ந. சிவபாதம் தலைமையில் நடைபெற்றது.

வாலிபர்கள் தமது நேரத்தை வீண் வார்த்தைகள் பேசிக் கழிப்பதைவிட்டு ஓய்வு நேரத்தில் உடலுக்குப் பயிற்சியளிப்பதே சிறந்ததென்றும், ஓய்வு நேரத்தை நல்ல முறையில் கழிப்பதற்கு அச்சுவேலியில் ஒரு ஸ்தாபனம் இல்லாமல் இருப்பது பெருங்குறையென்றும், இந்தக் குறையைப் போக்கி வாலிபர்களைப் பல துறைகளிலும் முயற்சியுடையவர்களாக இருப்பதற்கு ஒரு பொழுதுபோக்கு ஸ்தாபனத்தை நிறுவுவது அவசியமெனவும் அதற்கு வாலிபர் ஒற்றுமையாக இயங்க வேண்டுமென்றும் தலைவர் தமது தலைமையுரையில் குறிப்பிட்டார்.

திருவாளர்கள் கே. குழந்தைவேலு, சி. சின்னத்துரை எனபோரும் பேச[illegible] னர் நடைபெற்ற[illegible] கஸ்தர்கள் தெரிவில் கீழ்க்கண்டோர் தெரிவு செய்யப்பட்டனர்:—

தலைவர்: திரு சி. சின்னத்துரை, உபதலைவர்: திரு சே. இராசரத்தினம், காரியதரிசி: திரு கே. குழந்தைவேலு, உபகாரியதரிசி: திரு க. தனபாலசிங்கம், தனாதிகாரி: திரு ந. சிவபாதம். திருவாளர்கள் வி செல்வராசா, பொ. கிருஷ்ணலிங்கம், க. பரராசசிங்கம், ஆ. செல்வநாயகம் என்போர் நிர்வாக சபை அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

### கோணேசர் ஆலயத்தை புனித ஸ்தலமாக்குக

"கிழக்கு மாகாண மக்களின் மதிப்புக்குரியதும் பாடல் பெற்றதும் 5[illegible] வருடங்களுக்கு முன்னிருந்தே இந்து மக்களின் பெருமதிப்புக்குரியதுமான திருமலை கோணேசர் ஆலயத்தை அரசாங்கம் புனிதஸ்தலமாக பிரகடனப்படுத்துவதில் ஆட்சேபனையின்றி செய்வது கண்ணியமானது"

இவ்வாறு கட்டைபறிச்சான் கிராமச் சங்கக் கூட்டத்தில் அதன் தலைவர் திரு சு குணநாயகம் கோணேசர் ஆலய பிரேரணையை விளக்குபோது குறிப்பிட்டார்.

மேலும் தொடர்ந்து பேசுகையில் அவர் கூறியதாவது:- ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் யுத்த நெருக்கடியான சந்தர்ப்பத்திலும்கூட ஐக்கிய நாட்டுச் சபையின் புனித உரிமை சாசனத்தில் அடங்கியுள்ள வழிபாட்டுரிமையை மதிக்குமுகமாக இந்துக்களின் வணக்கத்துக்கு இவ்வாலயம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இவ்வாலயக் கோட்டைக்குள்ளே அடங்கிய கட்டடங்களை வேறு உபயோகங்களுக்காக உபயோகிக்க அரசாங்கம் உத்தேசித்திருப்பது பெரும் தவறானதும் வருந்தத்தக்கதுமாகும்.

# திருக்கோயில்களில்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

"திரு" வையே ஆட்சிமொழியாகியுள்ள இக் காலத்திற் கையாள வேணடுமென இக்குழு கேட்டுக்கொள்கின்றது.

### தமிழ்ச் சங்கங்களுக்கு ஒப்புதல்

உள் நாட்டிலும், வெளிநாடுகளிலும் சிலர் வைத்திருக்கின்ற தமிழ்ச் சங்கங்களை எண்ணிக்கையிட்டு அவற்றின் செயல் முறைகளை ஆராய்ந்து அறிந்து அவற்றுள் தமிழ்த் தொண்டு செய்யும் தமிழ்ச் சங்கங்களுக்கு மட்டும் ஒப்புதல் அளிப்பதென்று இக்குழு முடிவுசெய்கிறது.

### வித்துவான்கள் புலவர்கள் நியமனம்

தமிழகக் கோயில்களின் ஆட்சியாளர்களாகவும் ஆணையாளர்களாகவும் பள்ளியிறுதித் தேர்வுடன் வித்துவான் புலவர் பட்டம் பெற்றவர்களையும் நியமிக்குமாறு அற நிலையப் பாதுகாப்புத் துறையினரை இக்குழு கேட்டுக்கொள்கிறது.

### தமிழ்ப் பெயர்கள்

தமிழகக் கோயில்களின் இடத்தின் பெயர்களுக்கும், இறைவன் பெயர்களுக்கும் முன்பிருந்த தமிழ்ப் பெயர்களையே வழங்கும்படி அரசினரை இக்குழு கேட்டுக் கொள்கிறது.

### பட்டங்கள்

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் தமிழ் பி. ஏ. ஆனர்ஸ், எம். ஏ. எம். லிட்., எம். ஓ. எல். ஆகிய பட்டங்களை ஆராய்ச்சிக்குப் பதிவு செய்து கொள்வதில், சென்னைப் பல்கலைக் கழகம் வழங்கும் பட்டங்களோடு ஒப்பாக மதிக்கும்படிச் சென்னை, அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களை இக்குழு கேட்டுக் கொள்கிறது.

### மொழி பெயர்ப்பு

தமிழில் உள்ள தொகை நூல்களை ஆங்கிலம் முதலிய பிற மொழிகளில் மொழி பெயர்ப்பதற்கு ஆவன செய்வதென்று இக்குழு முடிவு செய்கிறது.

### புலவர்க்குச் சிறப்பு

தமிழகத்திலும், தில்லியிலும் கொண்டாடப்பெறும் விடுதலை நாள் விழாக்களில் தமிழ்ப் புலவர்கட்கும் மற்றவரையொப்பச் சிறப்புச் செய்ய வேண்டும் என இந்தியப் பேரரசை இக்குழு கேட்டுக் கொள்கிறது.

### சென்னை எழுத்தாளர் சங்கம்

தமிழை விரும்பாதாரும் தனித் தமிழில் எழுதத்தெரியாதாரும் ஆகிய சிலர் மறைமலை அடிகளைப் போன்ற தமிழ்ப் புலவர் பெருமக்களை ஏளனம் செய்துவர இடந்தரும் சென்னை எழுத்தாளர் சங்கம்போன்ற சங்கங்களின் செயல்களைக் கண்டிப்பதோடு அவைகட்குச் சென்னை அரசோ இந்தியப் பேரரசோ எவ்வகையான ஆதரவும் தருதல் கூடாது என்று இக்குழு கேட்டுக் கொள்கிறது.

### இந்தித் திணிப்பு

அனைத்திந்திய அரசமைப்பு என்ற பெயரால் இந்தி, வட மொழிச் சொற்களைப் புகுத்தித் தமிழ் மொழிக்குத் தீங்கிழைத்து வரும் செய்கையைக் கண்டு இக்குழு வருந்துவதோடு இனித் திருத்திக் கொள்ளுமாறு இந்தியப் பேரரசைக் கேட்டுக்கொள்ளுகிறது.

### 'ஆகாஷ்வாணி'

முதலமைச்சர் திரு. பண்டித நேரு அவர்களின் உறுதி மொழியினைக் கண்டும் "ஆகாஷ்வாணியை" "வானொலி நிலையம்" என அரசாங்கம் மாற்றாதது கண்டு இக்குழு வருத்தம் தெரிவித்துக்கொள்கிறது.

### அஞ்சல் தலைகளில் திருவள்ளுவர் உருவம

இந்தியப் பேரரசு அஞ்சல் தலைகளில் திருவள்ளுவர் உருவம் பொறிக்க இசைந்தமைக்கு இக்குழு பாராட்டுவதோடு உருவம் அமைக்கும் பொழுது இக்குழுவைக் கலந்து அமைப்பது நல்லது எனவும் தெரிவித்துக்கொள்ளுகிறது.

### எழுத்தாளர் மாநாடு

அனைத்திந்திய எழுத்தாளர் மாநாட்டைத் தமிழ்ப் பெருமக்களைக் கலவாமல் ஏற்பாடுசெய்தது தவறு என்று இக்குழு வருத்தத்தைத தெரிவித்துக் கொள்கிறது.

### செயற்குழு உறுப்பினர்கள்

அடுத்த ஆண்டிற்கு அடியிற் கண்டவர்களைச் செயற்குழு உறுப்பினர்களாக இக்குழு தேர்ந்தெடுத்திருக்கிறது.

தலைவர்: டாக்டர் சோமசுந்தர பாரதியார். செயலாளர்: தஞ்சை ந. இராமநாதன், பொருளாளர்: கி. ஆ. பெ. விசுவநாதம், உறுப்பினர்கள்: பூ. ஆலாலசுந்தரம் செட்டியார், மெ. வி. வேணுகோபால் பிள்ளை, இ. மு. சுப்பிரமணியபிள்ளை.

தமிழகப் புலவர் குழுவில் டாக்டர்கள் எழுவர், பல்கலைஞர் எழுவர், தமிழ் எம். பி. க்கள் எழுவர், வித்துவான்கள் எழுவர், மரபுவழிப் புலவர் எழுவர், பண்டிதர்கள் ஐவர், கல்லூரிச் சார்பாளர்கள் ஒன்பதின்மர் ஆக மொத்தம் 49 பேர் அங்கம் வகிக்கிறார்கள். மற்றும் திருச்சி தமிழறிஞர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் குழுவின் பொருளாளராகப் பணி புரிகிறார்.

# சீனத்துப்பட்டுக்கு

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வெட்டுகளும், வெல்வெட் புட்டாக்கள் போட்ட ஜார்ஜெட்டுகளும் உலக மார்க்கெட்டுகளில் தன்னிகரற்றவையாகத் திகழ்கின்றன.

### கோடை உடை

துஸாஉற் பட்டு சாதாரணப் பட்டைவிட கனமானதுஎன்பதும், அதற்கேவுரித்தான பளபளப்பையும் பெற்றுள்ளது. இது கோடையில் உடுப்பதற்கு இலட்சிய ஆடையாகும். இந்தப் பட்டாடை வியர்வையை உறிஞ்சிக் கொள்வதுடன், உஷ்ணத்திற்கும் அமிலங்கள், அல்கலிக் காரங்கள் முதலியவற்றிற்கும் நல்ல தடுப்பாகவும் விளங்குகின்றது. ஷாண்டுங், ஆண்டுங் பட்டாடைகளும் துஸாஉற் பட்டு வகையைச் சேர்ந்தவையே. இவை வெகுகாலமாகவே மார்க்கெட்டில் மிகவும் புகழ்வாய்ந்தவையாக விளங்கி வருகின்றன.

### புதிய ரகங்கள்

இவ்வாறு பட்டு நெசவுத் தொழில், கூடுதலான உற்பத்தி அளவுகளை சாதித்து வருவடன், தமது உற்பத்திப் பண்டங்களின் டிசைன்களையும் ரகங்களையும் மென்மேலும் அபிவிருத்தி செய்தும் விரிவுபடுத்தியும் வரு[illegible] உடுப்பதற்கான புகழ் வாய்ந்த சீனப் பட்டாடைகள், முன்புபோலவே மிகவும் சன்னமாகவும், அழகாகவும் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. இந்தப்பட்டாடை வகைகளில் ஏராளமான புதிய ரகங்களும் இப்பொழுது தயாரிக்கப்பட்டு வருகின்றன. பட்டுத் துணிகள், மின்சாரத் தடுப்பன் உறைகளும், மீன் வலைகளும், சல்லடைகளும் தயாரிப்பதற்கும் கூட பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

### வளர்ச்சி

இவ்வாறு தொழில் துறைக்காகவும் பட்டுகள் பயன்படுத்தப்படுவதிலிருந்து, தொன்மை வாய்ந்த பட்டு நெசவுத் தொழிலானது, இப்பொழுது நவசீனவில் எவ்வளவு சுறுசுறுப்பாக இயங்கி வருகிறது என்பதைக் காணலாம். மூலப் பொருள் ஸ்தலங்களுக்கு அருகாமையிலுள்ள கோடான் (சிங்கியாங்), ஜெப்போ (ஷாண்டுங்), சன்யி (க்வீசௌ) ஆகிய இடங்களில் இப்பொழுது புதிதாகத் திறக்கப்பட்டுள்ள நவீன பட்டு நெசவு ஆலைகளும் இத்தொழிலை முன்னேற்றத்திற்கு அத்தாட்சிகளாகும். இவையன்றி, கியாங்குவிலுள்ள சூசௌவிலும் புகியனிலுள்ள பூசௌவிலும் புதிதாக பட்டுப் பூச்சி வளர்ப்புக் கேந்திரங்கள் திறக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5-வது மனோகரமான வாரம்!

## கிங்ஸ்லி பிளாஸா நவா

## வெலிங்டன் விஜயா வெம்பிளி

(யாழ்ப்பாணம்) (மட்டக்களப்பு) (கண்டி)

## ஸ்ரீகிருஷ்ணா மொடர்ன் லக்ஷ்மி

(திருகோணமலை) (பதுளை) (ரத்தினபுரி)

## விஜிதா நியூசினிமா சரசாவி

(மஸ்கேலியா) (குருநாகல்) (அக்கரபத்தன)

## தீவொளி ஜெமினி

(நுவரெலியா) (பொகவந்தலாவை)

ஆகிய தியேட்டர்களில்




ஆசைக்காக வாழாமல் கடமைக்காக வாழ்பவள்-பெண்

அந்தப் பெண்குலத்தில் பிறந்துவிட்ட -வசந்தி

பெண்மைக்கே உயர்வு கற்பிக்கிறள்

# வீனஸ் பிக்சர்ஸ்

# கல்யாண பரிசு

சங்கீதம் - A.M. ராஜா
காமரா - வின்சென்ட்
ஆர்ட் - கங்கா

எடிட்டிங் - N.M. சங்கர்
ஸ்டூடியோ - விஜயா வாஹினி

கதை வசனம் டைரக்ஷன் ஸ்ரீதர்

உள்ளத்தைத் தொடும் கதைமட்டுமல்ல நெஞ்சையே கொள்ளை கொள்ளும் -காதல்

குலுங்க குலுங்க சிரிக்க வைக்கும் -ஹாஸ்யம்




## பார்த்துப் பார்த்து அனுபவிக்க வேண்டிய படம்!

## புதுமையான கதைப்போக்கு! அருமையான வசனம்!!

வில்லனேயில்லாமல் விறுவிறுப்பான கட்டங்கள் சம்பவங்கள் நிறைந்தது!

## இன்றே பாருங்கள்!!!

## ஜெமினி கணேசன், சரோஜாதேவி, விஜயகுமாரி, நாகேஸ்வரராவ், தங்கவேலு, நம்பியார்

நடித்தது.

பின்னணி பாடியவர்கள்:

ஏ. எம். ராஜா-ஜிக்கி-பி. சுசீலா-ஜமுனாராணி

கதை-வசனம்-டைரக்ஷன்:

## ஸ்ரீதர்

சங்கீதம்:

## ஏ. எம். ராஜா

இப் பத்திரிகை கொழும்பு தட்டாரதெரு, 196-ம் இலக்கத்தில் வசிக்கும் எஸ். [illegible] அவர்களால் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் சார்பாக தட்டாரதெரு, சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து 1959 நவம்பர் மாதம் 15-ம் திகதி பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org